நவம்பர் 07 - நவம்பர் 13, 2010 November 07 - November 13, 2010 பக்கங்கள் - 28 25.00

REGISTERED AS A NEWS PAPER IN SRILANKA

# சுடர் ஒளி

THE SUDAROLI

வாரமலர்



## என் பிள்ளைகள் வருவார்களா?

## இந்தியத் திட்டங்கள்; தேக்கநிலை நீங்குமா?

# ஆனையிறவு உப்பளத்தின் கதி என்ன

# ஆனையிறவு உப்பளத்தின் கதி என்ன?



அருள் மனோகரன்

"கடலால் சூழப்பட்ட இலங்கைத் தீவு ரின் மீனை இறக்குமதி செய்கிறது" என்று ஒரு தடவை சிரித்திரன் சுந்தர் குறிப்பிட்டிருந்தார்.

தானாகவே உப்பு விளையும் வட பகுதிக்கு, இப்போது வெளியிடங்களில் இருந்தே உப்பு வருகிறது. அதுவும் இலங்கையிலேயே புகழ் பெற்ற ஆனையிறவு உப்பளம் கவனிப்பாரற்றுக் கைவிடப்பட்டிருக்கிறது. ஆனையிறவு உப்பளத்தின் தலைமையகம் இருந்த இடம், தற்போது சிங்கள மக்களுக்கான சுற்றுலா மையமாக்கப்பட்டுள்ளது. அங்கே மிகப் பெரியதொரு உணவு விடுதியையும் கட்டியிருக்கிறார்கள்.

ஆண்டுக்கு 70 ஆயிரம் மெற்றிக் தொன் உப்பை உற்பத்தி செய்தது ஆனையிறவு உப்பளம். இதைவிட குறிஞ்சாத்தீவு உப்பளத்தின் உப்பு வேறு. ஒரு காலத்தில்- 20 ஆண்டுகளுக்கு முன்னர், இந்த உப்பளங்களில் இருந்து வெளி நாடுகளுக்கே உப்பு ஏற்றுமதி செய்யப்பட்டது.

ஆயிரக் கணக்கான தொழிலாளர்கள் இங்கே வேலை செய்தார்கள். உப்பு ஏற்றுமதியின்போது இன்னும் அதிகமானோருக்கு வேலைவாய்ப்புக்கள் கிடைத்தன. பல நூற்றுக் கணக்கான வாகனங்கள் ஏற்றுமதிக்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டன.

இயக்கச்சி, மாசார், முகாவில், மிருசுவில் பளை, சங்கத்தார்வயல், கோவில்வயல், தட்டுவன் கொட்டி, கரவெட்டி, நெல்லியடி, துன்னாலை, ஆனையிறவு, உமையாள்புரம், பரந்தன், கிளிநொச்சி, முரசுமோட்டை, குமரபுரம் போன்ற இடங்களில் இருந்தெல்லாம் பலர் வேலை செய்தனர். உற்பத்திச் சீசனில் உடப்பு, முந்தல், புத்தளம் போன்ற இடங்களில் இருந்தும் வேலைக்கு ஆட்கள் வருவார்கள்.

அதிக செலவில்லாத உற்பத்தி மையம் இந்த உப்பளம். அதே சமயம் அதிக வருவாயைத் தரக்கூடியது. அத்துடன் இயற்கை உற்பத்தி மையம் இது.

ஆகவே, அதிக வருவாயைத் தரக்கூடியது. பலருக்கு வேலைவாய்ப்பைத் தரக்கூடியது. சூழல் பாதிப்பில்லாதது. இயற்கை வளப் பிரயோகத்தையுடையது இந்த உப்பு உற்பத்தி மையம்.

ஆனால், இன்று இவையெல்லாம் புறக்கணிக்கப்பட்டு வெறும் தரிசாகவே கைவிடப்பட்டிருக்கின்றன. இலங்கையின் அரசியலில் உன்னதமானதாகச் சிலாகித்துக் கூறப்படும் மகிந்த சிந்தனையில் இதுதான் நிலைமை.

நாட்டில் வேலைவாய்ப்புப் பிரச்சினைகள் இன்று மிகப் பெரிய பிரச்சினையாக உருவாகியுள்ளன. போரின் போது பல லட்சம் இளைஞர்களின் வேலைவாய்ப்பைப் படைத்துறை வழங்கியது. இப்போது அந்த படைத் துறையில் உள்ளவர்களுக்கே வேலையில்லை. இந்நிலையில், நாட்டிலுள்ள பல தொழில் மையங்கள் மூடப் பட்டுள்ளன. குறிப்பாக வடபகுதியின் தொழிற் துறை இன்னும் சீரடையவில்லை. போர் முடிந்து ஒன்றரை ஆண்டு கழிந்துவிட்டது. அரசாங்கம் அபிவிருத்தி அரசியலைப் பற்றி பேசுகின்றது. ஆனால், நாடு குறைவிருத்தி நிலையிலேயே தேங்கிக் கிடக்கிறது.

இலங்கை போன்ற பல்சமூக நாடுகளில் சமூகங்களுக்கிடையே உறவுகளைச் சீரமைப்பதிலும் விருத்தி செய்வதிலுமே அபிவிருத்தி தங்கியுள்ளது. முரண்பாட்டு நிலைகள் ஒருபோதும் நாட்டின் அபிவிருத்திக்கு உதவா. அவை மேலும் நாட்டை சீரழிவு நிலைக்கே கொண்டுசெல்லும்.

இந்த அனுபவ உண்மையை இலங்கைத் தீவின் கடந்தகால வரலாறு தெளிவாகச் சொல்கிறது. எனினும், இதைப் பற்றி அதிகாரத் தரப்பினர் புரிந்துகொள்வதாக இல்லை. இன முரண்பாட்டையும் ஏற்றத்தாழ்வையும் பேணிக்கொண்டிருந்தால் அபிவிருத்தியைக் காணவே முடியாது. வடபகுதியில் இன்னும் இயல்பு நிலை சீரடையவில்லை. பல கிராமங்கள் இன்னும் போர்க்காலத் தடையிலிருந்து மீளவேயில்லை. பல பிரதேசங்கள் இன்னும் இராணுவ வலயங்களாகவே உள்ளன. தொழிற்சாலைகள் எதுவும் இயங்கத் தொடங்கவில்லை. இதுமட்டுமல்லாமல் அதற்கான ஏதுவான நிலைகள் கூடக் காணப்படவில்லை.

இந் நிலையில் அபிவிருத்தியைப் பற்றி பேசுவதென்பது வேடிக்கைக்குரியதல்லாமல் வேறு எப்படி இருக்க முடியும்? தொழில் மையங்கள் இயங்காதது மட்டுமல்ல, விவசாய நிலங்கள் கூட மீளவில்லை. குறிப்பாக வலி.வடக்கு செம்மண் நிலம் இன்னும் இராணுவத்தினரின் பிடியிலேயே இருக்கிறது. ஆகவே, இந்தப் பின்னணியில் தான் நாம் ஆனையிற்வு உப்பளத்தையும், அரசாங்கத்தின் அபிவிருத்தி நோக்கையும், மகிந்த சிந்தனையையும் நோக்க வேண்டும்.




போரின் காரணமாக இயங்கா நிலைக்கு தள்ளப்பட்ட ஆனையிறவு உப்பளத்தை இப்போது மீளவும் இயங்க வைப்பதில் என்ன பிரச்சினைகள் உண்டு? வெளிப்படையாகவோ, மறைமுகமாகவோ இதற்கான காரணங்கள் இருப்பதாக தெரியவில்லை. அவ்வாறெனில், ஏன் இன்னும் தாமதங்கள்? நிதி ஒதுக்கீடில்லை. அரசாங்கத்திடம் காசில்லை என்று இது தொடர்பான சம்மந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்ததாகத் தகவல்.

அரசாங்கத்திடம் பணம் இல்லையென்றால், தொழில் மையங்களைச் செயற்படுத்தக்கூடிய வலு இல்லையென்றால், அது அபிவிருத்தியைப் பற்றி பேசக் கூடாது. அபிவிருத்தியைப் பற்றி பேசுவதென்றால் அதைச் செய்யக் கூடிய தகுதியும் ஆற்றலும் தேவை.

ஆனையிறவு உப்பளத்தின் அடித்தளம் அப்படியே இருக்கிறது. உப்பு வயல்கள் முற்றாகச் சிதைந்து விடவில்லை. விடுதலைப் புலிகளின் காலத்தில் கூட, ஒரு தொகுதியில் உப்பு உற்பத்தி நடைபெற்றது. அதாவது 2006 ஒகஸ்டில் போர் தொடங்கும் வரை, அங்கே உப்பு உற்பத்தி செய்யப்பட்டது. 2007 நடுப்பகுதியில் தான் அங்கே சேமிக்கப்பட்டிருந்த உப்பை வேறு பகுதிக்கு புலிகள் இடம் மாற்றினார்கள்.

ஆகவே, உப்பளம் நன்றாகச் சிதைவடைந்து விடவில்லை, மீண்டும் தொடக்க நிலையிலிருந்து பணிகளைச் செய்யவேண்டியதுமில்லை. மெல்லிய சீராக்கலின் மூலம், விரைவில் உப்பளத்தை இயங்கு நிலைக்கு கொண்டுவரலாம். பின்னர் கட்டம் கட்டமாக விஸ்தரிப்பு வேலைகளைச் செய்யலாம். ஒரு காலத்தில் வடபிராந்திய உப்புக் கூட்டுத்தாபனங்களின் தலைமையகமாக விளங்கிய இந்த உப்பளம், இயற்கை வளமுடையது. இதுமட்டுமல்லாமல் இலங்கையிலே மிகப் பெரிய உப்பளமாகவும் இருந்தது.

1980 களில் தீவிரமடைந்த போர், மெல்ல மெல்ல ஆனையிறவு உப்பளத்தை இயங்கமுடியாத நிலைக்குத் தள்ளியது. எனினும், 1990 இலிருந்து இயங்கமுடியாதிருந்த உப்பளத்தை, 2002 இல் எட்டப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கைச் சூழலில் மீண்டும் விடுதலைப் புலிகள் இயங்க வைத்தனர். புலிகளால் இயங்கவைக்க முடிந்த உப்பளத்தை அரசாங்கத்தினால் இயக்க முடியாதிருப்பதன் காரணமென்ன? முன்னர் ஆனையிறவு இராணுவத்தினரின் கேந்திர நிலையமாக இருந்தது என்பது உண்மைதான். ஆனால், இப்போது அப்படியில்லையே!

இப்போது படைத்தளமாகவோ, படை ஆதிக்கத்தின் முழுக் கட்டுப்பாட்டிலோ உப்பளம் இல்லை என்பதே உண்மை. ஆனாலும், உப்பளத்தை இயங்கவைக்க அரசாங்கம் விரும்பவில்லை. இதற்கான காரணம் என்ன? வடக்கின் வசந்தம் திட்டத்தின்படி பல அபிவிருத்தித் திட்டங்கள் செயற்படுத்தப்படுவதாகச் சொல்லப்படுகிறது. அவ்வாறாயின், அவை எவையென அரசாங்கத் தரப்பினால் பட்டியலிட முடியுமா?

போரினால் பாதிக்கப்பட்ட வடபகுதியைக் கட்டியெழுப்புவதில் ஜனாதிபதி மிகக் கரிசனையோடிருக்கிறார் என்று அரசாங்கத் தரப்பினர் கூறுகின்றனர்.

அப்படியென்றால், மறுபக்கத்தில் இன்னும் பொருளாதார மையங்கள் இயங்கா நிலையில் முடக்கப்பட்டிருப்பது ஏன்? இதற்கு என்ன அர்த்தம்?

வடபகுதியில் முன்னர் சிமெந்துக் கூட்டுத்தாபனம், இரசாயனப் பொருள் கூட்டுத்தாபனம், கண்ணாடித் தொழிற்சாலை, உப்புக் கூட்டுத்தாபனம், அலுமினியத் தொழிற்சாலை, ஆடை உற்பத்தி மையங்கள் என்பன இயங்கின. அவற்றில் பல ஆயிரக்கணக்கானவர்கள் வேலை செய்தார்கள். இப்போது? படையினர் தொகையாகப் பெருகிய அளவுக்கு நாட்டில் தொழில் செய்வோரும் இல்லை; தொழில்வாய்ப்புகளும் இல்லை. ✱

# இந்தியத் திட்டங்கள்; தேக்கநிலை நீங்குமா?

**போர்** முடிந்து ஒரு வருடத்தைத் தாண்டிய போதும், அந்தப் போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ முன்வந்த இந்தியாவைப் புறம்தள்ளிச் செயற்படும் போக்கு இலங்கையிடம் காணப்படுவதை அவதானிக்க முடிகிறது.

போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தாராளமாக உதவுவதற்கு இந்தியா முன் வந்துள்ளது. அதற்காகப் பல்வேறு திட்டங்களையும் இந்தியா அறிவித்துள்ளது.

இந்த நிலையில் அத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் இலங்கை விதிக்கும் நிபந்தனைகளால் அத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் தேக்க நிலை ஏற்பட்டுள்ளது எனச் செய்திகள் வெளிவருகின்றன.

இந்தியாவின் அண்டை நாடான சீனாவுடன் நட்புறவை வளர்த்து பல்வேறு வகையான உதவிகளை இலங்கை பெற்றுவருகிறது. அந்த உதவிகள் எல்லாம் தெற்கை அபிவிருத்தி செய்யும் இலக்கைக் கொண்டவையாக அமைந்துள்ளன. அத் திட்டங்களை நடைமுறைப்படுத்தி தெற்கு மக்களின் ஆதரவைப் பெறவே செயற்படுத்த இலங்கை அனுமதித்துள்ளது.

சீனாவில் இருந்து பெரும் எண்ணிக்கையான தொழிலாளர்களைக் கொண்டு வர அனுமதி வழங்கப்பட்டது. கனரக வாகனங்கள், இயந்திரங்கள், மூலப்பொருள்கள் ஆகியவற்றைச் சீனாவில் இருந்து எடுத்து வருவதற்குத் தடை ஏதும் போடப்படவில்லை.

இதன்காரணமாகச் சுதந்திரமாகச் சீனா தனது திட்டங்களைப் பூர்த்தி செய்துவருகிறது. சில திட்டங்களைப் பூர்த்தி செய்தும் விட்டது.

இந்நிலையில், இந்தியா வழங்க முன்வந்த திட்டங்கள் எல்லாம் தேக்க நிலையிலேயே உள்ளன.

போரால் பாதிக்கப்பட்ட மக்களின் மறு வாழ்வுடன் தொடர்புபட்டவையே இந்தியாவின் திட்டங்கள். வடக்கு - கிழக்கில் வாழும் மக்களின் மறுவாழ்வுடன் சம்பந்தப்பட்ட அத்திட்டங்களைச் செயற்படுத்துவதில் பல்வேறு வகையான தடைகள் போடப் படுகின்றன.

கிழக்கில் சம்பூரில் அனல்மின் நிலையம் ஒன்றை அமைக்க இந்தியா முன்வந்தது. அது தொடர்பாக இந்திய அதிகாரிகள் நேரில் ஆராய்ந்தனர். அதன்பின் இரு நாடுகளுக்கும் இடையில்

அமைத்தல்.

4) காங்கேசன்துறை துறைமுகத்தை ஆழமாக்கி அபிவிருத்தி செய்தல்.

5) பலாலி விமான நிலையத்தைப் புனரமைத்துச் சர்வதேச விமான நிலையத் தரத்துக்குக் கொண்டுசெல்வது.

6) காங்கேசன்துறை சிமெந்து ஆலையைப் புனரமைத்து உற்பத்தியை ஆரம்பித்தல்.

7) யாழ்ப்பாணத்தில் கலாசார நிலையம் ஒன்றை அமைத்தல்.

8) துரையப்பா விளையாட்டரங்கை அபிவிருத்தி செய்தல்.

9) விவசாய ஆராய்ச்சி நிலையம் ஒன்றை கிளிநொச்சியில் நிறுவுதல்.

10) யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் விவசாய, பொறியியல் பீடங்களை அமைத்தல்.

இப்படி 10 இற்கு மேற்பட்ட திட்டங்களை காலத்துக்குக் காலம் இந்தியா அறிவித்துக் கொண்டிருக்கிறது.

அந்தத் திட்டங்கள் எல்லாம் ஆரம்ப கட்டத்திலேயே நிற்கின்றன. அந்தத் திட்டங்களை விரைவாகச் செயற்படுத்த ஏற்பாடுகள் இருப்பதாகத் தெரியவில்லை.

இந்தத் திட்டங்கள் எல்லாம் அறிவிக்கப்பட்டுப் பல மாதங்கள் கடந்த நிலையிலும், ஆரம்பிக்கப்படவில்லை என்றே கருதவேண்டியுள்ளது.

ஆரம்பநிலையிலும் உள்ளன.

இந்தத் திட்டங்களில் வீடமைப்பு, ரயில்பாதைப் புனரமைப்பு ஆகிய வற்றை அங்குரார்ப்பணம் செய்வதற்கு இந்திய வெளிவிவகார அமைச்சர் எம்.என்.கிருஷ்ணா கடந்த மாதம் வரவிருந்தார். ஆனால் அந்த விஜயம் இந்த மாதத்துக்குப் பிற்போடப்பட்டது.

அத்துடன் யாழ்ப்பாணத்திலும் அம்பாந்தோட்டையிலும் இந்தியத் தூதரக் கிளைகளைத் திறப்பதும் பிற்போடப்பட்டது.

இந்த மாதம் இறுதிப்பகுதியில் கிருஷ்ணா இலங்கை வருவார் என அறிவிக்கப்பட்ட போதும்-

திட்டங்களை நடைமுறைப்படுத் துவதில் உள்ள தடைகள் நீக்கப்படும் பட்சத்திலேயே அவரது விஜயம் இடம்பெறும் எனச் செய்திகள் வெளிவந்துள்ளன.

போரால் பாதிக்கப்பட்ட மக்களின் மறுவாழ்வில் இலங்கைக்கு அக்கறை இருக்குமாயின், இந்தியாவின் திட்டங் கள் விரைவாக முன்னெடுக்கப்படும். இல்லையேல், திட்டங்களை நடை முறைப்படுத்தும் செயற்பாடுகளில் தேக்க நிலை தொடரத்தான் போகின் றது. இதுவே யதார்த்த நிலையாகும்.

அது நிற்க -

யாழ்ப்பாணம் பொதுநூலகத்தில் அண் மையில் சிங்கள உல்லாசப் பயணிகள் மேற்கொண்ட அடாவடித்தனம் தொடர் பான விடயம் இப்போது சூடுபிடித்துள்ளது.

நூலகத்தைப் பார்வையிட அனுமதிக்காத நேரத்தில் சென்ற தெற்கு உல்லாசப் பயணிகள் அங்கு மேற்கொண்ட அடாவடித்தனம் 1981 ஆம் ஆண்டு நூலகம் எரிக்கப்பட்ட சம்பவத்தை நினைவுபடுத்துவதாக அரசியல்வாதிகள் கூறுகின்றனர்.

1981 ஆம் ஆண்டு யாழ்.நூலகம் எரிக்கப்பட்ட சம்பவத்துடன்தான், சிங்கள - தமிழ் மக்களிடையேயான பரஸ்பர உறவு முறியத் தொடங்கியது.

அன்று ஆரம்பமான இன முரண்பாடுதான் 1983 இல் இனக் கலவரமாக முகிழ்ந்து, ஆயுதப் போராட்டம் ஒன்று இந்த நாட்டில் அரங்கேறக் காரணமாகயிற்று.

அந்த ஆயுதப் போராட்டம் முடிந்து இன்று இனங்களுக்கு இடையில் அன் னியோன்ய உறவுகள் புதுப்பிக்கப்படும் நிலையில் நூலகத்தில் அடாவடித்தனம் அரங்கேறியுள்ளது.

இந்தச் சம்பவத்துக்கு அரசின் சார்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மன்னிப்புக் கேட்டுள்ளார்.

# பரஸ்பர உறவுக்கு ஆப்பு வைக்கும் சம்பவங்கள் தடுக்கப்படவேண்டும்

இலங்கை முனைந்துள்ளதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

பெரும் திட்டங்களான அம்பாந்தோட்டை துறைமுக அபிவிருத்தி, புத்தளம் நுரைச் சோலை அனல்மின் நிலையம், படையினர் பொலிஸாருக்கான முகாம், குடியிருப்பு அமைத்தல் போன்றவை தெற்கு மக்களைத் திருப்திப்படுத்துவதற்கும் எதிர்கால தேர்தல்களை மையமாகவும் கொண்டவை எனக் கூறப்படுகிறது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முதலாவது பதவிக்காலத்தைப் பூர்த்தி செய்து, இரண்டாவது பதவிக்காலத்தை இந்தமாதம் ஆரம்பிக்கும்போது, அரசின் சாதனைகளைப் பட்டியலிடுவதற்காக இந்தத் திட்டங்கள் விரைவுபடுத்தப்பட்டதாகவும் தகவல்கள் வெளிவந்துள்ளன.

இந்தத் திட்டங்களின் செயற்பாட்டில் இலங்கை எந்தவித தலையீடும் செய்யவில்லை. சுதந்திரமாக சீனா தனது திட்டத்தைச்

ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

பெரும் ஆரவாரத்துடன் அவை இடம்பெற்றபோதும், இன்னமும் கட்டுமானப் பணிகள் ஆரம்பமாகவில்லை. கட்டுமானப் பணிகளை ஆரம்பிக்கப் பல்வேறு கட்டுப்பாடுகள், தடைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன என்று கூறப்படுகிறது.

அடுத்ததாக வடக்கில் பல்வேறு திட்டங்களுக்கு உதவப் போவதாக இந்தியா அறிவித்தது. திட்டங்கள் அறிவிக்கப்பட்டு, மாதங்கள் பல சென்ற போதும் அந்தத் திட்டங்கள் எவையும் இன்னமும் ஆரம்பிக்கப்படவில்லை.

அத்திட்டங்களைப் பட்டியலிட்டால் -

1) வன்னியில் போர் காரணமாக இடம்பெயர்ந்த மக்களுக்கு 50 ஆயிரம் வீடுகளை அமைத்தல்.

2) இதற்கான நிதியைக் கையாள்வதற்கு இந்திய வங்கியின் கிளையை யாழ்ப்பாணத்தில் அமைத்தல்.

3) காங்கேசன்துறையில் இருந்து ஓமந்தை வரையான ரயில்வே பாதையை

அத்திட்டங்களை நடைமுறைப்படுத்தப் பல்வேறு தடைகள் ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது.

குறிப்பாக வீடமைப்புத் திட்டத்துக்கான உதவிகளை இந்தியா நேரடியாகப் பயனாளிகளுக்கு வழங்கத் திட்டமிட்டிருந்தது. இந்திய நிறுவனம் ஒன்று மூலம் வீடுகளைக் கட்டிக்கொடுக்க இந்தியா திட்டமிட்டது. ஆனால் இப்போது நிலைமை மாறிவிட்டது.

வீட்டுக்குரிய பயனாளிகளைத் தெரிதல், காணி உரிமையை நிரூபித்தல், வீடமைப்புப் பணிகளை முன்னெடுப்பதில் அரசின் பங்களிப்பு, உள்ளூர் தொழிலாளர்களைப் பணிக்கு அமர்த்துதல் போன்ற விடயங்களில் இலங்கையே முடிவு செய்யும் என்று போடப்பட்ட நிபந்தனைகளால் அத்திட்டம் தேக்கத்தில் உள்ளது.

அதேபோன்றுதான் ஏனைய திட்டங்களின் நிலைமையும்.

இதன் காரணமாக சீனாவின் திட்டங்கள் விரைவாக முடிவடையும் நிலையிலும், இந்தியாவின் திட்டங்கள்

மன்னிப்புக் கேட்பதுடன் நிறுத்திக் கொள்ளாமல் எதிர்காலத்தில் இப்படியான கசப்பான சம்பவங்கள் இடம்பெறாத வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் என்பதே மக்களின் விருப்பமாகும்.

இனங்களுக்கு இடையில் பரஸ்பர உறவு வளர்ந்துவரும் சூழலைக் குழப்ப இடமளிக்காத நடவடிக்கைகளை அரசு முன்னெடுக்க வேண்டும். சம்பவத்தில் சம்பந்தப்பட்டவர்களை இனங்கண்டு அவர்களைச் சட்டத்தின் முன் நிறுத்த அரசு முயற்சி எடுக்கவேண்டும்.

அப்போதுதான் எதிர்காலத்தில் இத்த கைய சம்பவங்கள் இடம்பெறுவதைத் தடுக்க முடியும்; தவிர்க்க முடியும்.

இந்த விடயத்தில் அரசின் காத்திரமான செயற்பாடுகள்தான் எதிர்காலத்தில் இனங்களுக்கிடையில் ஐக்கியத்தை ஏற்படுத்தும்.

அரசின் செயற்பாடுகள் எந்த விதத் தில் அமையப்போகின்றது என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

யாழவன்

# மக்கள் பிரச்சினையை எதிரொலிக்கும் எதிர்க்கட்சி

உண்மையான ஜனநாயகத்தின் ஒரு தூண் ஆளும்கட்சி; மற்றொரு தூண் வலுவான எதிர்க்கட்சி எனலாம். எதிர்க் கட்சியின் தலைவர் எதிர்கால பிரதமர் என்பது பிரிட்டன் போன்ற ஜனநாயக நாடுகளில் எழுதப்படாத விதி ஆகும். ஆளும் கட்சியின் அட்டூழியத்தைத் தட்டிக்கேட்கும் எதிர்க்கட்சிகளாக தமிழகத்தின் எதிர்க்கட்சிகள் பரிணமித்திருப்பது சமீபகால இந்திய அரசியலின் வளர்ச்சிப் படிகளில் ஒன்று எனலாம். முந்திய காலங்களில் எதிர்க்கட்சி என்ற ஒன்றே இல்லாத நிலையில் தட்டுத்தடுமாறி இந்திய ஜனநாகம் செயற்பட்டுவந்தது. அந்தக் கோதாவில்தான் காங்கிரஸ் கட்சி முற்காலத்தில் கண்மூடித்தனமாக மாநில ஆட்சிகளை கவிழ்த்து வந்தது. இது இப்போது தலைகீழாக மாறிவிட்டிருப்பதுதான் ஜனநாயக ஆர்வலர்களை புளகாங்கிதம் அடையச் செய்திருக்கிறது.

சமீபத்தில் கர்நாடகாவில் ஆளும் பி.ஜே.பி. அரசுக்கு நெருக்கடிகள் ஏற்பட்டன. பி.ஜே.பி. உறுப்பினர்கள் பலர் அமைச்சுப் பதவி கிடைக்காத ஆத்திரத்தில் ஆளும் கட்சிக்கு எதிராகச் செயற்படப்புறப்பட்டனர். கட்சித் தாவல் சட்டத்தின் கீழ் இவர்களை பி.ஜே.பியின் சபாநாயகர் பதவி நீக்கியதால் பி.ஜே.பி. அரசு நம்பிக்கை வாக்கெடுப்பில் தப்பியது. எனினும், அரசு உறுப்பினர்களைச் சட்டவிரோதமாக பதவிநீக்கியதாகக் கூறி ஆட்சியைக் கலைக்கவேண்டுமென முன்னாள் பிரதமர் தேவகவுடாவின் கட்சி கோரியது. காங்கிரஸ், பி.ஜே.பிக்கு அடுத்து மூன்றாவது பலமான கர்நாடகக் கட்சி தேவகௌடாவின் கட்சியாகும். பி.ஜே.பி. மீதான காழ்ப்புணர்வில் தேவகௌடா இதைக்கூறினாலும் காங்கிரஸ் கட்சியால் அவ்வளவு இலேசில் முன்போல் ஆட்சியைக் கவிழ்க்கமுடியாது என்பதை சோனியா அறிவார். முக்கியமாக 356ஆவது சட்டத்தைப் பயன்படுத்த பிரதானமாக எதிர்ப்பவர் கலைஞர் கருணாநிதியே. 1991இல் இவ்வாறு அநியாயமாக ஆட்சியைப் பறிகொடுத்த கட்சி தி.மு.க. ஆகும். அதன்பின் கருணாநிதி தொடர்ச்சியாக இச்சட்டத்திற்கு எதிர்ப்பைக் காட்டினார். எனவே, கர்நாடக அரசை மத்திய அரசு கவிழ்க்கப்போகின்றது என்றவுடன் கர்நாடக முதலமைச்சர் எடியூரப்பா உடனடியாகச் சென்னை புறப்படத்தயாரானார் என்று கூறப்படுகிறது. அந்தளவுக்கு மாநிலக் கட்சி ஒன்றைக் கலைக்க கருணாநிதி கடும் எதிர்ப்புக்காட்டுபவர் என்பது குறிப்பிடத்தக்கது. இத்தனைக்கும் பி.ஜே.பி. - தி.மு.க. இடையே தற்போது நல்லுறவே இல்லை. தமிழக பி.ஜே.பியினர் கருணாநிதியைச் சாடுவதும், கருணாநிதி அவ்வப்போது பி.ஜே.பியை இழிவுபடுத்திப்பேசுவதும் நடந்தே வருகிறது. இருந்தும் கர்நாடகாவின் பி.ஜே.பி. முதலமைச்சர் தனது அரசு கவிழ்க்கப்படுவதைத் தடுக்க கருணாநிதியைத் தான் முதலில் சந்திக்கப் புறப்பட்டார் என்றால் இது விடயத்தில் கலைஞர் எவ்வளவு உறுதியானவர் என்பது புலப்படும். தனது எதிர்க்கட்சியியே ஆன பி.ஜே.பியின் ஜனநாயக முறையில் தெரிவான அரசைக் கவிழ்க்க கருணாநிதி இடமளிக்கமாட்டார் என்பது பி.ஜே.பிக்குத் தெரியும். அத்துடன் முன்பு 1998இல் பி.ஜே.பியானது கலைஞரின் எதிர்க்கட்சியாக இருந்தும் கூட்டாளியான ஜெயலலிதா கேட்டும், வாஜ்பாய் தி.மு.க. அரசைக் கவிழ்க்க உடன்படாமல் நம்பிக்கை வாக்கெடுப்பில் ஆட்சியை இழந்தார். எனவே, தி.மு.க. இவ்விடயத்தில் நேர்வழிசெல்லும் என்பதை எடியூரப்பா நன்கறிவார்.

இவ்வாறு ஜனநாக முறையில் தெரிவான ஒரு மாநில அரசை கவிழ்க்கமுடியாது என்பது இந்திய ஜனநாயகத்தில் புதிதாக உருவான ஒரு போக்காகும். அதுபோலவே கூட்டணியின் ஆட்சி மத்தியிலும், பல மாநிலங்களிலும் ஒரு நியதியாகவே மாறியிருக்கிறது. இதன்மூலம் ஒரு கட்சியின் ஏகாதிபத்தியம் முடிவுக்கு வந்தேவிட்டது. அத்துடன் மத்தியிலும் மாநிலத்திலும் பலமான எதிர்க்கட்சிகள் இப்போது உள்ளன. மத்தியில் உள்ள காங்கிரஸ் கட்சிக்கு பி.ஜே.பி. ஒரு வலுவான எதிர்க்கட்சியாக விளங்குகிறது. அதுபோல தமிழகத்தில் ஆளும் தி.மு.கவுக்கு சிம்மசொப்பனமாக எதிர்க்கட்சியாக அ.தி.மு.க. உள்ளது. காலைஞர் என்னதான் நியாயம், தர்மம் பற்றிப் பேசினாலும் அவரின் அமைச்சர்களின் அட்டகாசம் சொல்லிமாளாது. சேலம் மாவட்டத்தில் அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகமும் அவரது ஆட்களும் செய்துவரும் கொலைகள் சட்டஒழுங்கைப் பெரும் கேள்விக்குறியாக்கியுள்ளன.

அரச வாகனத்தில் தேசியக் கொடியை பறக்கவிட்டபடி அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் கொலைக்குற்றவாளி ஒருவரைச் சென்று பார்த்தது குறித்து, எதிர்க்கட்சித் தலைவர் ஜெயலலிதா கேள்வியெழுப்பியுள்ளார். அமைச்சரை உடனடியாகப் பதவி நீக்கும்படி கோரிக்கைகள் எதிர்த்தரப்பில் எழுந்துள்ளன. வழக்கு விசாரணையில் கொலைகாரனான அமைச்சரின் பெறாமகன் குற்றவாளி என நிருபிக்கப்படின் வீரபாண்டி ஆறுமுகத்தை உடனடியாகவே பதவிநீக்க கலைஞர் தயாராகி வருகிறார் என்று கூறப்படுகிறது. அமைச்சர்களின் சட்டவிரோதமான மணல் வியாபாரம், கற்பழிப்பு, கொலை குறித்து எதிர்க்கட்சிகள் புட்டுப்புட்டு வைக்க, பத்திரிகைகள் விலாவாரியாக எழுதுகின்றன. கலைஞர் இந்த அமைச்சர்களால் படும்பாடு கொஞ்சநஞ்சமல்ல. ஜனநாயகத்தில்


கருணாநிதி


ஜெயலலிதா


அழகிரி


ஸ்டாலின்

வலுவான எதிர்க்கட்சியிருப்பது எந்தளவுக்கு முக்கியமென்பதை ஜெயலலிதாவின் சமீப நடவடிக்கைகள் காட்டுகின்றன. சரியான எதிர்க்கட்சிக்கு இலக்கணம் வகுத்தாற்போல் மக்கள் பிரச்சினைகளையும், சட்டஒழுங்கு சீர்கேடுகளையும் ஜெயலலிதா கையில் எடுத்திருப்பதால் அந்த ஆயுதம் தி.மு.கவை ஆழமாகத் தாக்குகிறது என்பது உண்மைதான். அவர் சொல்லும் பிரச்சினைகளை சீர்செய்வதைவிடக் கலைஞருக்கு வேறு மார்க்கம் எதுவுமேயில்லை. இதன்மூலம் மக்களுக்கு நன்மை கிடைக்கும் என்பதுதான் இங்கு முக்கியமான விடயமாகும்.

உதாரணமாக, காவிரிப் பிரச்சினையில் அக்கறையின்றியிருப்பது, மணல் கடத்தல் முதலான விடயங்களில் ஏதாவது செய்தே ஆகவேண்டிய நிர்ப்பந்தம் கலைஞருக்கு உண்டாகியுள்ளது. காவிரி குறித்து ஜெயலலிதா பதவியில் இருந்தபோதும், வாஜ்பாய் அரசியல் பங்காளியாக இருந்தபோதும் காத்திரமாக ஏதும் செய்யவில்லை. ஆனாலும் இன்று ஜெயலலிதா எதிர்க்கட்சியில் இருந்து குரல் கொடுப்பது எடுபடும் என்பது கவனிக்கத்தக்கது. திருக்குவளை தீயசக்தி எனக் கலைஞரை மக்கள் வசைபாடும் நிலைக்கு படிப்படியாக ஜெயலலிதா இட்டுச்செல்வது கலைஞருக்குப் பெரும் கலக்கமாகவுள்ளது.

இந்த இலட்சணத்தில் அழகிரி வேறு சட்டசபைத் தேர்தலில் போட்டியிடுவதென்று விடாப்பிடியாக உள்ளார். எம்.பிப் பதவியை விட்டுவிட்டு மதுரையில் மேலூர் சட்டப்பேரவைத் தொகுதியில் வரும் தேர்தலில் அவர் போட்டியிட விரும்புகிறார் எனத் தெரிவிக்கப்படுகிறது. அவ்வாறு நடந்தால் முதல்வராக மீண்டும் கலைஞர் வந்தாலும் அது அவரது கடைசி வெற்றியாகவே இருக்கும். எனவே, இடையில் முதல்வராக இருக்கும்போதே அவர் இறந்தால் தெற்கேயுள்ள எம்.எல்.ஏக்கள் கணிசமானோரை ஈர்த்துவைத்து ஸ்டாலினுக்குப் போட்டியாகக் களமிறங்கலாம் என்பது அழகிரியின் திட்டமாகும். எனவே, ஒருவேளை தி.மு.க. ஆட்சிக்கு வந்தாலும் இடையில் அந்த வருடம் முடிவதற்குள் சுவாரசியமாக காட்சிகள் அரங்கேறலாம். அக்கட்டத்தில் தென்மண்டல தி.மு.க. எம்.எல்.ஏக்கள் முக்கிய பங்குவகிப்பர். இவர்கள் ஸ்டாலின் முதல்வர் ஆவதற்கு எதிர்ப்புக் காட்டினால் தி.மு.கவில் பிளவு ஏற்படுவதென்பதைத் தவிர்க்கமுடியாததாகும். எனவே, தி.மு.க. சார்பில் தென்தமிழகத்தில் உள்ள தொகுதிகளில் போட்டியிடும் உறுப்பினர்கள் யார் என்பது மிக முக்கியமான விடயமாகும்.

இதேவேளை, அ.தி.மு.க. அணிக்கு விஜயகாந்தை இழுக்கும் மறைமுக முயற்சிகள் தொடர்ந்தவண்ணமாக உள்ளன. காவிரிப் பிரச்சினையில் பிரதமரிடம் மகஜர் கொடுக்க ஜெயலலிதா தலைமையில் தமிழக எதிர்க்கட்சிகள் செல்லும்போது, விஜயகாந்தும் வரவேண்டும் என புதிய தமிழகம் கட்சித் தலைவர் டாக்டர் கிருஷ்ணசாமி கேட்டிருக்கிறார். ஏற்கனவே தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்தை அ.தி.மு.க. அணிக்கு வரும்படி தா.பாண்டியன் உள்ளிட்ட கம்யூனிஸ்ட்டுகள் தொடர்ச்சியாகக் கூறிவந்துள்ளனர். ஜெயலலிதா இது பற்றி ஏதும் வாயே திறக்கவில்லை. எனவே, அவரது ஆசீர்வாதத்துடன்தான் கம்யூனிஸ்ட்டுகளும் கிருஷ்ணசாமியும் விஜயகாந்தைக் கவரும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர் என்பது தெளிவு.

தனக்கு மௌசு கூடுவதை உணர்ந்த அவரே அதிக தொகுதிகளை, இடஒதுக்கீட்டில் கேட்டுப்பெற்றுவிட முயன்றுவருகிறார். விஜயகாந்தை வளைப்பதைப் போலவே மறுமுனையில் பா.ம.கவுக்கு வலை வீசவும் அ.தி.மு.க. முயன்றபோதிலும் ராமதாஸ் ஜெயலலிதாவிடம் பட்ட அவமதிப்பை மறந்தாரில்லை. டாக்டர்களான அவரும் மகனும் ஜெயலலிதாவிடம் தங்கள் தொழிலுக்குரிய மதிப்புக்கூடக் கிடையாது என்பதை உணர்ந்திருப்பது முக்கிய விடயமாகும்.

தமிழக அரசியல் கட்சிகளுக்கு நிரந்தர எதிரியும் இல்லை; நிரந்தர நண்பரும் இல்லை என்றாலும் ஜெயலலிதா - சோனியா பகை, ஜெயலலிதா - ராமதாஸ் பகை என்பது போன்ற விரோதங்கள் நிரந்தர விரோதங்களாக மாற நிறையவே வாய்ப்புள்ளது. அதன் முழுக்குற்றமும் ஜெயலலிதாவையே சாரும். சட்டம் ஒழுங்கு பற்றி அவர் என்னதான் பீற்றிக்கொண்டாலும் தனிப்பட்டமுறையில் ஓர் அரசியல் தலைவராகப் பழகுவதற்கு அவர் உகந்தவரல்லர். மற்றவர்களை மதித்து நடக்கும் பண்பை அவர் பெற்றுக்கொள்ளும்வரை தி.மு.க. காட்டில் மழைதான். அது அடுத்த ஆண்டுத் தேர்தலிலும் எதிரொலிக்கலாம்.

- எஸ்.சுரேந்திரஜித்




அன்று, அதிகாலை இரண்டு மணி. ஒரே இடியோசை வானைப் பிளந்த வண்ணம் இருந்தது. மக்கள் சொல்லொனாத் துன்பத்தை அனுபவித்தனர். நான்கு பக்கங்களில் இருந்தும் என்னைவிடு... உன்னை விடு... என போட்டி போட்டுக் கொண்டு வந்த குண்டுகளின் வெளிச்சமும் வெளிச்சக்கூடும் இரவை பகலாக்கி நின்றன. இருந்த வாழ்க்கை மாறியது. அவர்கள் இருந்த பகுதியில் பதுங்கு குழியே அமைக்க முடியாத நிலைமை. களிமண் தரை. வெட்டுவதற்கு ஏற்ற ஆயுத வசதி கூட இருக்கவில்லை. தலைநிமிர்த்தி வெட்டினால் வெட்டுபவரின் நிலைமை என்ன? ஏதோ மன அமைதிக்கு பதுங்கு குழி எனச் சொல்லிக் கொள்ள முடிந்தவரை சின்னச்சின்ன கிடங்குகள். அவற்றுக்குள் சிறு பிள்ளைகளை மட்டும் இறக்கி அந்த இடத்திலேயே விட்டு தமது உயிரை காப்பாற்ற கடந்து செல்ல வேண்டிய நிலைமை. உதவிக்கு எவரும் இல்லாத நிலையில் காயப்பட்டவர்கள் வீதியினூடாக இழுத்து இழுத்துச் சென்றனர். முற்றுமுழுதாக இயலாதவர்கள் வீதியோரங்களில் கிடந்தனர். தம்மையும் காப்பாற்றும் படி, பார்வையால் கேட்ட போதும்... ஒன்றும் செய்யமுடியாத நிலைமை.

# தொலைந்தவர்கள் மீண்டும் வருவார்களா?

விடிந்தால் 15.05.2009 பிறக்கப் போகிறது. யார் தப்புவார் என்று யாருக்குமே தெரியாது. அங்கு நிர்க்கதியாகி நின்ற மக்கள் கூட்டத்துக்குள் சுகியின் குடும்பமும் ஒன்று. சுகியின் குடும்பம் என்பதை விட உறவினர் என்றே கூறவேண்டும். சுகியின் குடும்ப அங்கத்தவர்கள் என்று சொல்லிக் கொள்ள, அப்போது அந்தப் பகுதியில் எவரும் இருக்கவில்லை. கடைசியாக முள்ளிவாய்க்கால் கிழக்கு பொது நோக்கு மண்டபத்தடியில் ஒரு தெரிந்தவர் வீட்டில் சிறிய ஓர் இடம் கிடைத்தது.



அங்கே தான் சுகி குடும்பத்தவர்கள் தங்கி இருந்தனர். இவர்கள் இருந்த வீடு பிரதான வீதியில் என்றபடியால். அந்த பாதையூடாக இடம்பெயர்ந்து கொண்டிருந்த ஆயிரக்கணக்கான மக்களின் துன்ப துயரங்களை நேரில் கண்டு கொண்டனர். அப்போது கடற்கரைப் பக்கம் கேட்ட வேட்டுச் சத்தங்கள் இவர்களையும் தாண்டி முன்னோக்கிச் சென்று கொண்டிருந்தன. அதிலிருந்து தெரிந்து கொள்ள முடிந்தது சண்டை முள்ளிவாய்க்காலை தாண்டி. கடற்கரையோரமாக வட்டுவாகல் நோக்கி வந்து கொண்டிருக்கிறது என்று.

போர் தொடங்கிய ஆரம்ப நாட்களில் உறுதியான பதுங்கு குழிகளை அமைத்து தமது உயிரை பாதுகாத்து வந்தனர் மக்கள். ஆனால், அவர்களின் பதுங்கு குழிகளும் படிப்படியாக மாற்றம் பெறத் தொடங்கின. உடுக்கும் சேலைகளை வெட்டி பை தைத்து அதனுள் மண்ணைப்போட்டு அணையாக வைத்து பதுங்கி பாதுகாத்து வைத்திருந்தார்கள். ஒரு நிழலை தேடிக் கொள்ள தறப்பாள் கட்டவும் இடமில்லை. இடப்பிரச்சினையே பெரிய பிரச்சினையாக இருந்த போதும் தண்ணீர், மலசலவசதி, சாப்பாட்டுப் பிரச்சினைகளை எழுத்திலே வர்ணிக்க முடியாது. அந்த வேளையிலும் போர் முனைப்பு பெற்று தலைவிரித்துத் தாண்டவம் ஆடியது. என்ன செய்வது? தமது உயிரை இறைவனின் கையில் ஒப்படைத்து விட்டு கிடைத்த இடங்களிலேயே மக்கள் முடங்கினர்.

சுகியின் குடும்பத்தவர்கள் கொடுத்து வைத்தவர்கள் என்றே சொல்ல வேண்டும்.

நண்பனின் வீடு என்றபடியால் தங்குவதற்கு ஒரு சிறிய பகுதி கிடைத்தது. அந்த வீட்டில் ஒரு பகுதியில்தான் சந்திரனின் குடும்பமும் தங்கி இருந்தது. அவர்களில் கிட்டதட்ட பத்துப்பேர். சந்திரன் மிகவும் எளிமையானவன். சந்திரனின் பண்பான குணம் போல் அவனின் மனைவி பிள்ளைகளும் குணமானவர்கள். இரவில் உறங்கும் வேளைகளில் வெளியில் போய் வரவேண்டியிருந்தால் வெளிச்சம் இருக்காது. அவர்களின் கால்களில் ஏறி மிதித்து கொண்டு தான்போய் வரவேண்டும். அதையும் சமாளித்துக் கொண்டனர். அப்போது தமது உயிரை பாதுகாப்பதை விட தன்னை சார்ந்தவரின் உயிரை பாதுகாக்கும் பண்பே மேலோங்கி இருந்தது. ஊர்வலம் தொடங்குவதற்கு பலபகுதிகளில் இருந்தும் மக்கள் வருவது போல் எல்லோரும் பிரதான வீதியை நோக்கி வந்து கொண்டிருந்தனர். காயப்பட்டவர்களே மீண்டும். மீண்டும் காயப்பட்டு இறந்து கொண்டிருந்தார்கள். இறந்தவரை அடிமேல் அடி எடுத்து வைக்கவே இடமில்லை. அப்படி ஒரு சிறிய பகுதிக்குள் மக்கள் வெள்ளம். விடிந்தால் தான் நிலைமை என்னவென்று புரியும். அப்போது - காலையும் புலர்ந்தது. அந்த வீட்டினுள் நிறைந்திருந்த மக்கள் வெள்ளமும் படிப்படியாக குறைந்து சென்றது. வட்டுவாகல் நோக்கி பிரதான வீதியூடாக நத்தை வேகத்தில் நகர்ந்து கொண்டிருந்தது கூட்டம்.

சுகியின் குடும்பமும் அந்த வீட்டை விட்டு வெளியேறுவதற்கு தயாராகிக் கொண்டிருந்தது. சந்திரனின் குடும்பமும் ஒவ்வொருவர் கையிலும் ஒரு கைப்பையுடன் வெளியேற தயாராகியது. சந்திரன் தன் குடும்பத்துடன் போகாமல் வேறு திசையை நோக்கி செல்லத் தயார் ஆனான். சந்திரனின் மகள் சந்திரனை கட்டி அணைத்து கதறினாள். மகளுக்கு ஆறுதல் கூறினான். நீங்கள் போங்கோ நான் வருவேன் என சொல்லி அனுப்பி வைத்தான். அவனை பிரிய மனமின்றி அவனின் குடும்பம் பிரிந்து சென்றது. சந்திரனுடன் இன்னும் சிலர் சேர்ந்து கொண்டனர். அங்கு சுகியும் சகோதரர்களும் ஒரிரு உடைகளுடன் புறப்பட தயாராகினர். அப்போது சுகியின் சகோதரன் சந்திரனைப் பார்த்துக் கேட்டான் "அண்ணா நிலமை என்னமாதிரி போகும்."

## அந்த இறுதி நாட்களில் வன்னியில் நேர்ந்த அவலங்கள்

அதற்கு சந்திரன் அன்பாக பதிலளித்தான். அதைக் கேட்டு கொண்டு சுகியின் குடும்பம் வட்டுவாகலை நோக்கிய திசையில் பயணத்தை ஆரம்பித்தது.

சந்திரன் தன் திசையில் சென்றான். இரண்டு நாட்களாக சொல்ல முடியாத பல அவஸ்தைகளை எதிர் கொண்டு மூன்றாம் நாள். 17.05.2009 அன்று வட்டுவாகல் பாலத்தை கடந்த மக்களுடன் சுகியும் குடும்பத்தவர்களும் உயிர் தப்பி இராணுவத்திடம் சென்றனர். எதை பார்க்கக் கூடாதோ அதை எல்லாம் பார்த்து, அனுபவிக்க கூடாதவற்றை அனுபவித்து, மிஞ்சியிருந்த மக்கள் கூட்டம் காட்டிய பாதை ஊடாக கம்பிக் கூட்டுக்குள் வந்து சேர்ந்தனர். வட்டுவாகலில் சந்திரனையும் காணமுடிந்தது. அந்த கொடூரத்துக்குள் இருந்து தப்பி வந்தவர்களில் தெரிந்தவர்கள் அறிந்தவர்களை கண்டு கூடி மகிழ்ந்தனர் மக்கள். ஆனால், பின்பு அனுபவித்தவைகள் ஏராளமான வேதனைகள் தான். பிறகு சந்திரனின் மனைவி பிள்ளைகளை, தான் தங்கி இருந்த முகாமில் சுகி சந்தித்தாள். சந்திரனின் மனைவி பைத்தியம் பிடித்தவள் போல் காணப்பட்டாள். கணவரைத் தொலைத்துவிட்டு தேடிக் கொண்டிருந்தவர்களில் சந்திரனின்மனைவியும் ஒருவர். அந்த வேளையில்தான், குடும்பத்தை விட்டு பிரிக்கப்பட்ட பிள்ளைகள், கணவன்மார் மனைவிமாரின் விவரங்களை தேடிக் கொடுக்கும் படலம் ஆரம்பித்திருந்தது. அகதிகளைப் பதிவு செய்யும் வாகனம் வந்த செய்தி அறிந்தால், மக்கள் ஈயென மெய்த்து விடுவார்கள். அவர்களில் சந்திரனின்மனைவியையும் அடிக்கடி காணலாம். ஆனால் அவளுக்கு எந்த நல்ல செய்தியும் கிடைக்கவில்லை. யாரிடம் சொல்வது? மனதுக்குள் கலவரம் வெடித்ததே தவிர... வெளிச்சம் தென்பட வாய்ப்புக் கிடைக்கவில்லை. சந்திரனின் தகவல் கிடைக்காது வாடி நின்ற குடும்பத்தினர் போல் இன்னும் பலர் வாடி நிற்கின்றனர். அவர்கள் ஒவ்வொருவரும். ஒருவருக்கு ஒருவர் ஆறுதலடைய வேண்டும் என சுகி பிரார்த்தனை செய்து கொண்டாள், அன்று தனது மகளுக்கு கூறிய வார்த்தையை காப்பாற்ற சந்திரன் வருவானா என்று இன்னும் தெரியவில்லை. கடவுளே!!! தொலைந்தவர்கள் மீண்டும் வரவேண்டும்.

- பவானி.தயாளன் -
யாழ்.

# காசியின் நிகழ்வில் ஈழத்தமிழ் அனல்!

சமீபத்தில் சென்னையில் நடைபெற்ற, உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தனின் 'தமிழ் எங்கள் உயிரினும் மேலானது' என்ற குறுந்தகடு வெளியீட்டு விழாவில்... ஈழத் தமிழ் அனல் வீசியது!

ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ முதல்பிரதியை வெளியிட, ம.நடராசன் பெற்றுக் கொள்வார் என அறிவிக்கப்பட்டுஇருந்தது. ஆனால், அவருக்கு பதிலாக அவரின் அண்ணன் ம.சாமி நாதன் குறுந்தகட்டைப்பெற்றுக் கொண்டார். கல்யாணவீடுகளில் கட்டாயம் இடம் பிடிக்கும் 'வாராய், நீ வாராய்'


வைகோ

பாடலைத் தந்த திருச்சி லோகநாதனின் மகன் டி.எல்.மகராசன் மேடையிலேயே இரண்டு பாடல்களைப் பாடி, தமிழ் உணர்வாளர்களை உற்சாகப் படுத்தினார்.

நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்த உலகத் தமிழர் பேரமைப்புத் தலைவர் பழ.நெடுமாறன் பேசுகையில், ''யாழ்ப்பாணத்தில் தமிழர்களைப் பட்டினி போட்டுக் கொல்ல இலங்கை அரசு முயன்றது. இதைத் தடுத்து நிறுத்துவதுபற்றி தி.க. தலைவர் கி.வீரமணியும், நானும் அப்போது எதிர்க் கட்சித் தலைவராக இருந்த கலைஞரை சந்தித்தோம். அவருடன் வைகோவும், எஸ்.எஸ்.தென்னரசும் இருந்தனர். இரண்டு மணி நேரம் மன்றாடினோம். கருணாநிதியோ, 'பிரபாகரன் என்னை மதிக்கவில்லை' என்றார். 'அந்த மக்களுக்காகவாவது நீங்கள் பேசக் கூடாதா?' என்று கேட்டோம். 'எல்லாம் ஒன்றுதானே... அந்த மக்களும் அவரைத்தானே தலைவனாக ஏற்றுக்கொண்டு இருக்கிறார்கள்' என்றார். உடனே, எங்களுடன் வந்திருந்த 'விடுதலை' பத்திரிகை மேலாளர் சம்பந்தம், 'பாலஸ்தீன விடுதலை இயக்கத்துக்கு ஆதரவாக தி.மு.க. பொதுக் குழுவில் தீர்மானம் போட்டிருக்கிறீர்களே. அதன் தலைவர் யாசர் அரபாத் உங்களை வந்து எப்போதாவது பார்த்திருக்கிறாரா?' என்றதும், கலைஞர் கடுமையாகக் கோபம் அடைந்தார்.

இலங்கை - இந்திய உடன்பாட்டை ஆதரித்து அறிக்கை கொடுக்குமாறு மறைந்த ஈழத் தலைவர் அமிர்தலிங்கத்திடம் கலைஞர் சொன்னாரா, இல்லையா? 'நீங்கள் எவ்வளவு தியாகம் செய்து வளர்த்திருப்பீர்கள்? உங்களை பின்னுக்குத் தள்ளிவிட்டு, அவர் (பிரபாகரன்) தன்னை தலைவன் எனப் பிரகடனம் செய்யப் பார்க்கிறார். இந்திய ராணுவம் அங்கு போய்விட்டது. இரண்டு நாள்களில் அவர் கொட்டத்தை ஒடுக்கி, அவரையும் பிடித்து உள்ளே போடுவார்கள். நீங்கள் தைரியமாக ஆதரித்து அறிக்கை கொடுங்கள்... நான் பார்த்துக்கொள்கிறேன்' என்று கலைஞர் சொன்னது உண்மையா, இல்லையா?

விடுதலைப் புலிகளுக்கு எம்.ஜி.ஆர். கோடிகளைக் கொட்டிக் கொடுத்தார். அதுபோல கலைஞரும் பணம் தருவார், வாங்கவேண்டும் என்று சில புலித் தம்பிகள் கூறியதும் அவர்களையே பிரபாகரன் அனுப்பிவைத்தார். அவர்கள் கலைஞரிடம் ரூ. 10 கோடி கேட்டார்கள். சீற்றமான கலைஞர், அவர்களை விரட்டி அனுப்பினார். எம்.ஜி.ஆர். கோடிகளைக் கொடுத்தபோது இவர் 50ஆயிரம் மட்டும் கொடுத்து, விளம்பரம் தேட முயன்றார். அதற்கு புலிகள் இசையவில்லை என்பதால், அவர்கள் மீது என்னென்னவோ பழிகளை சுமத்தினார்.'' என்று பகீர் தகவல்களாகத் தந்தார் நெடுமாறன்!

அடுத்து பழ.கருப்பையா பேசுகையில், ''தமிழகக் கவிஞர்கள் பலரும் சோரம் போய்விட்டார்கள், முதுகு சொறிவதே அவர்களின் முழு நேரத் தொழில் ஆகிவிட்டது. மாறாக, உணர்ச்சிக் கவிஞர் எழுதிய பாடல்கள், உலகத் தமிழர்களிடம் செல்ல வேண்டிய தகுதி படைத்தவை. வைகோவும், நெடுமாறனும் தவிர, வேறு எவரும் வந்து பாராட்டி இருந்தால் இந்த விழா மாசுபட்டுப்போய் இருக்கும்!'' என்றார்.


நெடுமாறன்

ஏற்புரை ஆற்றிய கவிஞர் காசிஆனந்தன், ''தமிழ் அழிந்துகொண்டு இருக்கிறது. தமிழ் ஈழம் பற்றிய எழுச்சி பரவிவரும் நேரத்தில், தமிழை அழிக்க வேண்டும் என எதிரி நினைக்கிறான். இந்த நேரத்தில் இங்கு தமிழில் ஆங்கிலம் கலந்து பேசுவது கூடுதலாகி வருகிறது. தமிழ் மண்ணில் தூய தமிழ் பேசும் தொலைக்காட்சிகளைப் பார்க்க முடியவில்லை. ஓர் அறிவிப்பாளர் ஆங்கிலத்தில், 'எனக்கு ஹேப்பி வேணும்' என்கிறாள். 'ஹேப் பினெஸ்' வேணும் என்று கூட சொல்லத் தெரியாதா? இன்னொருத்தி, 'உங்க சில்ரன்ஸ் எப்படி இருக்காங்க?' என்கிறாள். தமிழ்நாட்டில் மொழியை நித்தமும் கொலை செய்கிறார்கள். எதற்கெடுத்தாலும், 'ஸோ' போடுகிறான்... 'பட்' போடுகிறான். இந்த ஆங்கிலக் கலப்பு கலாசாரம் மிக ஆபத்தானது...''


காசி ஆனந்தன்

என்றார்,

''இதுவரை 40 ஆயிரம் விடுதலைப் புலிகள் ஆண்களும் பெண்களும் உயிர்க் கொடை தந்திருக்கிறார்கள். அந்த தியாகம் வீண் போகாது, தமிழ் ஈழம் மலர்வது உறுதி. அந்த மண்ணில் விடுதலை நெருப்பு அணைந்து போகாது!'' என்று அவர் ஆவேசமாக கூறினார்.

நிறைவாக மைக் பிடித்த வைகோ, ''காசி ஆனந்தன் எழுதிய களத்தில் கேட்கும் கீர்ணங்கள், புயல் கால ராகங்கள் ஆகிய ஒலிப் பேழைகளில் உள்ளதைப் போன்ற தமிழ் ஈழ விடுதலை நெருப்புப் பாடல்கள் இன்னும் நிறைய வர வேண்டும். அவற்றைத் தமிழக மக்களிடம் கொண்டு போய்ச் சேர்ப்பதில் நெடுமாறன் தலைமையில் நான் பங்காற்றுவேன். அண்மையில், என்னைப் புலம் பெயர்ந்த தமிழர்கள் பேச வரும்படி அழைத்தனர். நான் போகப் போவதில்லை. அந்த வேலையை தமிழகத்திலேயே செய்யப்போகிறேன். 'நிறைவாக இருக்கும் வரை மறைவாக இரு' என காசி ஆனந்தனின் வரிகள், பிரபாகரனுக்கும் பொருந்தும்!'' என்றதும், எழுந்த விசில் ஒலி அடங்கச் சில நிமிடங்கள் நீடித்தன. உடனே வைகோ, ''இந்த விசில் சத்தம் தமிழகம் முழுவதும் கேட்க வேண்டும்...'' என்று கேட்டுக்கொண்டது மொத்த சத்தத்தையும் மீறி ஒலித்தது!

**இரா.தமிழ்க்கனல்**


---

**HEALTH**



## இப்பெண்ணுக்கு 1000 இறாத்தல் எடையை அடைய ஆசையாம்

உலகில் எந்தப் பெண்ணும் நல்ல கட்டு மஸ்தான தோற்றமும் அழகு முடையவராகவே இருக்க விரும்புவார். ஆனால், நீங்கள் படத்தில் காணும் பெண்ணின் ஆசையோ வித்தியாசமாக உள்ளது. அமெரிக்காவிலுள்ள நியூயோர்ஸி மாநிலத்தைச் சேர்த்த டொன சிம்சன் என்பருக்கோ, தான் உலகிலேயே அதிக பருமனாக வர வேண்டும் என்ற ஆசை. மூன்று வருடங்களுக்கு முன்பு இவருக்கு ஜக்கிலைன் என்ற பெண் குழந்தை பிறந்ததும் இவரின் எடை 241 கிலோவாக இருந்தது. அப்போது இவர்தான் உலகிலேயே அதிக எடையுடைய பெண் என்ற கின்னஸ் உலக சாதனையை பெற்றிருந்தார். இப்போது 42 வயதுடைய சிம்சன் இன்னும் இரண்டு வருடங்களில் 1000 இறாத்தல் (450 கிலோ) எட்ட வேண்டும் என்று ஆசைப்படுகிறார். ''நான் 450 கிலோ நிறையை அடைய விரும்புகிறேன். இது கஷ்டமானதுதான். எனது மூன்றாவது மகளுடன் ஓடியாடி விளையாடுவதால் எனது எடை குறைகிறது'' என்று கவலைப்படுகிறார்.



.சீனாவில் நடந்த 60ஆவது உலகஅழகி ராணிப் போட்டியில், உலக அழகியாக தெரிவு செய்யப்பட்ட அமெரிக்க அழகி அலெக்ஸ்சாண்டிரா மில்ஸ் (மத்தியில்), இரண்டாவது இடத்தை வென்ற போஸ்சுவானா அழகி எம்மா வாரியூஸ் (இடது புறம்), 3ஆவது இடத்தைப் பெற்ற வெனிசுலா அழகி அட்றியானா வசினி (வலது புறம்) ஆகிய மூவரையும் படத்தில் காணலாம்.

தொகுப்பு : பாலா.


**கேள்வி:- வயது 54. எனது பெண் உறுப்பின் வாசலில் ஒரு கட்டி உள்ளது. வெள்ளையும் படுகிறது. பெண்நோயியல் நிபுணரிடம் ஆலோசனை பெற்றபோது - அவர் இது கருப்பை இறக்கம் (Uterine Proladse) அல்ல, சிறுநீர்ப்பையின் இறக்கம் என்று கருத்துத் தெரிவித்தார். அதற்குப் பரிகாரமாக Kegel Exercises என்று தசைகளை இறுக்கும் பயிற்சிகளைக் கற்றுத் தந்தார். அதேவேளை, எனது கருப்பை வாசலில் (Cervix) அழற்சி ஏற்பட்டிருப்பதாகவும் சொன்னார். அதற்கு Antibiotics மற்றும் பங்கசு (Fungus) மருந்தும் தந்தார். இத்தனை சிகிச்சை செய்தபின்னரும் எனக்கு வெள்ளைபடுவது குறையவில்லை. பரிகாரம் கூறவும்?**

அறியப்பட்டு, சிகிச்சை அளிக்கப்படவேண்டும். வெறும் Antibiotics, Anti Fungal மருந்துகளை உபயோகிப்பதால் குணம் காணலாம் என்பது தவறு. மேலும், உங்கள் வயதில் - கருப்பை வாசல் புற்றுநோய், கருப்பைப் புற்றுநோய் போன்ற பயங்கர கோளாறுகள் ஏற்படச் சாத்தியமுண்டு. எனவே, காலம் தாழ்த்தாது நல்லதொரு பெண் நோயியல் நிபுணரின் ஆலோசனையைப் பெறவும். சாதாரண கருப்பை வாசல் அழற்சி எனின், Cryotherapy மற்றும் Silver Nitrate Cauterization என்ற திசுக்களை அழிக்கும் சிகிச்சை மூலம் பலன் காணலாம்.

**கேள்வி:- எனது மனைவி வயது 50. சமீபத்தில் அவரது இரத்தப் பரிசோதனையின்போது அவரது இரும்புச் சத்து ஹீமோ குளோபின் வீதம் 16gm/dl என்று**

ஹோர்மோன் தூண்டுதல் எதுவுமின்றி, இந்தக் கோளாறு ஏற்படுகிறது. இது தவிர ஒட்சிசன் குறைவான சூழ்நிலை என்பது இதய நோய்கள், சுவாசப்பை நோய்கள், பரம்பரை இதய நோய்கள், அதி உயரமான மலைப்பாங்கான பிரதேசத்தில் வாழுதல், சிறுநீரக நோய்கள் என்பவற்றால் ஏற்படும்போது அதிகளவில் Erythropoietin சுரக்கப்பட்டு இரத்தச் சத்து அதிகமாகிறது.


இந்தக் கோளாறு ஏற்படும் வேளையில் இறுக்கமாகத் தோல்




# சிறுநீர்ப்பை இறக்கமும் ஆலோசனையும்

பதில்:- வயதின் காரணமாகவும், கஷ்டமான பிரசவங்களின் பின்னரும் வயிற்று மற்றும் யோனி வாசல் தசைகள் வலுவிழந்து போவதுண்டு. இதனால் - சிறுநீர்ப்பை, யோனி வாசல் மூலமாகக் கீழே இறங்குவதுண்டு. இதனை Cystocoele என்று குறிப்பிடுவார்கள்.

இந்த சிறுநீர்ப்பை




இறக்கம் சிறிதாக இருப்பின், அதனைக் குறைக்க Kegel பயிற்சிகள் பலன் அளிக்கும். வயிற்றை உள்ளே எக்கி - தினமும் குறைந்தது 10 தடவைகளாவது, ஒவ்வொரு தடவையும் பத்துத் தடவைகள் இந்தப் பயிற்சிகளைச் செய்தால்தான் பிரயோசனமாக இருக்கும். இந்தப் பயிற்சிகளினால் பலன்காண மூன்று மாதங்களாவது தொடர்ந்து செய்யவேண்டும். அத்துடன் வெள்ளைபடுவது, கருப்பை வாசலில் ஏற்படும் அழற்சி, புண் மற்றும் கருப்பை உட்சுவர் அழற்சி, ஹோர்மோன் கோளாறுகள் என்பவற்றாலும் ஏற்படலாம். இந்த வெள்ளைபடுதலுக்குச் சரியான காரணங்களை, ஸ்கான் பரிசோதனை, கருப்பை வாசல் ரிசுக்களைச் சுரண்டி எடுத்துச் செய்யப்படும் கஅக ரிசுப்பரி சோதனை மற்றும் சிலவேளைகளில் D&C எனப்படும் கருப்பைச் சுவர் திசுப் பரிசோதனை என்பவற்றைக் கொண்டு


இலவச மருத்துவ ஆலோசனைகளை

'சுடர் ஒளி' மூலம் வழங்குகிறார்

டாக்டர்

**எஸ்.அருள் ராமலிங்கம்**

**நீங்கள் கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி**

இலவச மருத்துவ ஆலோசனை

**'சுடர் ஒளி'**

**85, ஜயந்த மல்லிமாரய்ச்சி மாவத்தை கொழும்பு - 14.**


**காணப்பட்டது. அவரது செவ்விரத்தக் கலங்களின் எண்ணிக்கையும் 5.43 வீதம் அதிகரித்துக் காணப்பட்டது. கடந்த வருடத்திலிருந்து மாதவிலக்கு வருவதும் நின்று விட்டது. மருத்துவ ஆலோசனை பெறப்பட்ட போது, அவரது ஹீமோகுளோபின் அளவு அதிகரிப்பு ஒருவிதப் பிரச்சினையல்ல என்றும், அடிக்கடி இப்படி ஏற்படும் போது இரத்ததானம் (Blood Donation) செய்யும்படியும் அறிவுறுத்தினார்கள். எனது மனைவிக்கு ஏற்பட்டிருக்கும் கோளாறு எதனால் ஏற்பட்டது? இது பற்றி உங்கள் ஆலோசனையை வேண்டுகின்றேன்.**


பதில்:- ஒருவரின் செவ்விரத்தக் கலங்களின் (Red Cells) எண்ணிக்கை அதிகரித்தல் அவரது வயது, அவரது பால் (Sex) என்பவற்றில் பொதுவாகத் தங்கியுள்ளது. ஆண்களுக்கு பெண்ணிக்களைவிட இந்த எண்ணிக்கை அதிகரித்துக் காணப்படும். குழந்தைப் பருவத்தில் இந்த எண்ணிக்கையானது பெரியவர்களைவிட அதிகரித்துக் காணப்படும். இதனை மருத்துவத்தில் Erythrocytosis அல்லது Polycyathemia என்று கூறுவார்கள். இந்த அதிகரித்த எண்ணிக்கையால் இரத்தச் சத்து Haemuglobin அதிகரித்துக் காணப்படும்.

செவ்விரத்த கலங்கள் உற்பத்திக்கு சிறுநீரகத்தில் சுரக்கப்படும் Erythropoietin என்ற ஹோர்மோன் கட்டுப்படுத்துகிறது. இப்படி செவ்விரத்த கலன்களின் சுத்திகரிப்பு ஒரு நோய் அல்ல. சில வேளைகளில், வேறு ஒரு நோயின் பிரதி பலிப்பாக இந்த அதிகரித்த எண்ணிக்கை இருக்கலாம். எதேச்சையாக இரத்தப் பரிசோதனை செய்யும் போதுதான் இந்தப் பிரச்சினை அறியப்படுகிறது. எதுவித காரணமும் இன்றி ஏற்படும் அதிகரிப்புக்கு Polycyathemia Vera என்ற கோளாறு காரணமாகிறது. வழக்கமாகவே முன்னர் கூறிய Erythro Poietin

அழுத்தப்படும்போது இரத்தக்கசிவு ஏற்பட்டு நீலம் பாரித்தல் (Bruising), மலத்தில் இரத்தக்கறை, நிறை குறைவு, சரும அரிப்பு என்பன ஏற்படலாம்.

காரணங்கள் கண்டறியப்பட்டால், அவற்றைத் தவிர்க்கும்போது அல்லது அவற்றுக்குச் சிகிச்சையளிக்கும் போது குணம் காணலாம். காரணங்கள் எதுவுமின்றி இந்த கோளாறு ஏற்படின் உங்கள் மருத்துவர் கூறிய படி, இரத்தசத்து அதிகரித்துக் காணப்படும் வேளைகளில் இரத்த தானம் செய்து அளவை குறைத்துக் கொள்ளலாம்.

**கேள்வி:- பெண். வயது 39. குழந்தைகள் இருவர் இருக்கின்றனர். கடந்த பத்து வருடங்களாக வலது தொடையில் பின்புறத்தில் வலி ஏற்படுகிறது. சில வேளைகளில் வலி தாங்கமுடியாமலும் தொடையிலிருந்து பாதம் வரையிலும் பரந்து காணப்படுகிறது. நான் தினமும் ஒரு கிலோ மீட்டருக்கும் அதிகமாக நடக்கின்றேன். எனது பிரச்சினை என்ன?**



பதில்:- பத்து வருட காலமாக நீங்கள் உங்கள் பிரச்சினையை அசட்டை செய்து வந்ததன் காரணம் என்ன? ஒன்றில் இந்த வலி உங்களுக்கு பெரிய அளவில் பிரச்சினையாக இருக்கவில்லையா? எனினும் உங்களுக்கு ஏற்பட்டிருப்பது Piriformis Syndrome என்ற கோளாறு. Piriformis Muscle என்கின்ற தொடையிலுள்ள தசை Sciatic Nerve என்கின்ற கால்களுக்குச் செல்லும் நரம்பை அழுத்துவதால் இந்தப் பிரச்சினை ஏற்படுகிறது. இதனை Sciatica என்றும் கூறுவர்.

இதனால் ஏற்படும் வலி Buttocks என்கிற பிருஷ்ட பகுதியிலிருந்து பின்னங்கால் வரை செல்லும் தன்மையானது. குந்தி இருக்கும் போது, படிகளில் ஏறும் போது, குந்தி எழும்பும் Squatting செய்யும் பொழுது பிருஷ்டப் பகுதியில் வலி தொடர்ந்து ஏற்படும்.

இந்தக் கோளாறை நோயாளி சொல்லும் குணம் குறிகள் மூலமாகவும், நேரடி Physical Examiriation என்கின்ற உடல் பரிசோதனை மூலமாகவும் தான் அனுமானிக்கலாம். ஆனாலும் X Ray மற்றும் நரம்பு கடத்தல் பரிசோதனை என்கின்ற Nerve Conduction Tests மூலம் இந்த வலிக்கு வேறுகாரணங்கள் எதுவும் உள்ளதா என்பது கண்டறியப்பட வேண்டும்.

இந்தக் கோளாறுக்கு சில உடற் பயிற்சிகள் சிகிச்சை முறையாக கற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. Piriform Stretching - இந்தப் பயிற்சிகளை 5 செக்கன் தொடக்கம் 60 செக்கன் வரை செய்வதால், குறிப்பிட்ட தசை நீள்படுத்தப்பட்டு (Stretching) குணம் காணலாம். தினமும் பல தடவை இந்தப் பயிற்சிகளை செய்ய வேண்டும். Phsio Therapist என்பவர்களின் ஆலோசனை வழிகாட்டல் மூலம் இந்தப் பயிற்சிகளைக் கற்றுக்கொள்ளலாம்.

**கேள்வி:- பெண். வயது 47. எனது கழுத்துப் பகுதியில் சிறுசிறு கட்டிகளாக இரண்டு கட்டிகள் உள்ளன. அவை வலியற்றவையாக உள்ளன. இதற்கு காரணம் என்ன? பரிகாரம் கூறவும்.**

பதில்:- கழுத்தில் உள்ள கட்டிகள் பொதுவாக Lymph Nodes எனப்படும் நிணநீர் சுரப்புக் கட்டிகளாக இருக்கலாம் இவை கழுத்து, தலைப்பகுதிகளில் ஏற்படும் தொற்றுகளால், வீக்கம் பெறுகின்றன. மேலும் இவை வீக்கம் பெறும்போது வலியும் ஏற்படும். ஒரு சத்திர சிகிச்சை நிபுணரின் ஆலோசனை பெறவும். அவர் ஊசிமூலம் இந்தக் கட்டிகளின் கலன்களை உறிஞ்சி எடுத்து, பரிசோதனை செய்து கட்டிகள் வந்தமைக்கான காரணங்களைக் கண்டறிவார். இந்தப் பரிசோதனைக்கு Fine Needle Aspiration Cytology FNAC என்று பெயர். இப்பரிசோதனை மூலமும் சரியாகக் காரணம் கண்டறியப்படா விடில், கட்டிகளை சத்திர சிகிச்சை மூலம் அகற்றி முழுமையாகப் பரிசோதனை செய்ய வேண்டும். அநேகமாக கழுத்தடியில் காணப்படும் இந்தக் கட்டிகளுக்கு Tuberculosis என்கின்ற காசநோய் காரணமாக இருக்கலாம். எனவே, விசேட வைத்திய நிபுணர்கள், சத்திர சிகிச்சை நிபுணர், ENT என்கின்ற காது, நாசி, தொண்டை நிபுணர்கள் போன்றோரின் ஆலோசனை அவசியம் தேவை.

# என் பிள்ளைகள் வருவார்களா?

தற்போது வல்வெட்டித்துறை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் பிரபாகரனின் தாயார் பார்வதி அம்மாள், இறுதிக் காலத்தில் தன்னைப் பார்ப்பதற்குத் தனது பிள்ளைகள் வருவார்களா எனப் புத்திர பாசத்தில் ஏங்குகிறார்!

பிரபாகரனின் தந்தை திருவேங்கடம் வேலுப்பிள்ளை, கடந்த ஜனவரியில் இறந்ததில் இருந்தே, தனியாகக் இருந்து அவதிப்படுகிறார் பார்வதி அம்மாள். கணவன் இறந்ததை உணர்ந்தும் உணராமலும் அவரை நினைத்தே அழுதுகொண்டு இருந்தவரை, ஒருவாறு தேற்றி மருத்துவ சிகிச்சைக்காக மார்ச் மாதம் 2ஆம் திகதி மலேஷியாவுக்குக் கூட்டிச்சென்றார்கள். அங்கு இருந்து தமிழகத்துக்கு அழைத்துவந்து, திருச்சியில் சிகிச்சை அளிக்கவும் அவரது குடும்பத்தினர் திட்டமிட்டிருந்தனர். ஏப்ரல் மாதம் 16ஆம் திகதி இரவு சென்னை விமான நிலையத்துக்கு வந்தவரை, கீழே இறங்கவிடாமல் திருப்பியனுப்பிவிட்டது இந்திய அரசு. பின்னர் மலேஷியாவில் இருந்து இலங்கைக்கு அழைத்துவரப்பட்ட பார்வதி அம்மாள், அவரது சொந்த ஊரான வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலையில் தற்போது சிகிச்சை பெற்றுவருகிறார்.

பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டுள்ள அவர், ''என்னைப் பார்க்க எனது பிள்ளைகள் வரமாட்டார்களா?'' எனக் கேட்டு, 82 வயதில் சிறு குழந்தையைப் போலக் கண்ணீர் விடுகிறார். கடந்த ஒரு மாத காலமாக அவரின் உடல்நிலை நாளுக்கு நாள் மோசமாகி வருகிறது.

கடந்த 10 மாதங்களாகஅவருக்குச் சிகிச்சை அளித்துவரும் வல்வெட்டித் துறை மாவட்ட வைத்தியசாலை அதிகாரி டாக்டர் மயிலேறும் பெருமாள் கூறியவை வருமாறு:-

''பார்வதி அம்மாவுக்கு தண்ணீர் உணவுதான் கொடுக்கின்றோம். பால், திராட்சைப் பழச்சாறு, நெல்லிக்காய் சூப், இடையிடையே அப்பிள், பிஸ்கெட்டுகளைக் கொடுக்கிறோம். ஐயா வேலுப்பிள்ளையை நினைச்சு நினைச்சு, 'என்ட ஐயா என்ட ஐயா' என்று அடிக்கடி அழுகிறார். இந்த வைத்தியசாலையில் என்னென்ன செய்யமுடியுமோ எல்லாத்தையும் அவருக்குச் செய்து கொடுக்கின்றோம். தேவையான சிகிச்சைகளை வழங்குகிறோம். ஆனால், அவருடைய மனப்பிரச்சினைக்குத்தான் எங்களால் எதுவும் செய்ய முடியவில்லை. புத்திர பாசத்தால் துடிக்கிறார். ஒரு மாதமாக மிகவும் அடம்பிடிக்கிறார்.

கனடாவில் இருக்கின்ற மகள் வினோதினியும், டென்மார்க்கில் உள்ள மகன் மனோகரனும் இரண்டொரு நாளுக்கு ஒரு முறை தாயாருடன் பேசிக்கொண்டுதான் இருக்கிறார்கள். தினம் தினம் பேசினாலும் என்ன பிரயோசனம்? பெற்ற பிள்ளைகள் இருந்தும் தன்னை வந்து பார்க்கவில்லை என்ற கவலை அவருக்கு. உறவினர்கள் அவ்வப்போது வந்துபோகும்போது, அவரது முகத்தில் அப்படி ஒரு பிரகாசம். இதுதான் இப்போது அவருக்கு அருமருந்து. ஆனால், பிள்ளைகள் இரண்டு பேரும் இங்கே வந்தால் எவனாவது சுட்டுப்போடுவான் என்ற பயம். இவ்வளவு நடந்த பிறகும் இனியும் ஏதாவது நடந்துவிடுமா என்ன..!

வினோதினியோ, மனோகரனோ வெளிநாட்டு பிரஜைகள். கொழும்பு விமான நிலையத்தில் வந்திறங்கும் வெளிநாட்டவர், பாதுகாப்புத்துறை அனுமதி பெற்றுத்தான் இங்கே வரமுடியும். அப்படி அவர்கள் வரும்போது கொழும்பில் இருந்து பலாலிக்கு விமான நிலையம் வழியாகப் பாதுகாப்பாக வரமுடியும். இவர்களின் பாதுகாப்புக்குப் பங்கம் வராமல் பார்க்கவும் முடியும். 10 மாதங்களாக நான்தான் அம்மாவின் சிகிச்சைக்குப் பொறுப்பு என்ற முறையில், இதை என்னால் செய்யமுடியும்.


'அம்மாவைக் கனடாவுக்கு அழைத்துக்கொள்கிறோம்...' என்று வினோதினி சொல்கிறார். எத்தனை மாதமாக முயற்சி செய்துகொண்டு இருப்பது? அதனால், 'நீங்கள் வராவிட்டாலும் உங்கள் பிள்ளைகளையாவது அனுப்புங்கள். அவங்களைப் பார்த்து அந்த அம்மா சந்தோஷமா இருப்பாங்க - என்று கேட்டேன். அதற்கும் இரண்டு பிள்ளைகளும் உறுதியான பதில் சொல்லவில்லை. அந்த அம்மாவுக்கு நாளுக்கு நாள் வேகம் குறைந்துகொண்டுபோகிறது. எத்தனை நாளைக்குத்தான் வெற்றுச் சமாதானம் சொல்லமுடியும்?'' - என்றார் அவர்.



பார்வதி அம்மாளுடன் டாக்டர் மயிலேறும் பெருமாள்

தற்போது, பார்வதி அம்மாளை கவனிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்ட முன்னாள் யாழ்ப்பாண எம்.பியும் தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பின் பொதுச்செயலாளருமான சிவாஜிலிங்கம் தெரிவிக்கையில், ''அம்மா சிகிச்சை பெறுகின்ற வல்வெட்டித்துறை வைத்தியசாலையில், 94ஆம் ஆண்டு, தரைக்குக் கீழே விடுதலைப் புலிகள் அறுவைச் சிகிச்சை கூடத்தை உருவாக்கினார்கள். அதை அவர்கள் பயன்படுத்தத் தொடங்கும்முன்பே இராணுவம், யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியது. அந்தக் கூடத்தைப் பார்க்க தற்போது சுற்றுலாவாசிகளாக வரும் முகமறியாத சிங்கள மக்கள்கூட, அம்மாவையும் பார்த்துவிட்டுப் போகிறார்கள். சிலர் தொலைவில் நின்று பார்த்துவிட்டுப் போறாங்க. சிலர் காலில் விழுந்து கும்பிட்டுவிட்டும் போறாங்க. அந்த அம்மாவின் ஒரே ஏக்கம், தன் பிள்ளைகளைப் பார்ப்பதுதான். எப்படியோ, எமது தாயைக் கடைசிக் காலத்தில் நாம்தானே கண்கலங்காமல் வைத்திருக்க வேணும்...'' என்றார் சிவாஜிலிங்கம்.

# மருந்து... மாத்திரை... உணவு!



சில நோய்களுக்கான மருந்துகளை உட்கொள்ளும்போது மிகுந்த ஆரோக்கியம் தருவதாக நம்பும் உணவு வகைகளைக்கூட சாப்பிடக்கூடாது. சாப்பிட்டால் எதிர்விளைவுகள் ஏற்பட்டுவிடும்.

✱ தொற்றுநோயின் பாதிப்புக்காக 'ஆன்ரிபயற்றிக்' மருந்துகள் உட்கொள்வோர், பால், 'யோகர்ட்' உள்ளிட்ட பால் சார்ந்த உணவுப் பொருட்களைத் தவிர்க்கவேண்டும். இறைச்சியையும் ஒதுக்கிவிடலாம்.

✱ வயிற்றுப்போக்கை நிறுத்துவதற்கான மருந்துகளை வேறு எந்த மருந்துகளுடனும், குறிப்பாக 'ஆன்ரிபயற்றிக்'களுடன் எடுத்துக் கொள்ளாதீர்கள். இதனால் வயிற்றுப் போக்கு இன்னும் மோசமாகி விடும்.

✱ ஒவ்வாமைக்காக மருந்து உட்கொள்ளும்போது, நெருப்பில் வேகவைக்கப்பட்ட இறைச்சி, பசலைக்கீரை, முட்டை, வாழைப்பழம், ஸ்ட்ரோபரி போன்றவற்றைத் தவிர்ப்பது நல்லது.

✱ தைராய்ட் பிரச்சினைக்கு மருந்து எடுத்துக்கொள்ளும்போது, கால்சியம் செறிந்த உணவுகளான முட்டைக்கோஸ், சோயாபீன்ஸ் போன்ற உணவுகளை தவிர்த்து விடுங்கள். வேறு வழியின்றி சாப்பிடுவதாக இருந்தாலும், தைராய்ட் மருந்து உட்கொண்டு பல மணி நேரம் கழித்து மிகக் குறைந்த அளவையே சாப்பிடவேண்டும்.

✱ நீங்கள் வலிநிவாரணி மருந்து எடுத்துக் கொண்டிருக்கிறீர்களா? அதிகமாக இலைக் காய்கறிகளை சாப்பிடாதீர்கள். அவை மருந்தின் வேகத்தை மட்டுப்படுத்தும்.

✱ மருந்துகளை வெந்நீர் அல்லது சூடான பானத்துடன் உட்கொள்ளும் வழக்கமுள்ளவரா? அதைத் தவிர்த்திடுங்கள். சூடானது, மாத்திரைகளின் திறனைப் பாதிக்கலாம்.

✱ மருந்தை உட்கொள்ளும்போது கஷ்டம் தெரியாமலிருக்க அதை உணவுடன் கலந்து சாப்பிட நினைக்கிறீர்களா? வேண்டாம். வைத்தியரின் ஆலோசனை இல்லாமல் அப்படிச் சாப்படவேண்டாம்.

# குறைந்தது 6 மணிநேரம் நித்திரை செய்கிறீர்களா?



ஒரு வளர்ந்த மனிதன் குறைந்தது 6 மணித்தியாலங்கள் (குழந்தைகள், சிறுவர்கள் 8 தொடக்கம் 10 மணித்தியாலங்கள்) நித்திரை செய்யவேண்டுமாம். அதற்குக் குறைவாக நித்திரை செய்பவர்களின் நாடிகள் தடிப்படைந்து பின்னர் இதயம் சம்பந்தமான நோய்கள் ஏற்படுவதாக ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

போதிய நித்திரையின்றி வாழ்பவர்கள் மத்தியில் ஓர் ஆய்வு நடத்தப்பட்டது. இதில் இருந்து குறைந்தளவு நேரம் நித்திரை செய்பவர்களுக்கு நாடி தடிப்படையும் நிலை அவதானிக்கப்பட்டுள்ளது.


போதிய அளவு நித்திரை இன்மைக்கு மன அழுத்தமும் அதனால் சுரக்கப்படும் ஹோமோனும் நித்திரையின் அளவைக் குறைத்து நாடிகளில் கல்சியம் படிவதை அதிகரித்து நாடியைத் தடிப்படையச் செய்வதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

எது எப்படி இருப்பினும் போதிய நித்திரை என்பது குருதிச் சுற்றோட்டம் மற்றும் இதயத் தொழிற்பாட்டைச் சீராக்க உதவுகிறது என்பதை ஆணித்தரமாகக் கூறமுடியும் என்று ஆய்வாளர்கள் கருத்துவெளியிட்டுள்ளனர்.

எனவே வேலை வேலை என்று தூக்கத்தைத் தொலைக்காது இரவில் போதியளவு - குறைந்தது 6 மணித்தியாலங்கள் தூங்குவதை வழக்கப்படுத்திக்கொள்ளுங்கள்.

குறிப்பாக மது அருந்திவிட்டு பின்னர் காலையில் விழித்தெழுபவர்கள் இவ்வாறான பாதிப்புகளுக்கு அதிகம் ஆளாகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## கின்னஸ் சாதனை படைத்த மலைப்பாம்பு மரணம்



அமெரிக்காவிலுள்ள ஒகையோ மாநிலத்தில் உள்ள மிருகக்காட்சிச் சாலையில் வளர்த்துவந்த 'வுழுவ்பி' என்ற மலைப்பாம்பு இறந்துவிட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

7.3 மீற்றர் நீளமான இப்பாம்பு 136 கிலோ எடை கொண்டது. உலகிலேயே மிகவும் நீளமான பாம்பு என்ற கின்னஸ் சாதனையும் பெற்றிருந்தது. இது நாம் பயணிக்கும் வான் அளவு நீளத்தையும் ஒரு மின்சாரக் கம்பத்தின் பருமனையும் உடையதாகும்.

2007ஆம் ஆண்டு இப்பாம்புஅமெரிக்காவிலுள்ள மிருகக்காட்சிச் சாலையில் சேர்க்கப்பட்டது.

இந்தப் பாம்புதான் இதுவரைக்கும் உலகில் மிக நீளமான பாம்பாகக் கணிக்கப்பட்டுவந்தது.

## உலகின் மிகப்பெரிய முதலை



உலகில் இதுவரை கண்டுபிடிக்கப்பட்டவைகளில் மிகப்பெரிய முதலை ஒன்று புளோரிடாவில் பிடிக்கப்பட்டுள்ளது. இந்த முதலை இதுவரை பிடிக்கப்பட்ட முதலைகளில் மிகப் பெரிய முதலையாகக் கருதப்படுவதோடு உலக சாதனை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த முதலையின் வயது 60 ஆக இருக்கலாம் என நம்பப்படுகின்றது. இதுவரை உலகத்தில் மிக நீளமாக கருதப்பட்ட முதலையின் சாதனை இதன் மூலம் முறியடிக்கப்பட்டுள்ளது.


## அம்பானியின் புதிய செல்வந்த மாளிகை



இந்தியக் கோடீஸ்வரர்களில் முதலிடத்தில் இருப்பவர் முகேஸ் அம்பானி. 2014ஆம் ஆண்டளவில் இவர் உலகிலேயே முதல் செல்வந்தராகக் கூடிய சாத்தியங்கள் உள்ளன. இவர் அண்மையில் 100 கோடி அமெரிக்க டொலர் பெறுமதியில் புதிய மாளிகை ஒன்றை மும்பைப் புறநகர்ப் பகுதியில் அமைத்துக் குடிபுகுந்துள்ளார். இருபத்தேழு அடுக்குமாடிகளைக் கொண்ட இப்புதிய மாளிகை முன்னைய காலங்களில் பிரெஞ்சு மன்னர்கள், அரசர்கள் வாழ்ந்த 'பலஸ் ஒவ் வேர்சயில்ஸ்' அரண்மனையிலும் பெரியது.

இங்கே வேலைசெய்யும் 600 ஊழியர்களின் சராசரி நாட்சம்பளம் 2 அமெரிக்க டொலர்கள் (225 ரூபா) ஆகும். உயர் மாடியில் வசிக்கும் இவர் தனது வர்த்தக நடிவடிக்கைகளைக் கவனித்து சகல வசதிகளுடனும் வாழ்ந்து வருகிறார். 400,000 சதுர அடி விஸ்தீரம் கொண்ட இப்புதிய மாளிகையில் 160 கார்களை நிறுத்தக்கூடிய வசதியும், 3 ஹெலிக்கொப்டர்கள் தரையிறங்கும் வசியும் உள்ளது. அவசரம் ஏற்பட்டால் இவரது குடும்பமும் ஊழியர்களும் தங்குவதற்கு வசதியாக தியேட்டர்கள், டான்ஸ் ஸ்ரூடியோக்கள், மருத்துவ வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அத்தோடு பாரிய பூந்தோட்டமும் உருவாக்கப்பட்டுள்ளது.

## ஜேம்ஸ் பொண்டின் கார் 26 லட்சம் பிரிட்டிஷ் பவுண்ஸுக்கு விற்பனை




பிரபல நடிகர் சீன் கொனரி (ஜேம்ஸ் பொண்ட்) 'கோல்ட் பிங்கர்', 'தண்டர்போல்' ஆகிய படங்களில் உளவாளியாக நடித்துப் பலரது உள்ளங்களையும் கவர்ந்தவர்.

இவரது அஸ்ரன் மார்ட்டீன் டிபி 5 கார் கவர்ச்சியும், விநோதமான வாகனம்தான். இவருடைய வெள்ளி நிறக் காரில் இருக்கும் நம்பர் தகடு சுழலக்கூடியது. மெசின்கன் துப்பாக்கிகளை மறைத்து வைக்கக்கூடியது.

அத்தோடு ஓர் ஆபத்து நிகழும்போது இவரது கார் சீற்றிலிருந்து சாரதி தூக்கி எறியப்படுவார்.

கடந்த வாரம் லண்டனில் நடந்த ஏலத்தில் இக்கார் விற்பனையானது. முதலில் இக்காரை 1969ஆம் ஆண்டு அமெரிக்க ஒலிபரப்பாளர் ஜெரில் 12,000 அமெரிக்க டொலருக்கு வாங்கினார்.

கடந்த 40 ஆண்டுகளாக அமெரிக்காவில் இருந்த இக்கார் மூலம், தான் அதிக சந்தோஷமடைந்ததாக இவர் கூறுகிறார். இக்காரின் விற்பனை மூலம் கிடைக்கும் பணத்தைத் தானம், தரும நோக்கங்களுக்குப் பயன்படுத்தப் போவதாக ஜெரி லீ கூறுகிறார்.

## பேஸ்புக் பாவிக்கும்போது இடையூறு செய்த குழந்தையைக் கொன்ற தாய்






'பேஸ்புக்'கில் இணைந்திருந்த போது இடையூறு விளைவித்த குழந்தையைக் கொன்ற தாய், தனது குற்றத்தை ஒப்புக்கொண்டுள்ளார்.

அமெரிக்க வட புளோரிடாவைச் சேர்ந்த அலெக்ஸேண்ரா டொபயஸ் எனும் இப்பெண் 'பேஸ்புக்'கில் உள்ள 'பார்ம்வெளி' எனும் பிரபல கணினி விளையாட்டில் ஈடுபட்டிருந்தார். அந்நேரத்தில் இவரது 3 மாதங்களேயான குழந்தை அழுதது. இதன்போது கோபமடைந்த அலெக்ஸேண்ரா டொபயஸ் ஆத்திரத்தில் குழந்தையைத் தூக்கி வேகமாகக் குலுக்கவே, அதன் தலை கணினியில் மோதி குழந்தை உயிரிழந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இவருக்கான தீர்ப்பு எதிர்வரும் டிசம்பர் மாதம் விதிக்கப்படவுள்ளது. இவருக்கு சுமார் 25 முதல் 50 வருடங்கள் வரையிலான சிறைத்தண்டனை விதிக்கப்படலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## டென்னிஸ் புயல் ஷரபோவாவுக்கு டும்... டும்... டும்...!

டென்னிஸ் புயல் மரியா ஷரபோவாவுக்கு டும்... டும்... டும்.... அமெரிக்காவின் கூடைப்பந்தாட்ட வீரர் சாஷா வுஜாசிக்கைத் திருமணம் செய்துகொள்ள இருக்கிறார் மரியா ஷரபோவா. கையில் மின்னும் புது மோதிரத்தைப் பற்றிய பத்திரிகையாளர்களின் கேள்விகளுக்கு மரியா மௌனம் காத்துவந்தார். ஆனால், சாஷாவே 'ஆமாம்... நிச்சயதார்த்தம் முடிந்துவிட்டது. விரைவில் திருமணம்' என இரகசித்தை வெளிப்படையாகத் தெரிவித்திருக்கிறார்.



# ஏற்றிவைத்த தெய்வத்தாய்...

வன்னிமகள் எஸ்.கே.சஞ்சிகா



இன்றைய நாள் பெறுமதியானது. பலவிதமான கஷ்டங்களையும், தடைகளையும் தாண்டி வந்து வெற்றிக்கனி பெறும் நாளிது. ஆயிரம் பேருக்கு ஆயிரம் காரணகாரியங்கள் வாழ்க்கையில் வந்து போகும். ஒவ்வொரு காரணத்துக்குள்ளும் ஒவ்வொரு உந்துவிசை இருக்கும். விசையால் உந்தப்பட்டவன் வெல்கிறான். தள்ளப்பட்டவன் சாய்கிறான். கடவுளின் மீது நம்பிக்கை கொண்டவன் உண்மையில் உயர்த்தப்படுகிறான்; வெல்கிறான். டொல்பிதாவும் கடவுளின் ஆசீர்வாதம் நிரம்பப் பெற்றவள். அவளுக்கு சிறுவயதில் தாய், தந்தையை இழக்கும் துர்ப்பாக்கிய நிலை. கருணையுள்ளங்களின் உதவியால் ஒரு தனியார் அநாதை விடுதி அவளுக்கு அடைக்கலம் கொடுத்தது. அந்த விடுதியை அநாதை விடுதி என அவள் நினைத்ததில்லை. பலநூறு சகோதரங்களையும், உறவுகளையும் தந்த புனிதமான இடமாக அவள் கருதினாள். அந்த அருமையான இடத்தின் நிர்வாகியும் பெறுமதியானவர்.

அதிகாலையிலேயே சீக்கிரமாக எழுந்து காலைக் கடமைகளை முடித்துச் சேலை ஒன்றைச் சீராக உடுத்தி முடித்துப் பொட்டிட்டு, நிலைக்கண்ணாடியில் தன்னுருவத்தைக் கண்டு சிலிர்த்துக்கொண்டாள். தோழிகளின் கிண்டலும் பாராட்டுக்களும் மனமகிழ்வைத் தர பல்கலைக்கழக வளாகத்தில் காலடியை எடுத்து வைக்கிறாள். மண்டபம் நிரம்பிவழிகிறது. பத்திரிகையாளர்கள், பேராசிரியர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள், அறிஞர்கள் அவையில் அவளுக்கும் ஓர் இடம். கடவுளே இந்த அற்புதமான நிகழ்வைக்காண என்னுடைய வளர்ப்புத் தாய் கூட அருகிலில்லையே என ஒரு தடவை ஏங்கினாள்.

அவளுடைய பெயர் வாசிக்கப்படுகிறது. செல்வி காந்தசிவம் - டொல்பிதா (முதுகலைமானிப் பட்டம்) மெல்ல எழுந்துசென்று அந்த மரியாதையை ஏற்றுக்கொள்கிறாள். தன்னுடைய முழு வளர்ச்சிக்கும் காரணமான தன்விடுதி நிர்வாகியம்மாவை நெஞ்சம் நிறைய நினைத்தபொழுது... தன் முன்னேற்ற வளர்ச்சிக்கு உந்துதல் கொடுத்த ஆசான்களை நினைத்தபொழுது கண்ணீர்ப் பூக்கள் மாலையாகி கைக்குட்டைக்குள் அடைக்கலமாகின. நினைவுகள் சுழன்றன.

* * *

அவளுக்கு பன்னிரண்டு வயது. அந்த தனியார் பாடசாலையில் இருந்து பல பாடசாலைகளுக்கிடையிலான தேசிய போட்டி ஒன்றுக்கு அவளுடைய பெயரும் தெரிவாகியிருந்தது. பல்வேறுபட்ட மாணவர்களும், பல்வேறு திறனுடையவர்களாக மிளிர்ந்த அந்தப் பாடசாலையில் அவள் ஒரு பண்பான - அடக்கமான பிள்ளையாகத் திகழ்ந்தாள். குடத்துள் மறைக்கப்பட்ட விளக்குப் போலிருந்த டொல்பிதாவை தட்டி மேலிட ஒளிரவைத்த லீலா ஆசிரியர் மீது அவளுக்கு அளவிடமுடியாத அன்பு.

''உங்களால் முடியும். நீர் வெல்லுவீர்'' என ஆசிரியர் கூறி வழிப்படுத்தியது அவளுக்கு புதுவித உற்சாகத்தை ஏற்படுத்தியது. உற்சாகமாகவும் ஆழ்ந்துணர்ந்தும் கற்றாள். போட்டியில் உண்மையாகவே தோற்றினாள். பெறுபெறுகள் நாளிதழ் ஒன்றில் வந்தபோது, அவளால் நம்பவே முடியவில்லை. அவள்தான் தேசிய மட்டத்தில் தன்னுடைய வயதுப் பிரிவில் முதலிடம் பெற்ற மாணவி என்றபோது மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. அந்த நிகழ்வு ஒருவித சிலிர்ப்பையும், பலரது பாராட்டு வார்த்தைகளையும், ஒருவித சக்தியையும் தோற்றுவித்தது.

முதன்மையான அரங்கமொன்றில் மதிப்புக்குரிய தலைவர் ஒருவரால் அவள் தங்கப்பதக்கம் சூட்டப்பட்டு கௌரவிக்கப்பட்டாள். அவளுக்கு உற்சாகமூட்டிய லீலா ஆசிரியரை நன்றியோடு நினைத்தாள். சாதனைக்கு பின்னர் பல சோதனைகள் அவளைச் சூழத்தொடங்கின.

எதிர்பார்த்த மாணவர்கள் எந்தவொரு பரிசும் பெறாமல் எதிர்பாராத ஒருத்தி தங்கப்பதக்கம் பெற்றதைச் சில புத்திஜீவிகளால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. அதன் வெளிப்பாடகப் பலவிதமான இடைஞ்சல்களை ஏற்படுத்தத் தொடங்கினர்கள்.

ஒருநாள் அவளது பாதணிகளைக் காணவில்லை. மழைகாலம் என்பதால் சப்பாத்து அணியாமல், செருப்புடன் வேறு நடமாடச் சொல்லியிருக்கிறார்கள். துரதிஷ்டம் அதனைக் காணவில்லை. யாருமே மாறியும் போடவில்லை. என்ன மாயமோ அது பறந்துவிட்டதோ? அவளுக்கு நன்றாக நினைவிருக்கிறது, படிப்பகத்துக்குள் நுழையும்போதுதான் பாதணிகளைக் கழற்றி உள்ளேசென்றது. திரும்பியபோது, பாதணிகள் பறந்துவிட்டன. ஒருநாள் முழுவதுமாகப் பாதணிகளைத் தேடியாயிற்று. பாதணிகள் இல்லாவிட்டால் பாடசாலை போகமுடியாதே. பாதணிகள் தொலைந்தமையில் ஏதோ சூழ்ச்சியுள்ளது. இனிப் பாதணிகள் அவளிடம் வரப்போவதில்லை. அதனால், தென்னம்மட்டைகளை அழகாக வெட்டி, பாதணிகளாக்கி, தென்னம் நாரினால் அழகாக பாதணிக்குரிய பிடிமானங்களையும் உருவாக்கி, அதனைப் பத்திரமாக மறைத்து வைத்துக்கொண்டாள்.

அதிகாலை புலர்ந்தது. எல்லா மாணவர்களும் வெள்ளைச் சீருடைக்குள் புகுந்தபோது அவளும் புகுந்துகொண்டாள். அழகாகத் தலைவாரிப் பொட்டிட்டாள். ''செருப்பில்லாமல் பாடசாலைக்குள் போகவிடமாட்டேன்'' என ஊழியர் ஒருவர் கண்டிப்பாகக் கூறியபோது அவள் மௌனமானாள். எல்லா மாணவர்களும் பாடசாலைக்கு ஆயத்தமாகி, வரிசையில் நின்றபோது, ஓடிப்போய் வரிசையில் நின்றுகொண்டாள். அவளுடைய நம்பிக்கை ஒன்றே ஒன்றுதான். பாடசாலைக்குப் போகும்போது மேலதிகாரியின் கண்கள் யாவரையும் அன்புடன் நோக்கும். அதற்காகத்தான் இந்தப் போராட்டம்.

மேலதிகாரி அலுவலகத்திலிருந்து வெளிவருவதைக் கண்டவுடன் தனது புத்தகப்பைக்குள் ஒளித்து வைத்திருந்த தென்னம்மட்டைகளால் செய்த பாதணிகளை கால்களில் மாட்டிக்கொண்டாள். அதிகாரியின் பார்வை படமுன்னர் சகமாணவரின் சிரிப்பும், கேலியும் அவளை ஒன்றும் செய்துவிடவில்லை. அவளுக்குத் தேவை கல்வி. அதில் மூச்சாக இருந்தாள். ராமர், லட்சுமணர், முனிவர்கள் முற்காலத்தில் பாதரட்சைதானே அணிந்திருந்தார்கள், என கிண்டல் செய்த தோழியருக்குப் பதிலளித்தாள்.

மேலதிகாரி அவளை ஒரு தடவை நோக்கினார். அவளுடைய கல்வித் தாகத்தை அளவிட்டுக்கொண்டார். உடனடியாகப் பாதணிகளை புதிதாக அவளுக்குக் கொடுக்க விரும்பவில்லை. ஏனெனில், மற்றைய மாணவர்களும் அதனைப் பின்பற்ற விரும்புவர். அது நிர்வாக ஒழுங்குக்கு ஏற்றதல்ல.

மூன்று நாட்களாக கிண்டல்களைச் சகித்து பாடசாலைக்குப் போய்வந்தாள். அந்த மர அடிகளை மிகக் கவனமாகப் பாதுகாத்தாள். அவளது புகழும் மேலோங்கி புதிய பாதணிகளும் அவளுக்குக் கிடைத்தன.

பாடசாலை விடுமுறை நாள். தேர்ச்சி அறிக்கையை எல்லா மாணவர்களும் விடுதியின் மேற்பார்வையாளரிடம் கையளித்தனர். டொல்பிதாவும் தனது தேர்ச்சி அறிக்கையை அவரிடம் கொடுத்தாள். பின்னர் பாடசாலை ஆரம்பமானபோது, சகல மாணவர்களது தேர்ச்சி அறிக்கைகளும் கொடுக்கப்பட்டன. அவளுக்கு மட்டும் கொடுக்கப்படவில்லை. அவளது தேர்ச்சி அறிக்கையை தரவேயில்லை என மேற்பார்வையாளர் கூறியதை சக மாணவர்களும் ஏற்றுக் கொள்ளவில்லை. கேள்வி கேட்டால் தண்டனைக் குள்ளாகுவீர்கள் - என ஏனைய மாணவர்களுக்கு அச்சுறுத்தல் ஒன்றை மேற்பார்வையாளர் விடுத்தபோது சக மாணவர்கள் பேசா மடந்தையராகினர். ''ஒரு தடவை உங்கட அலுமாரியை நன்றாகத் தேடிப்பாருங்கள்'' என டொல்பிதா கெஞ்சினாள். இறுதியில் ஆசிரியரிடம் அடி, அதிபரிடம் அடி. அவளது கரங்கள் சிவந்து தடித்தன. சக தோழியர் இரத்தக்கண்ணீர் வடித்தனர்.

டொல்பிதா மீது அதிபரும் மேற்பார்வையாளரும் கோபமுற ஏதோ காரணமுண்டு என்பதை சக மாணவர்கள் புரிந்துகொண்டனர். அதனால் டொல்பிதா அவர்களது நடத்தைப் பிறழ்வை வெளியிட்டு தன்னை ஆளாக்கிய விடுதியின் புகழினைக் கெடுத்துக்கொள்ளவிரும்பவில்லை.

''அதிபர் உங்களை வரட்டாம்'' என்ற அறிவிப்பைக் கேட்டு மிக மிக அச்சமுற்றவளாய் அலுவலகத்துக்குள் நுழைந்தாள். அவளுடைய தேர்ச்சி அறிக்கை எங்கே எனக் கேட்டு அதிபர் அடித்தார். தற்காலிகமாக ஆசிரியர்களால் பூரணப்படுத்தப்பட்ட தேர்ச்சி அறிக்கையை அதிபரே கிழித்தார். பின்னர் டொல்பிதா கிழித்ததாகப் பழி சுமத்தினார். அடிகள், வேதனைகள் தாங்கமுடியாது டொல்பிதா கதறினாள்.

தேர்ச்சி அறிக்கையைக் கிழித்தது தவறு. ஆதலால் டொல்பிதா பகிரங்கமாக மேடையேறிப் பொதுமன்னிப்புக் கேட்கவேண்டும். கேட்டால் விடுதியிலும், பாடசாலையிலும் தங்கலாம்; படிக்கலாம். இல்லாதுவிட்டால் வேறிடம் மாற்றப்படும் சந்தர்ப்பம் ஏற்படும் என மேலதிகாரி மிகக் கண்டிப்பாகக் கூறிவிட்டார். மேலதிகாரியின் கண்டிப்பான உத்தரவு அவளுக்கு அச்சத்தை உண்டாக்கியது. வேதாகமப் புத்தகத்தை எடுத்து வணங்கி ''ஆண்டவரே ஏன் எனக்குத் துன்பம் ஐயா? என்னை உம்மிடம் ஒப்படைக்கிறேன். தீராத பழியை நீரே உம்பிள்ளைக்கு ஏற்படுத்தலாமா?'' அழுதழுது மன்றாடியவள் வேதாகமத்தை அணைத்தபடியே உறங்கிவிட்டாள்.

''பொதுமன்னிப்பு எதுவும் வேண்டாம். பிள்ளையை வேறிடம் மாற்றுங்கள்'' என மேலதிகாரியிடம் அதிபரும், விடுதி மேலாளரும் வலியுறுத்திக்கொண்டிருந்தனர். ஏனோ அவர்களது பிடிவாதம் மேலதிகாரிக்குச் சந்தேகத்தை ஏற்படுத்தியது.

எல்லாப் பிள்ளைகளையும் பாடசாலைக்கு அனுப்பிவிட்டு, டொல்பிதாவை மட்டும் தன் தனியறைக்கு அழைத்தார் அந்த மேலதிகாரி அம்மா.

டொல்பிதாவைத் தீவிரமாக விசாரித்து உண்மை நிலையை விளங்கிக்கொண்டாள் அந்த அன்னை. விடுதி மேலாளரின் அலுமாரியை சக ஊழியர் ஒருவரின் உதவியுடன் சோதனையிட்டபோது டொல்பிதாவின் தேர்ச்சி அறிக்கை அங்கு மறைத்து வைக்கப்பட்டிருந்தது. அதனையும் அந்தத் தாய் பத்திரப்படுதினாள். விடுதி மேலாளரின் அலுமாரியின் மேல் தட்டில் ஒரு காட்போட் பெட்டிக்குள் டொல்பிதாவின் பாதணிகளும் கிடைக்கப்பெற்றன. மேலதிகாரியம்மாவின் கண்கள் கலங்கின.

டொல்பிதா பாடசாலைக்குப் புறப்பட்டாள். அனைவரும் ஒன்றுகூடல் திடலில் நிற்கிறார்கள். பகிரங்கமான மன்னிப்பு. எதுவித குற்றமும் செய்யாமல் மன்னிப்புக் கேட்கவேண்டுமோ? சக மாணவர்கள், ''கேள், மன்னிப்புக் கேள்'' என மன்றாடுகிறார்கள். அவர்கள் டொல்பிதாவை இழக்க விரும்பவில்லை. அவள் சிலையாக நிற்கிறாள். விடுதி மேலாளர் வந்துநின்று கூத்துப்பார்க்கிறார் - உறுக்குகிறார். அதிபரும் மிரட்டுகிறார். அவள் கண்களில் மடைநிறந்த வெள்ளமாக கண்ணீராறு பாய்கிறது. லீலா ஆசிரியர் மெல்ல அருகில் வந்து ''டொல்பிதா நீர் படிக்கக்கூடிய பிள்ளை. நீர் ஒரு குற்றமும் செய்யவில்லை. ஆனாலும் உம்முடைய எதிர்காலத்திற்காக மன்னிப்புக்கேளம்மா'' ஆசிரியரின் நா தழுதழுத்தது.

டொல்பிதா மேடையில் ஏறினாள். சுற்றும் முற்றும் பார்த்தாள். தன் நண்பிகள், தங்கைகள், அக்காமார், அன்பான ஆசிரியர்கள் யாரையுமே இழக்க அவள் தயாரில்லை. ஆனாலும் செய்யாத குற்றத்திற்கு ஏன் மன்னிப்பு? ஒரு வித துணிவு எப்படி வந்ததோ தெரியவில்லை. ''நான் தேர்ச்சி அறிக்கையைக் கிழிக்கவில்லை. எனது தேர்ச்சியறிக்கை காணாமற்போகவும் இல்லை. ஆனாலும் கிழித்ததாக நினைத்து மன்னிப்புக் கேட்கிறேன்'' எனக்கூறி மேடையை விட்டு இறங்கினாள். இனி என்ன நடக்கப்போகுதோ என எல்லோரும் ஏங்கிநின்றவேளை, ஒரு கைதட்டு ஓசை இடைவிடாது ஒலித்தது. அதிபர் திகைக்க, மேலாளர் திகைக்க ஏன் அனைவருமே திகைத்தனர்.

என்னுடைய நிர்வாகத்தில் ஏற்பட்ட குளறுபடிக்கு வருந்துகிறேன். இன்றிலிருந்து டொல்பிதா தான் எமது பாடசாலையின் தலைவி என முன்மொழிந்தார்.

பிள்ளையைப் பாதிப்படைய வைத்தவர்களை நான் சும்மா விடப்போவதில்லை. தனது கருத்தைத் தெளிவாகக்கூறிய மாணவியை நான் பாராட்டுகின்றேன். கரகோஷங்கள் வானைப்பிளந்தன. டொல்பிதாவின் இன்றைய காலகட்டத்தில் அவளது சகல முன்னேற்றங்களுக்கும் காரணமான அந்த அன்னை முள்ளிவாய்க்கால் படுகொலையில் இறந்துபோனாலும், இன்றைய காலகட்டத்தில் அவளது சகல முன்னேற்றத்திற்கும் காரணமான அன்னைக்கு தன் கல்வியைக் காணிக்கையாக்கி அன்னையின் பணியை நெஞ்சில் சுமந்து பயணிக்கிறாள் டொல்பிதா. ✱

(முற்றும்)



# எதற்காக இந்தப் பாரபட்சங்கள்?

இலங்கையில் பாரபட்சங்களுக்குக் குறைவில்லை. இனரீதியான பாரபட்சங்கள், சமூக ரீதியான பாரபட்சங்கள், மதரீதியான பாரபட்சங்கள், சாதிரீதியான பாரபட்சங்கள், வர்க்க ரீதியான (தகுதி நிலைப்பட்ட) பாரபட்சங்கள் எனப் பலவகையில் ஏராளம் பாரபட்சங்கள் உள்ளன.

'அரசன் எவ்வழியோ அவ்வழியே குடிகளும்' என்று சொல்வார்கள். இலங்கை அரசு பாரபட்சங்களையே அரசியல் வழிமுறையாகக் கொண்டது. ஆகவே, அரச நிர்வாகங்களிலும் பாரபட்சங்கள் தாராளமாக இருக்கும். அப்படித்தான் நிலைமையும் உள்ளது.

இங்கே கவலையளிக்கும் சங்கதி என்னவென்றால், தமிழர்கள், தமது கடந்தகாலத்தில்பட்ட வேதனைகள், துன்ப, துயரங்கள் எல்லாவற்றையும் மறந்துவிட்டு பாரபட்சம் காட்டுவதும் பாரபட்சத்துக்குள் சிக்குவதும்தான்.

குறிப்பாக அரச திணைக்களங்களில் காட்டப்படும் பாரபட்ச நடவடிக்கைகள் எல்லோரையும் வெட்கித் தலைகுனியவைப்பவை.

விடுதலைக்காகப் போராடிய ஒரு சமூகம், உரிமைக்காகவும் சமநிலைக்காகவும் உயிரைக்கொடுக்கவும் துணிந்த மக்கள் கூட்டம் இப்போது வெட்கித்தலைகுனியும் நிலையிலேயே இருக்கின்றது.

போரின் பாதிப்புகளும், போராட்டத்தின் தோல்விகளும் எவருக்கும் எத்தகைய படிப்பினையையும் கொடுக்கவில்லை என்றே எண்ணத்தோன்றுகின்றது.

இங்கே சில எளிய உதாரணங்கள்

கிளிநொச்சி மாவட்டத்தில் நான்கு பிரதேச செயலர் பிரிவுகள். இந்த நான்கில் கூடுதலான சனத்தொகையைக் கொண்ட பிரதேசம் கரைச்சி ஆகும். இதற்கடுத்தது கண்டாவளை. அடுத்தது பூநகரி, அடுத்தது பச்சிலைப்பள்ளி பளையாகும்.

ஆனால் கண்டாவளைப் பிரதேசத்துக்கே அதிக வள ஒதுக்கீடு செய்யப்படுகிறது. கண்டாவளைப் பிரதேசத்திலேயே அதிகமான தொண்டர் அமைப்புகளும் பணியில் ஈடுபடுத்தப்படுகின்றன.

இதுதொடர்பாக ஏனைய பிரதேச நிர்வாக அதிகாரிகளும் பொதுமக்களும் ஆதங்கங்களைத் தெரிவிக்கின்றனர்.



கிளிநொச்சி மாவட்டத்தில் பளை, பூநகரி ஆகிய பிரதேசங்கள் பெரும் அழிவைச் சந்தித்தவை. அதிலும் பளை மிக மோசமான அழிவைச் சந்தித்த பிரதேசம். இன்றும் ஆறு கிராம அலுவலர் பிரிவுகளில் மக்கள் மீளக்குடியமர்த்தப்படவேயில்லை. அதற்கு இன்னும் இரண்டு ஆண்டுகளாவது செல்லும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

எனவே, இவ்வாறு மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட பளைப் பிரதேசத்தில் தனியே ஒரேயொரு தொண்டு நிறுனம் மட்டுமே சேவையாற்றுகிறது. தவிர இரண்டு முன்பள்ளிகளுக்கான ஆசிரியர் கொடுப்பனவுகளை மட்டும் வழங்குகிறது. சிறுவர் பாதுகாப்பு நிதியம் மற்றும்படி வேறு தொண்டர் அமைப்புகளின் பணிகள் கிடையாது.

இதுவரையில் ஒரு மலசலகூடமோ ஒரு தற்காலிக வீடோ பளைப் பிரதேசத்தில் கட்டிக் கொடுக்கப்படவில்லை என்று கவலை தெரிவிக்கின்றார் கிராம அலுவலர் ஒருவர். சில கிராமங்களில் வீடுகளே இல்லாமல் முற்றாக அழிந்துள்ளன. ஆனால், இதைப்பற்றி யாரும் அக்கறைப்படுவதாக இல்லை. பிரதேச செயலர் வருகிறார், நிலைமைகளைப் பார்க்கிறார், மேலிடத்துக்குத் தெரிவிப்பதாகச் சொல்லிச் செல்கிறார். நாங்கள் இன்னமும் தறப்பாள் கூடாரங்களின் கீழேதான் இருக்கிறோம் என்று சொல்கிறார் பிரதேசவாசியொருவர்.



இதுபற்றி ஒரு தொண்டு நிறுவன அதிகாரியிடம் கேட்டபோது அவர் சொன்னார், பளைப் பிரதேசத்தில் பணி செய்வதற்கு தாம் விரும்புவதாகவும், அதற்கான அனுமதியையும் பணிப்பையும் விடுக்க வேண்டியது அரசாங்க அதிபரும், ஜனாதிபதியின் விசேட செயலணியுமே என்று.

அவ்வாறாயின் இதனை எடுத்துரைப்பது யார் என்று கேட்கின்றனர் பாதிக்கப்பட்ட மக்கள். இதுமட்டுமல்ல, பளை, கிளிநொச்சிப் பகுதியின் மணல் விநியோகம் மிகவும் பாதகமான நிலையிலேயே இருக்கின்றது. மணலைப் பெறுவதற்கு மக்கள் இன்றும் பல தடைகளைக் கடக்கவே வேண்டியுள்ளது. விலையையும் அதிகமாகவே கொடுக்கவேண்டியுள்ளது. இதுமட்டுமல்ல, முல்லைத்தீவு மாவட்டத்தில் மல்லாவி, துணுக்காய்ப்பகுதிகளுக்கு கிடைக்கின்ற வளங்கள் பாண்டியன்குளம் பிரதேச செயலர் பிரிவுக்குக் கிடைப்பதில்லை.

பாண்டியன்குளம் பிரதேச செயலர் பணிமனையின் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான உத்தியோகத்தர்களே இல்லாத நிலை இதற்கு நல்லதொரு உதாரணம். பணியாளர்களை நிரப்புவதில் அக்கறையற்றிருக்கும்போது எப்படி பிரதேசத்தின் அபிவிருத்திபற்றியும், வள ஒதுக்கீடுபற்றியும் கவனிக்கப்படும் என்று கேட்கிறார் பாண்டியன்குளம் பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் சிரேஷ்ட ஊழியர் ஒருவர்.

ஜோஸவ் தயாளன்

இதைப்போலவே இன்னொரு விதத்தில் குற்றச்சாட்டுகளை வைக்கின்றனர் பூநகரிக் கோட்டப்பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள். இங்குள்ள பாடசாலைகள் பலவற்றுக்கும் அடிப்படை வசதிகளே பூர்த்தி செய்யப்படவில்லை.

பல பாடசாலைகளின் கூரைகளே சீராக்கப்பட வில்லை. மூன்றாந்தவணைப் பரீட்சையை நடத்த முடியாத நிலையிலேயே தாம் இருப்பதாகச் சில பாடசாலைகளின் ஆசிரியர்கள் கூறுகின்றனர். தூர இடங்களில் இருந்து வருகின்ற ஆசிரியர்கள் தங்குவதற்கான விடுதிவசதிகள் கூட இன்னும் செய்யப்படவில்லை. விஞ்ஞான ஆய்வுகூடம் இல்லை.

இந்த நிலையில் பாடசாலைகளின் பெறுபேறுகளை மாணவர் தேர்ச்சி மட்டத்தை மட்டும் பெரிதாக எதிர்பாக்கின்றனர் அதிகாரிகள் என்று சொல்லிக் கோபப்படுகிறார் ஆசிரியை ஒருவர்.

நகரப்பாடசாலைகளின் மீதான கவனிப்பும் வளப்பகிர்வும் கிராமப் பாடசாலைகளுக்கு இல்லை. போர் என்றாலென்ன, சமாதானம் என்றால் என்ன பாரபட்சங்கள் தொடர்ந்து கொண்டேயிருக்கும் என்கின்றனர் இந்தப் பிரதேசங்களைச் சேர்ந்தோர்.

பொறுப்பான பதவிகளில் உள்ளோர், மனிதாபிமான நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் பாரபட்சங்களைக் களைய வேண்டும்.

போரின் பாதிப்புகள், அழிவுகள் பற்றிய சரியான மதிப்பீட்டின் அடிப்படையில் ஒதுக்கீடுகளைச் செய்வதும், முன்னுரிமையை அளிப்பதும் முக்கியம். இது ஒரு அத்தியவசியக் கடமை.

மாவட்டத் திட்டமிடல் என்பது மக்களின், பிரதேசங்களின் சமநிலையைப் பாதிக்கும் வகையில் அமைந்துவிடக்கூடாது. ஏற்கனவே பலவிதமான பாரபட்சங்களால் பிளவுண்டு, சிதைந்து போயிருக்கும் சமூகங்களை மீள்நிலைப்படுத்தி வளர்ச்சியடைய வைக்கும் பணி சகலருக்குமுரியது. குறிப்பாக பொறுப்பான பதவிகளில் உள்ளோருக்குரியது.

பாரபட்சங்களால்தான் இந்த நாடு அழிந்தது. நமது கடந்த காலம் இரத்தத்தில் மிதந்தது. நிகழ்காலமும் கண்ணீரில் மிதக்கிறது. எதிர்காலத்தையும் நாம் தீயிடமோ, கண்ணீரிடமோ, இரத்தத்திடமோ கொடுத்துவிட முடியாது.

இன்றே ஒழியட்டும் பாரபட்சம் என்பதைவிட, பாரபட்சமற்று நடப்போம் என்பதை உறுதிப்படுத்துவோம். ✷



எனினும், சில்வியோவின் சகோதரன் வெளியிட்டுவரும் பிரபல சஞ்சிகையான **இல் ஜியோநேல்** (IL GIORNALE) வெளியிட்டுள்ள செய்தியொன்றில் இந்த புதிய பாலியல் உறவுச் சதி ஏற்கனவே பகிரங்கமாகி பிசுபிசுத்துப் போன **டீ அடாரியோ** (D' ADDORIO) சம்பவம் போன்றது என்று திட்டவட்டமாக கூறியுள்ளார். கடந்த வருடம் இதே ரீதியில் பெட்ரீசியா டி அடாரியோ எனும் விலைமாதுவும் இத்தாலியப் பிரதமரின் சொகுசு மாளிகையில் அவருடன் உறவில் ஈடுபட்டதாக கூறியிருந்தார். எனினும், அந்த விடயம் போதிய ஆதாரங்களின்றி கைவிடப்பட்டுப் போனது. தற்போது ஒருவருடத்திற்குப்



# இத்தாலியப் பிரதமருடன் படுக்கையைப் பகிர்ந்துகொண்ட மொரோக்கோ மாடல் அழகி!

***18*** வயதான மொரோக்கோ மாடல் அழகி ரூபி, தன்னுடன் இத்தாலியப் பிரதமர் சில்வியோ பெர்லுஸ்கோனி அந்தரங்க உறவை மேற்கொண்ட பின் பணமும் கொடுத்தார் என்ற திடுக்கிடும் தகவலை வெளியிட்டுள்ளார்.

உலகெங்கும் பல அரச தலைவர்கள் அவ்வப்போது பெண்களின் வலையில் வீழ்வது வழக்கம். அமெரிக்க ஜனாதிபதி ஜோன். எப் கென்னடி, பில் கிளின்டன் போன்றவர்களின் விவகாரங்கள் பகிரங்கமாகி பெரும் சர்ச்சைகளைக் கிளப்பின. கென்னடியின் நிரந்தரக் காதலியான எலிசபெத் ரெய்லர் அவ்வப்போது கென்னடியை சந்திக்கத் தவறியதில்லை. அவ்வாறே பில் கிளின்டனும் தனது அலுவலகத்தில் பணி புரிந்த மொனிக்கா என்னும் பெண்ணுடன் உறவுகொண்டது உலகறிந்த விடயம். இவ்வாறே உலகின் பல பாகங்களிலும் மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்ற தலைவர்கள் பெண்கள் விடயத்தில் தமது பலவீனத்தைக் காட்டி வந்துள்ளனர். அவற்றுள் சில பகிரங்கமானபோதும் ஏராளமானவை மூடி மறைக்கப்பட்டுள்ளன.

இந்த ரீதியில் இத்தாலியப் பிரதமர் பற்றி எழுந்துள்ள சர்ச்சை உச்சக்கட்டத்தில் இன்று விவாதிக்கப்பட்டு வருகிறது. இந்த குற்றச் சாட்டை பகிரங்கப்படுத்திய ரூபி என்றழைக்கப் படும் மொரோக்கோ அழகி இத்தாலியில் சட்டவிரோதமாகக் குடியேறியவர். இத்தாலியப் பத்திரிகைச் செய்திகளின்படி, இந்த யுவதி மிலானுக்கு வெளியே ஆர்கோர் எனும் இடத்திலுள்ள பிரதமரின் ஆடம்பர மாளிகையில் வைத்து அவருடன் அந்தரங்க உறவில் ஈடுபட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவ் வழக்கில் பிரதிவாதித் தரப்பினர் வழக்குக்கான கோப்பொன்றை திறந்துள்ள போதிலும், அது தொடர்பான விசாரணைகளை ஆரம்பிக்கவில்லை. பிரதமர் சில்வியோ பற்றிய விசாரணைகள் எதையும் தாங்கள் ஆரம்பிக்கவில்லை எனவும், இந்த யுவதி கூறும் குற்றச்சாட்டு எந்தளவுக்கு உண்மையானது என்பதை தாம் தெரிந்து கொள்ள முயற்சிப்பதாகவும் பிரதிவாதித் தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

பின்பு எழுந்துள்ள அதே விதமான குற்றச்சாட்டு, பிரதமரின் அடுத்த தேர்தலை குறிவைத்து நடத்தப்படும் கபடநாடகமேயன்றி வேறில்லை என அப்பத்திரிகை திட்டவட்டமாக கூறுகின்றது.

> வீட்டைவிட்டு வீதிக்கு வந்த இப் பெண், பொலிஸாரால் விசாரிக்கப்பட்ட போது, அவரிடம் இத்தாலியில் தங்குவதற்கான விசா இருக்கவில்லை. அதனையடுத்து அவரைக் கைது செய்ய பொலிசார் முயன்றபோது தனக்கு பிரதமரை அந்தரங்கமாகத் தெரியும் எனக் கூறியதுடன் தனது விடயத்தில் முரட்டுத் தனமாக செயற்பட வேண்டாமெனவும் பொலிஸாரை அச்சுறுத்தியுள்ளார். இதனைத் தொடர்ந்து பொலிஸார் மேற் கொண்ட விசாரணைகளின்போதே பிரதம ருக்கும் தனக்கும் உள்ள நெருக்கத்தை விரிவாக எடுத்துக் கூறியுள்ளார்.

இந்த வழக்குடன் சம்பந்தப்பட்ட நீதிபதிகள், குறிப்பிட்ட யுவதியின் குற்றச்சாட்டுக்கள் அடிப்படையற்றவையாக இருக்கலாமெனவும், 74 வயதான பிரதமரின் நற்பெயருக்கு களங்கம் கற்பிக்கும் ஒரு முயற்சியாக இருக்கலாம் எனவும் எச்சரித்துள்ளனர். இப்போது 18 வயதாகியுள்ள ரூபி, சில்வியோவால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பல ஆடம்பர விருந்துகளில் கடந்த வருடம் முதல் இவ் வருட இளவேனிற் காலம் வரை கலந்துகொண்டதாக தெரிவிக்கிறார். இந்த யுவதி நடிகைகள், மாடல் அழகிகள் உள்ளிட்ட வட்டமொன்றிலிருந்து லேலி மோரா என்பவரால், பிரதமருக்கு அறிமுகம் செய்யப்பட்டதாக தெரிவித்துள்ள போதிலும் லேலி மோரா அந்தக் கூற்றை அடியோடு மறுக்கிறார். வழக்கை விசாரிக்கும் நீதிபதிகள் இப் பெண்ணின் சாட்சியங்கள் ஒன்றுக்கொன்று முரணாக இருப்பதாகவும், உறுதியான அத்திபாரமோ அல்லது சாட்சியங்களோ இன்றி இந்த வழக்கு வெறுமனே பதியப்பட்டுள்ளதாகவும் கருத்துத் தெரிவிக்கின்றனர். இத்தாலிய நாளிதளொன்று வெளியிட்டுள்ள செய்தியின்படி கடந்த மே மாதம் தனது அறைச் சினேகிதியால் வீட்டைவிட்டு ரூபி துரத்தப்பட்ட பின்பே இந்த விவகாரம் ஆரம்பித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

இவ் வழக்குக்கு பொறுப்பாகவுள்ள நீதிபதிகளின் ஆயத்தில் ஒருவரான அந்தோனியோ செங்கர்மேனோ, இத்தகைய பாலியல் சதிகள் மற்றும் அபகீர்த்தி வழக்குகளை விசாரிப்பதில் நிறைந்த அனுபவம் கொண்டவர். எனினும், ரூபியின் வழக்குப் பற்றிய கருத்துக்களை வெளியிட அவர் மறுத்துவிட்டார்.

விபச்சாரம் இத்தாலியில் தடைசெய்யப்பட்ட விடயமல்ல. எனினும், முன்னொழுங்கு செய்யப்பட்ட விபசாரத்திற்கு தடை விதிக்கப்பட்டுள்ளதுடன் விபசாரத்தில் ஈடுபடுபவர்கள் 18 வயதைத் தாண்டியவர்களாக இருக்கவேண்டுமென்பது கட்டாய நிபந்தனையாகும்.

பிரதமர் சில்வியோவின் மக்கள் சுதந்திரக் கட்சி, பிரதமர் மீதான குற்றச்சாட்டுக்களை அப்பட்டமான பொய்யென்றும், விரைவில் அதன் உண்மை வெளிப்படுமென்றும் கூறுகிறது. இது பழைய கதையேதான். நாங்கள் தேர்தலை நெருங்கிக் கொண்டிருப்பதால் கடந்த வருடம் டீ அடாரியோ எனும் விலைமாது தனது நெருக்கமான உறவைப் பற்றி அர்த்தமின்றி பேசிய பேச்சு எடுபடாமல் போனது. இம்முறையும் இதேதான் நடக்கப் போகிறது என்கிறார் நுன்சியா டீ ஜிரோலாமோ எனும் நாடாளுமன்ற உறுப்பினர்.

2008 மே மாதம் பிரதமராக மீண்டும் பெர்லுஸ்கோனி தெரிவுசெய்யப்பட்டது முதல், அவருக்கான மக்கள் அங்கீகாரம் மிகவும் கீழ்மட்டத்திலேயே உள்ளது. எவ்வாறாயினும் சக்திவாய்ந்த ஒரு நாட்டின் பிரதமரை ஒரு சாதாரண மாடல் அழகியின் குற்றச்சாட்டு சரித்துவிட முடியாதென ஒருசாரார் தீர்க்கமாக நம்பினாலும், ஏற்கனவே தனது பெயருக்கு பல்வேறு அபகீர்த்திகளை உருவாக்கிக் கொண்டு திரிசங்கு நிலையில் இருக்கும் சில்வியோ பெர்லுஸ் கோனியின் தலைவிதி எதிர்வரும் தேர்தலில் நிர்ணயிக்கப்படும் என்பதே பரவலான கருத்து.

- சப்பர் -

## முன்னாள் ஈராக்கிய அதிபர் சதாம் ஹுசைனின் ஆடம்பரப் படகு, மீண்டும் ஈராக் வருகை.






ஈராக்கிய ஜனாதிபதியாக இருந்தவர் சதாம் ஹுசைன். அவர், ஈராக்கிய படையெடுப்பின் பின் கொல்லப்பட்டது தெரிந்த விடயம். அவர் பதவியில் இருந்த போது தனக்கென்று ஒரு உல்லாசப் படகைக் கட்டி அதற்கு "ஓசன் பிறிஸ்" என்ற பெயரும் சூட்டியிருந்தார். இது, இதுவரை காலமும் பிரான்ஸிலுள்ள "நைஸ்" துறைமுகத்திலே தரித்து நின்றது. இந்தப் படகுக்கு உரிமைகோரி ஜோர்தானுக்கும் ஈராக்கிற்கும் சட்டப் பிரச்சினை எழுந்து பிரான்ஸ் நீதிமன்றத்தில் வழக்கு விசாரிக்கப்பட்டு வந்தது. இந்த வழக்கின் தீர்ப்பு, தற்போது ஈராக் அரசுக்கு சார்பாக முடிவடைந்துள்ளது. இதனையடுத்து இப் படகு கடந்த முதலாம் திகதி ஈராக்கிற்கு திரும்பியது. கருபியன் கடலிலுள்ள கேமன் தீவுக்கு சொந்தமான "சுடலீ லிமிட்டட்" என்ற கம்பனி இப்படகிற்கு உரிமை கோரியுள்ளது. காரணம், இக் கம்பனியில் ஜோர்தான் மன்னர் அப்துல்லாவுக்கு கணிசமான பங்குண்டு. இப் படகு, 35 மில்லியன் அமெரிக்க டொலருக்கு விற்கப்பட்டதாகவும் ஆனால், இப் படகிற்கு ஈராக் உரிமை கோரி பிரெஞ்சு நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்த தாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. இப்படகை தற்போதைய ஈராக் அரசாங்கம் 30 மில்லியன் அமெரிக்க டொலருக்கு பிரான்சுக்கு விற்க முயன்ற போதும், அது நிறைவேற வில்லை. 1982ஆம் ஆண்டு கட்டப்பட்ட இப் படகு, 82 மீற்றர் நீளமுடையது. சிறிய தியேட்டரும், உலங்கு வானூர்தி இறங்கு வசதியும் இப்படகில் உண்டு. அத்தோடு இப்படகிலே ஒரு மசூதியும், சிறிய நீர்மூழ்கிக் கப்பலும், ஏவுகணை ஏவும் வசதியும் இருப்பதாக கூறப்படுகிறது. படகையும், அதன் உட்பகுதியின் ஒரு தோற்றத்தையும் மேலேயுள்ள படங்களிலே காணலாம்.

## சொற்சிலம்பம் போட்டி இல. 442

சொற்சிலம்பம் 442 போட்டிக்கான விடைகளை எழுதி அனுப்பி வைக்கவேண்டிய இறுதித்தினம் 2010 ஆம் ஆண்டு நவம்பர் 20 ஆம் திகதி ஆகும். விடைகள், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் நவம்பர் 28 ஆம் திகதி சுடர் ஒளியில் பிரசுரமாகும். சொற்சிலம்பம் போட்டி இல. 440 இற்கான விடைகள் அருகே தரப்பட்டுள்ளன. தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். தபாலட்டை கிடைக்காத பட்சத்தில் தபால் அட்டையின் அளவில் ஒரு கடதாசி அட்டையை வெட்டி, அதில் கூப்பனை ஒட்டி அனுப்புங்கள். முதலாவது பரிசாக ரூபா 250 உம், இரண்டாவது பரிசாக ரூபா 150 உம், மூன்றாவது பரிசாக ரூபா 100 உம் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிர்ஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

## சொற்சிலம்பம் போட்டி இல. 441



### இடமிருந்து வலம்

1.நடந்து செல்பவன். 5.திருமதி. 8.ஆக்க / செய்ய. 9.சவுக்கு. 10.எவர். 11.விதையைப் பரவலாக விழச்செய்தல். 13.பழுக்காதது. 15.ஓர் அளவுக்கு மேல் உண்ண முடியாது வெறுப்பு ஏற்படுதல். 16.மத்தி. 19.எகிப்தில் பிரமிட்களுக்குள் பதப்படுத்தி வைக்கப்பட்டுள்ள மனித உடல். 21.முஸ்லிம்களின் வேத நூல். 23.பெற்றிரு / உடையதாக இரு.

### மேலிருந்து கீழ்

1.வேண்டுதலை முன்னிட்டு கோயிலுக்கு நடந்தே மேற்கொள்ளும் பயணம். 2.ஆயத்தம். 3.பெண்கள் அதிகமாக அணிவது. 4.மிதிப்பதன் மூலம் இருவர் அமர்ந்து செல்லக்கூடிய மூன்று சக்கர வாகனம்.

6.சிறு குழந்தை. 7.திக்கு (பெயர்ச் சொல்).

11.சுத்தம். 12.வசை பாடு / ஏசு. 14.பெண்கள் பாட்டின் இசைக்கு ஏற்ப, சுற்றி வந்து கைகொட்டி ஆடும் நடனம். 17.கல்யாணி ராகத்தை இந்துப் பெயராலும் குறிப்பிடுவர். 18. பனை மட்டையிலிருந்து பிரித்தெடுக்கப்படும் இழை. 20.விரல்களை அகல விரித்த நிலையில் சுண்டு விரல் நுனியிலிருந்து கட்டை விரல் நுனி வரை உள்ள தூரம். 21.கற்பிப்பவர். 23. ஒரு தமிழ் மாதம் / சுவரில் பொருள்களைப் பொருத்த உதவுவது.

அனுப்பவேண்டிய முகவரி:
'சுடர் ஒளி' 85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு-14.

## சொற்சிலம்பம் போட்டி இல.440

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 ஆ | 2 சா | 3 ட | பூ | 4 தி | ■ | 5 பா | ரி |
| 6 தூ | ப | ம் | ■ | 7 கை | 8 கே | யி | ■ |
| 9 ர | ம் | ப | ம் | ■ | 10 வ | ர | ம் |
| ம் | ■ | ம் | ■ | 11 சீ | ல | ம் | ■ |
| ■ | 12 மா | ■ | 13 தூ | ர | ம் | ■ | 14 ச |
| 15 மா | மி | 16 ச | ■ | க | ■ | 17 ஏ | ரி |
| தி | ■ | 18 கி | 19 ரா | ம் | 20 பு | ■ | பா |
| 21 ரி | ஷி | ■ | சி | ■ | 22 வி | டு | தி |

### பரிசு பெறுவோர்

1. **செல்வி.அ.ஸ்ரெல்லா பாரதி,** 'இனிக்கோ', புதுமுகத்துவார வீதி, கல்லடி, மட்டக்களப்பு.
2. **வே.கார்த்திகேசு,** விபுலாநந்தர் வீதி, வாழைச்சேனை.
3. **திருமதி. பத்மா அலெக்ஸாண்டர்,** இல.18, சௌமியபுரம், கொட்டகலை.

### பாராட்டுப் பெறுவோர்

. எஸ்.எஸ்.பவானந்தன், நீர்வேலி.
. ஹரினி முரளிதரன், எழுத்தூர்.
. பெ.நமசிவாயம், திருநெல்வேலி.
. எம்.பி.முகைடீன், பெரிய நீலாவணை.
. யூ.செல்லத்தம்பி, கல்முனை - 03.
. ரி.தனுஜன், வவுனியா.
. திருமதி. எஸ்.ஞானம்,
. வி.செல்வநாயகம், புத்தூர்.
. திருமதி. எஸ்.ஹமீட், கொழும்பு - 06.
. வே.சத்தியமூர்த்தி, வல்வெட்டித்துறை.
. ஜி.சத்தியபாரதி, வத்துகாமம்.
. கரவை மணிமொழியான், திருகோணமலை.
. திருமதி தி.சிதம்பரநாதன், கோப்பாய்.
. கவிதா நவகுலன், யாழ்ப்பாணம்.
. சந்துஜன் அயில்ராஜ், கஹவத்தை.




**பாவலன்,**
**பாண்டியூர்.**

***கேள்வி:*** பெரும் பாதைகளில் வாகனங்களை நிறுத்திவைத்துக் கொண்டு ஒருவருடன் நிமிடக் கணக்கில் கதைப்பதென்றால் அது சட்டப்படி குற்றமாகும். இதே தவறைக் காக்கிச் சட்டையர் சிலர் செய்கிறார்களே. இதைப்பற்றித் தங்கள் கருத்தென்ன?

***பதில்:*** இவர்கள் பயிரை மேயும் வேலிகள். சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டிய 'சட்டத்தின் காவலர்கள்'. இவர்களது மிடுக்கும், திமிரும், அதட்டல்களும் பென்சனோடு முற்றுப் பெற்றுவிடும். அதன் பிறகு அவர் எவராலுமே கண்டுகொள்ளப்படமாட்டார்.

**நிலான்,**
**மட்டுவில்.**

***கேள்வி:*** ஒரு மனிதன் மனிதனாக வாழ அவனுக்குத் தேவைப்படுவது தனமா, இனசனமா, தைரியமா, தன்மானமா அல்லது தன்னம்பிக்கையா?

***பதில்:*** இவையெல்லாம் தேவைதான். எல்லாவற்றுக்கும் ஊற்றுக் கண்ணாக விளங்கும் மனிதாபிமானத்தை நீங்கள் குறிப்பிட மறந்துவிட்டீர்களே.

**மதுமிதா,**
**வெள்ளவத்தை.**

***கேள்வி:*** வளரும் தலைமுறைகளுக்கு வழிகாட்டும் தலைவர்கள் இப்போது இருக்கிறார்களா?

***பதில்:*** இருக்கிறார்கள். அவர்களிடம் மக்களைக் கவரும் எடுப்பான உடைகள், ஆரவாரங்கள், பீரங்கிப் பிரசாரம், வார்த்தை ஜாலங்கள், பங்களா வீடுகள், அரசியல்வாதிகளுக்கேயுரிய ஆர்ப்பாட்டங்கள் இன்றி எங்கோ ஓரிடத்தில் அமைதியாக, மனித சமுகத்துக்கு முன்மாதிரியாக வாழ்ந்து கொண்டிருப்பார்கள்.

**அபி,**
**கொழும்பு.**

***கேள்வி:*** சிலர் தங்கள் காதலிக்கு எழுதும் கடிதத்தில் என் உயிர் உன்னிடமே என்று எழுதுகிறார்களே, ஏன்?

***பதில்:*** அவர்களது உடல் மேலிருக்கும் ஆசையால்.

**தயாளன்,**
**யாழ்ப்பாணம்.**

***கேள்வி:*** ஒரு பாடல் ஹிட் ஆவது கவிஞர்களின் கையில் இருக்கிறதா? இசையமைப்பாளர்கள் கையில் இருக்கிறா?

***பதில்:*** பாடல் வரிகள் சிறப்பாக இருக்க வேண்டும். அது கவிஞனின் கையில் இருக்கிறது. ஆனால், டியூன் தான் அந்தப் பாடலுக்கு உயிர்த்துடிப்பு ஊட்டுகிறது. பாடலை ஹிட் ஆக்குகிறது. இப்படிப் பார்க்கும்போது இசையமைப்பாளர்கள் என்ஜின்கள்; கவிஞர்கள் பெட்டிகள் என்று சொல்லலாம்.

**மாஹீர்,**
**முந்தல்.**

***கேள்வி:*** சுடலையின் தத்துவம் பற்றி?

***பதில்:*** (மரணம் பற்றிய) சூடு இருக்கும் வரை சுடலையின் தத்துவம் மனதை வருத்தும். விரைவில் அது குளிர்ந்துபோய் மனம் திசை மாறிவிடும். அதன் பிறகு குரங்கு மனம் ஒன்றிலிருந்து மற்றொன்றுக்குத் தாவிக் கொண்டே இருக்கும்.

**ராமசாமி,**
**கோண்டாவில்.**

***கேள்வி:*** குலுக்கல் சீட்டிழுப்புகளில் மிக அரிதாகவே முதற் பரிசு விழுகிறது. இரண்டாம், மூன்றாம் பரிசுகளும் அவ்வாறே. இவற்றில் ஏதாவது தில்லுமுல்லுகள் நடைபெறுகின்றனவா? ஆயிரக் கணக்கானோர் சீட்டுகள் வாங்கி ஏமாறுகிறார்கள். தயவுசெய்து உண்மை நிலையை வெளிப்படுத்தவும்.


***பதில்:*** இலங்கையில் அப்படி நடைபெறுகின்றதா என்று தெரியவில்லை. சமீபத்தில் இந்தியாவில் நடைபெறும் மோசடிகளைப் பற்றி ஒரு சஞ்சிகையில் வாசித்தேன். பெரிய பரிசுகள் எவருக்கும் கிடைக்காதிருப்பதைப் பார்க்கும்போது நம் நாட்டிலும் இப்படி நடக்கக் கூடும் என்று நினைக்கத் தோன்றுகிறது. நெற்றிக்கண் என்ற இந்திய வார இதழ் 15.12.2000 இல் வெளியிட்ட சி.பி.ஐ துரத்தும் லாட்டரி முதலாளி! என்ற தலைப்பிலான கட்டுரையில் இருந்து பின்வரும் விவரங்களை உங்கள் பார்வைக்குச் சமர்ப்பிக்கின்றேன்:

''குலுக்கல் முடிவுகளை ஸ்டாக்கிஸ்ட் விருப்பத்துக்கு ஏற்ப வரும்படி கம்பியூட்டர் துணையுடன் திருட்டுத் தனம் செய்கிறார்கள்.

உதாரணமாக, அருணாச்சல் லாட்டரிக்கு மதியம் மூன்று மணியிலிருந்து மூன்றரைக்குள் குலுக்கல் நேரம் குறிக்கப்பட்டிருக்கும். விற்பனையாகாத சீட்டுகளின் எண் பட்டியல் பகல் இரண்டு மணியளவில் ஸ்டாக்கிஸ்டுக்கு வந்துவிடும்.

விற்பனை நிலவரத்திற்கு ஏற்ற மாதிரி குலுக்கல் முடிவுகளை முன்கூட்டியே பிக்ஸ் செய்து விடுகிறார்கள். கிரிக்கெட் பாணியில் லாட்டரி குலுக்கலிலும் பிக்ஸிங் மோசடி.

எழுபது சதவீத குலுக்கல் முடிவுகள் விற்பனையாகாத எண்களுக்கு விழும்படி கம்பியுட்டரில் கமாண்ட் கொடுத்துவிடுகிறார்கள்.....லாட்டரிச் சீட்டு அடிப்பது, குலுக்குவது, முடிவு அறிவிப்பது என ஒவ்வொரு கட்டத்திலும் ஊழல் தான்...!'' இதிலிருந்து ஏதாவது கொஞ்சம் புரிந்துகொள்ளலாம் தானே.




**பர்ஹானா,**
**பானந்துறை.**

***கேள்வி:*** தமிழ் நாட்டு முதலமைச்சர் கருணாநிதி எத்தனை படங்களுக்குக் கதை வசனம் எழுதியிருக்கிறார்?

***பதில்:*** இதுவரை எழுபத்தி நான்கு படங்களுக்குக் கதை வசனம் எழுதியிருக்கிறார். கடைசியாக இவ்வருடம் ''இளைஞன்'' என்ற படத்துக்குக் கதை வசனம் எழுதினார். அந்தப் படம் இன்னும் வெளிவரவில்லை.

**கே. நிஷா,**
**கிளிநொச்சி.**

***கேள்வி:*** பித்தா, இந்தியாவில் நடைபெற்ற கொமன்வெல்த் போட்டியில் மஹிந்த அவமதிக்கப்பட்டதாக ஊடகங்களில் பேசப்படுகிறதே. இது பற்றி உமது கருத்து என்ன?

***பதில்:*** ஒவ்வொருவரினதும் தலையெழுத்துப்படிதான் எல்லாம் நடக்கும் என்பதைவிட வேறென்ன சொல்ல?

**சுலாக்ஸி,**
**கண்டி.**

***கேள்வி:*** சீனி உட்பட அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் எக்கச்சக்கமாக எறிக்கொண்டு செல்வதைப் பற்றி?

***பதில்:*** மரத்தால் விழுந்தவனை மாடு குத்துவது போல. ஏற்கனவே விலைவாசிகளின் ஏற்றத்தால் அவதிப்படுகின்ற ஏழை மக்களுக்கு அடிமேலடி. பட்டினிச் சாவுகளைப் பார்க்க வேண்டிய காலம் அதிக தூரத்தில் இல்லை என்பதற்கான கட்டியம்.

# கின்னஸ் சாதனை படைத்த கோடீஸ்வரியின்

# சின்னஞ்சிறு ஆசை

2007ஆம் ஆண்டில் உலகின் மிகப்பெரும் கோடீஸ்வரியாக கின்னஸ் புத்தகத்தில் இடம்பிடித்த பிரபல ஹில்டன் ஹோட்டல்களின் வாரிசான பெரிஸ் ஹில்டன் அதற்கு ஒரு வருடத்திற்கு முன்பு (2006) உலகில் மிகவும் வெறுக்கப்பட்ட நட்சத்திரங்களின் இரண்டாவது இடத்தை மக்கள் கருத்துக் கணிப்பில் பெற்றார். பெரும் செல்வத்துடன் வாழ்க்கை நடத்துபவர்களுக்கு சாதாரணமாகப் பெரிய பிரச்சினைகள் ஏற்படுவது இல்லை என்பது சாதாரண மக்களின் எதிர்பார்ப்பு. எனினும், அளவுக்கு மீறிய செல்வத்தால் கண்மண் தெரியாமல் நடந்துகொள்ளும் எவருக்குமே பெரிஸ் ஹில்டனின் வாழ்க்கை ஒரு பாடமாக அமையும் என்பது நிச்சயம்.



உலகப் பிரசித்திபெற்ற ஹில்டன் ஹோட்டல்களின் உரிமையாளரான கொன்ராட் ஹில்டனின் பேத்தியும் வாரிசுமான பெரிஸ் ஹில்டனின் தற்போதைய காதலன் 'சை வேட்ஸ்' எனும் கோடீஸ்வரர். இவர் லாஸ் வெஹாஸ் நகரத்திலுள்ள ஏராளமான களியாட்ட விடுதிகளின் உரிமையாளர். இவருடன் நட்புறவை ஏற்படுத்திக்கொண்ட பின்னர் பெரிஸ் ஹில்டனின் ஏற்கனவே சிதைவடைந்திருந்த நற்பெயர் மேலும் சிதைவுற்றதாக ஏராளமானோர் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

*எனது அளவிட முடியாத சொத்துக்கள், சொந்தங்கள், உறவுகள் அனைத்தையும் பறித்து வேறொருவர் அனுபவிப்பதில் எனக்கு ஆட்சேபணை கிடையாது. ஆனால், நான் மனப்பூர்வமாக விரும்பும் எனது காதலனை எவ்விதத்திலும் வேறொருவருடன் பகிர்ந்துகொள்ள என்னால் முடியாது. அது உடல்ரீதியான இச்சையல்ல. உளரீதியான காதல்.*

எதிலும் அலட்டிக்கொள்ளாத - அவசரப்படாத 'சை வேட்ஸ்' பெரிஸ் ஹில்டனின் காதலனாகி ஆறு மாதங்களேயாகின்றன. எனினும், தனது காதல் ஆயுள் முழுவதும் நிலைத்திருக்க வேண்டுமென்ற நப்பாசை பெரிஸ் ஹில்டனுக்கு உள்ளது. முன்னெப்போதும் இல்லாதவாறு இந்தப் புதிய காதலில் பெரிஸ் ஆணித்தரமான நம்பிக்கை கொண்டுள்ளார். சை வேட்ஸ் தனது படுக்கையை மற்றொரு பெண்ணுடன் உடல்ரீதியாகப் பகிர்ந்துகொள்வதை ஆட்சேபிக்காத பெரிஸ் தனது காதலனின் உளரீதியான முழுக் காதலும் தன்மீதே இருக்கவேண்டுமென எதிர்பார்க்கின்றார்.

சை வேட்ஸின் மனதைக் கொள்ளை கொண்ட மற்றப் பெண் யார்? அவர் பெரிஸ் ஹில்டனை விட அழகியா? பணக்காரியா? அங்க லாவண்யம் மிக்கவளா? என்ற கேள்வி அப்போது எழுந்துள்ளது. கடந்த வார இறுதியில் பெரிஸ் ஹில்டனை இரகசியமாகப் பின் தொடர்ந்த ஊடகவியலாளர்கள் அந்த மர்ம அழகியைக் கண்டுபிடித்துவிட்டனர். அவளது பெயர் 'கீ'. உண்மையில் பெரிஸ் ஹில்டனை விட அழகாக இருந்த அவளுக்கு வயது வெறும் ஏழு மட்டும்தான் எனத் தெரிந்துகொண்ட நிருபர்கள் அசந்துபோனார்கள். அவள் சை வேட்ஸின் ஏக புதல்வி. எனவே, தனது காதலனின் அன்பை அவரது மகளுடன் பகிர்ந்துகொள்ள வேண்டிய நிலை பெரிஸ் ஹில்டனுக்கு ஏற்பட்டுள்ளதே தவிர வேறொரு காதலியுடன் அல்ல என்பதை உலகம் அப்போதுதான் தெரிந்துகொண்டது.

தன் மகள் மீது சை வேட்ஸ் கொண்டுள்ள அபரிதமான அன்பு அவரிடம் தான் கொண்டுள்ள காதலை மேலும் தீவிரமாக்கியது எனவும் அச்சிறுமியை தான் உளமார நேசிப்பதாகவும் பெரிஸ் ஹில்டன் நிருபர்களிடம் கூறியுள்ளார். எனினும், பெரிஸ் ஹில்டன் இந்தச் சிறுமியுடன் கொண்டுள்ள நெருக்கமான அன்பு அச்சிறுமியின் எதிர்காலத்துக்கு அத்துணை ஆரோக்கியமானதல்ல என ஏராளமானோர் எச்சரிக்கை விடுத்துள்ளதும் கவனிக்கத்தக்கது.

பெரிஸ் ஹில்டன் என்ற பெயருக்கு வாழ்க்கையில் எந்தப் பொறுப்புமே அற்ற உதவாக்கரை என்பதே அர்த்தம். அவரது கடந்தகால வாழ்க்கையைப் பற்றி நல்லவிதமாகப் பேச எவருமே கிடையாது. பெரிஸ் ஹில்டனின் பெயரில் செய்தியொன்று வெளிவருமானால் செய்தியை வாசிக்காமலேயே உலகின் மற்றுமொரு அருவருக்கத்தக்க செயலில் அவர் ஈடுபட்டுள்ளார் என முன்கூட்டியே ஆரூடம் கூறும் அளவுக்கு அவரது பெயர் பிரசித்தம் (?) பெற்றுள்ளது என அதிருப்தியாளர்கள் கூறுகின்றனர்.

''மற்றவர்களின் விமர்சனங்கள் எனக்குத் தேவையில்லை. 'கீ'யுடன் நான் கொண்டுள்ள நெருக்கமான அன்பு அவள் சை வேட்ஸின் மகள் என்பதற்காக மட்டுமல்ல. உண்மையில் அவளும் நானும் பல விடயங்களில் ஒற்றுமை கொண்டுள்ளோம். நாங்கள் இருவரும் விலங்குகள், பறவைகள் வாசம் செய்யும் இடங்களுக்குச் சென்று மணிக்கணக்காக மெய்மறந்து ரசிப்போம். இருவரும் ஒரே சுப்பர் மார்க்கட்டில் பொருட்களை வாங்குவோம். ஒரே சலூனில் ஒரே மாதிரி முடி வெட்டிக்கொள்வோம். அவ்வாறே நகங்களை ஒரே மாதிரியாக வெட்டிக்கொண்டு ஒரே மாதிரியான நகச் சாயங்களைப் பூசிக்கொள்வோம். உண்மையில் இந்தச் சிறுமியால் எனது வாழ்க்கையில் மகத்தானதொரு மாற்றம் நிகழ்ந்துள்ளதை நான் உணர்கின்றேன். இந்த அரிய வரப்பிரசாதத்தை எனக்கு ஏற்படுத்தித் தந்த அவளது தந்தைக்கு நான் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.'' என பெரிஸ் ஹில்டன் உணர்ச்சி ததும்பிய குரலில் நிருபர்களுக்குத் தெரிவித்தார்.

**- தமிழில்: சுப்பர்**

பெரிஸ் ஹில்டனை சுற்றி வலம் வந்த பெண் நண்பிகளில் அவரது வயதை ஒத்தவர்கள் ஒருவரும் இருக்கவில்லையென்பது புதுமையானதொரு விடயம்.

''எனக்கு இருப்பவர்களெல்லாம் ஆண் நண்பர்களே. நண்பிகள் இல்லாதது ஒரு வகையில் நல்லதே. பெண்களைப் புரிந்துகொள்வது கஷ்டமானது'' எனப் பெரிஸ் ஹில்டன் முன்னொரு தடவை கூறியுள்ளார். பெண் சிநேகிதிகளின் தொடர்பின்றி வாழ்ந்து வந்த பெரிஸ் ஹில்டனின் மனரீதியான வெற்றிடம் 'கீ' யின் சிநேகிதத்தால் ஈர்க்கப்பட்டிருக்கலாமென சில விமர்சகர்கள் கூறுகின்றனர். இது ஏற்றுக்கொள்ளக்கூடிய உண்மைதான்.

1981ஆம் ஆண்டு பெப்ரவரி 17ஆம் திகதி பிறந்த பெரிஸ் ஹில்டன், உலகெங்கும் கிளைகளைப் பரப்பி பிரமாண்டமாக வேரூன்றி நிற்கும் ஹில்டன் ஹோட்டல்களின் அதிபரான கொன்ராட் ஹில்டனின் பேத்தியாவார். அழகியாக, பாடகியாக, நடிகையாக விளங்கிய பெரிஸ் தவறாது இரவுக் களியாட்ட விடுதிகளில் கலந்துகொள்வது வழக்கம். எனினும், அவரது திறமைகள் எதிர்பார்த்த அளவில் வெளிப்படவில்லையென்பது இரகசியமல்ல.

''செல்வத்தை மட்டும் முதலீடாக வைத்துக்கொண்டு அலட்சியப்போக்கில் வாழ்க்கை நடத்திய எவரும் நட்சத்திரமாக முடியாதென்பதற்கு பெரிஸ் ஹில்டன் நல்லதொரு உதாரணம்'' என நாளிதழொன்று ஒருமுறை செய்தி வெளியிட்டிருந்தது.

2007ஆம் ஆண்டு உலகில் மிகப்பெரும் செல்வத்தைக் கொண்ட நட்சத்திரமாக கின்னஸ் புத்தகத்தில் இடம்பிடித்த பெரிஸ் 2006ஆம் ஆண்டில் உலகில் மிகவும் வேண்டப்படாத இரண்டாவது பிரசித்த பெண்ணாக மக்கள் கருத்துக் கணிப்பில் தெரிவுசெய்யப்பட்டிருந்தார்.

வேண்டப்படாத நபராக ஹில்டனை இரண்டாவது இடத்துக்கு தள்ளிவிட்டு முதலிடத்தை சுவீகரித்தது பிரபல பாடகி பிரிட்னி ஸ்பியர்ஸ் மட்டுமே.

பிரசித்த நட்சத்திரமாகத் தன்னை நிலைநிறுத்திக்கொள்ள பெரிஸ் ஹில்டன் ஊடகங்கள் மூலமாகப் பல குட்டிக்கரணங்கள் அடித்தபோதும் அது கைகூடவில்லை. மக்கள் மனதிலிருந்த அதிருப்தியை பணத்தால் நீக்க அவரால் முடியாமல் போயிற்று.

இதற்கிடையில் போதை மருந்துப் பழக்கத்துக்கு ஆளான பெரிஸ் ஹில்டன் தனது மரியாதையை மென்மேலும் குறைத்துக்கொண்டார். அமெரிக்க நாளிதழ்கள் ஒரு வாரகாலமாக அவரது செய்திகளைப் பிரசுரிக்காமல் இருட்டடிப்புச் செய்து தமது அதிருப்தியை வெளிக்காட்டின. வார இறுதியில் தமது கூட்டு விமர்சனத்தை வெளியிட்ட இந்த



(15 ஆம் பக்கம் பார்க்க...)

# அதே இடம் அதே பெயர்

## குறுங்கதை

''ஹாஸ்விந்த்... இஞ்சாலை வாங்கோ. என்ர செல்லம் வெளியால போகாதேங்கோ...வாங்கோ செல்லம்...''தன் மகனை அன்போடு அழைத்தாள் அந்தப் பெண். அவள் அந்த பேருந்து நிலையத்தின் இருக்கையில் அமர்ந்திருக்க, குறும்புத்தனமான அவளது பையன் அங்கும் இங்கும் ஓடுவதுமாக இருந்தான். அவளோ ''ஹாஸ்விந்த்...ஹாஸ்விந்த் '' என, செல்லமாய் அவனை இழுத்தாள். அந்தப் பெயர் நிரூசியாவின் காதுகளில் விழவே, பையனையும், தாயையும் பார்த்தாள். அந்நேரம்...அந்த நினைவுகள் அவள் மனதில் மெதுவாய் ஓடிவந்தன.

* * *

சில வருடங்களுக்க முன்பு, அவள் யுவராஜ் என்ற இளைஞனைக் காதலித்தாள். இருவரும் உயிர்க் காதலர்களாய் உலவித் திரிந்தவர்கள். உனக்காக நான்..எனக்காக நீ என்பதாய் உள்ளத்தைப் பறிமாறிக் கொண்டவர்கள். திருமணம் செய்வதற்கு முதலே, பலவாறாய் கற்பனை செய்து வாழ்ந்தவர்கள்.ஒரு மாலைப் பொழுதிலே நிரூசியாவிடம் யுவராஜ் கேட்டான். ''நிரூ...நாங்கள் திருமணம் செய்த பிறகு எங்களுக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்தால்...என்ன பெயர் வைக்கிறது...?'' சிரித்தபடியே நிரூசியா சொன்னாள். '' ஹாஸ்விந்த் என்று வைப்பம். அது ஒரு வித்தியாசமான பெயர். எங்கட பிள்ளைக்கும் வித்தியாசமாய் இருக்கும்.'' அதன் பின்பு, அதுவே தம் பிள்ளைக்குப் பெயராகும் என, இருவரும் நினைத்திருந்தனர். ஆனால், விதி தீர்மானிக்க வேண்டுமே? இந்தக் காதலை கத்தரித்தது நிரூசியாவின் குடும்பம். எப்படியோ அவளைப் பணிய வைத்து வேறு திருமணமும் செய்து வைத்தனர். அது நடந்து இப்போது மூன்று வருடங்களாகி விட்டன. அவள் திருமணம் செய்த குறிப்பிட்ட நாளிலேயே யுவராஜ் பற்றிய செய்திகள் அவளுக்கு கிடைக்கவில்லை.அவன் எங்கே என்பது பற்றியும் அவளுக்குத் தெரியாது.



இன்று, தன் ஊரில் இருந்து, ஒரு தொலைதூர ஊரில் உள்ள நண்பியின் திருமண நிகழ்ச்சிக்கு வந்துவிட்டு பேருந்துக்காய் பஸ்தரிப்பு நிலையத்திலே காத்திருக்கும் போதே, அந்தப் பெண் தன் மகனை அவ்வாறு அழைத்ததைக் கேட்டாள் நிருசியா. முன்பு யுவராஜும் அவளும் காதலர்களாய் இருந்த போது, தம் பிள்ளைக்காய் கற்பனையாய் தீர்மானித்த ஒரு பெயரில் இந்தப் பையனும் இருக்கின்றான் என, மனதுக்குள் நினைத்துக் கொண்டாள்.

அப்போது அங்கே ஒரு சைக்கிள் வந்து நின்றது. அதில் வந்தவர் அப்படியே நிற்க, அவரைக் கண்ட நிரூசியாவுக்கு நெஞ்சு திக் என்றது. அவனோடு பேசுவதா? பேசாமல் விடுவதா? தடுமாறியது மனசு.''அப்பா வந்திட்டார்... வாங்க ஹாஸ்விந்த்'' என, மகனை அழைத்தபடி பஸ்தரிப்பு நிலையத்தை விட்டு வெளியேறுகிறாள் அந்தப் பெண். சைக்களின் முன்னே ஹாஸ்விந்த் ஏற்றப்படுகிறான். அந்தப் பெண் யுவராஜின் தோளைப் பிடித்தபடி சைக்கிளின் பின்னால் ஏறுகிறாள். சைக்கிள் புறப் படுகிறது.

**யோ.புரட்சி**

தன் முன்னாள் காதலன் யுவராஜைக் கண்டு கொண்ட நிருசியா, அந்த நினைப்போடு தனது பேருந்திலே ஏறிக் கொண்டாள். பேருந்து விரைந்தது. தன் வீட்டையடைந்தாள். அவளைக் கண்டதும், அவளின் ஒரே மகன் ஹாஸ்விந்த் ''அம்மா '' என ஓடி வருகிறான்... *


## வரலாறாகும் நிகழ்வுகளை உடனுக்குடன் அறிக்கையிடுங்கள்



**நாட்டின் முன்னணி ஊடகத்துறை நிறுவனமாகிய, இலங்கை ஊடகவியல் கல்லூரியில் ஊடகத்துறையை பயிலுங்கள்**

ஒரு வருட ஊடகத்துறை டிப்ளோமாவிற்கான விண்ணப்பங்களை தற்போது ஏற்றுக்கொள்ள ஆரம்பித்துள்ளோம்.ஊடகத்துறையில் நீங்களும் தடம் பதிக்க விரும்பினால் உங்கள் பெயர், பிறந்த திகதி, கல்வி மற்றும் ஏனைய தகைமைக-ளுடன் எந்த பிரிவு(அச்சு, வானொலி, தொலைக்காட்சி )மற்றும் எந்த மொழியில் (தமிழ் ஆங்கிலம் சிங்களம் )கற்க ஆவலாய் உள்ளீர்கள் என்றும் நீங்கள் ஏன் இத்துறையை தெரிவு செய்தீர்கள் என்று 200 சொற்களுக்கு குறையாமல் கட்டுரை ஒன்றையும் எழுதி உங்கள் விண்ணப்பப்படிவத்தை எமக்கு அனுப்பி வைக்கவும்.

விண்ணப்பங்கள்- இல 96 கிருள வீதி, கொழும்பு – 05 என்ற முகவரிக்கு அல்லது info@slcj.lk என்ற முகவரிக்கோ 2010 நவம்பர் 30ஆம் திகதிக்கு முன் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

நுழைவுத்தகைமைகள் க.பொ.த உயர்தரத்தில் சித்தி க.பொ.த சாதாரணதரத்தில் ஆங்கில பாட சித்தியுடன் உயர்தர பரீட்சை பெறுபேற்றுக்காய் காத்திருப்பவர்களும் விண்ணப்பிக்கலாம்.

ஆரம்ப திகதி 2011 ஜனவரி 06

வயதெல்லை 18-25 வரை

**பாடநெறிக்கட்டணம்**

**அச்சு** ரூபா 50000 **வானொலி** ரூபா 60000 **தொலைக்காட்சி** ரூபா 75000

(தவணை முறையில் செலுத்த முடியும்)

வடக்கு கிழக்கு மற்றும் பொலநறுவை மாவட்டத்தை சேர்ந்த மாணவர்களுக்கு USAID புலமைப்பரிசில் உண்டு.அத்துடன் SLCJ இனால் வழங்கப்படும் மட்டுப்படுத்தப்பட்ட புலமைப்பரிசில்களும் உண்டு.

தொ.பே.0115353635
தொலைநகல் 0115335500
www.slcj.lk

SRI LANKA COLLEGE OF JOURNALISM
we shape the future

இலங்கை ஊடகவியல் கல்லூரியானது ஊடகத்துறையால் ஸ்தாபிக்கப்பட்டு கொண்டு நடத்தப்படும் இலங்கையின் முதன்மையானதும் இலங்கை மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி ஆணையகத்தின் P01/0435 இன் கீழ் பதிவு செய்யப்பட்ட ஓர் ஊடகத்துறை பயிற்சிக்கல்லூரியாகும்.


## கின்னஸ் சாதனை படை...

(14 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நாளிதழ்கள் பெரிஸ் ஹில்டன் தனது பெயரை நிலைநிறுத்திக்கொள்ள இனிமேல் செய்யக்கூடிய எந்தக் காரியங்களும் கிடையாது என முடிவைத் தெரிவித்தன.

எல்லாவற்றையும் கடந்துவந்த பெரிஸ் ஹில்டன் இப்போது சை வேட்ஸுடன் இணைந்து புதியதொரு அத்தியாயத் தைப் படைக்க முயல்கிறார். அண்மையில் அவர் தனது இணையத்தளமான Twitter இல் பின்வருமாறு தெரிவித்திருந்தார்.

''இப்போதுதான் வீடு திரும்பி னோம். சை வேட்ஸுடன் ஹெலோவின் உற்சவத்துக்காகப் பொருட்களை வாங்கக் கடைக்குச் சென்றோம். பெரிய தொரு பூசணிக்காயை வாங்கினோம். அதனை அலங்கரிக்க மெழுகுவர்த்தி கள், அலங்காரப் பொருட்கள், வண்ணக்கடதாசிகள், சிறுவர்களுக் கான பரிசுப் பொருட்கள் போன்ற ஏராளமானவற்றை வாங்கினோம்.

''ஒக்டோபர் 31ஆம் திகதி ஹெலோ வின் உற்சவத்தில் அநாதைச் சிறுவர்க ளுக்கு பரிசுகள் வழங்கி அவர்களைக் குதூகலப்படுத்தி அதன் மூலம் நாங்கள் மனநிறைவைப்பெற முயல்கின் றோம்'' என்று குறிப்பிட்டிருந்தார். சை வேட்ஸின் மகள் 'கீ'யுடன் தொடர்பு கொண்ட பின் பெரிஸ் ஹில்டனின் வாழ்க்கை முறையில் நல்லதொரு திருப்பம் ஏற்பட்டுள்ளதாக விமர்சகர் கள் தெரிவித்துள்ளனர். இப்போது அவருக்கு நல்லதொரு குடும்ப வாழ்க்கை தேவைப்பட்டுள்ளது. எப்போதாவது தனது சொந்தக் குழந்தையை சுமக்கும் வரை 'கீ' யைத் தனது மூத்த மகளாக வரித்துக் கொள்வதென அவர் தீர்மானித் துள்ளதாகத் தெரியவருகின்றது.

''எனக்கு 30 வயதாகும்போது குறைந்தது நான்கு பிள்ளைகளுக்குத் தாயாகியிருக்கவேண்டும் என்பதே எனது கனவு'' என்று பெரிஸ் ஹில்டன் ஒரு முறை கூறியுள்ளார். இப்போது அவருக்கு 29 வயதாகிறது. எனவே, அதிகபட்சம் இரட்டைப் பிள்ளைகள் பிறந்தாலும் ஒரே வருடத்தில் நான்கு பிள்ளைகளுக்குத் தாயாக முடியாது. எனினும், முந்தைய கனவுகளை ஒருபுறம் ஒதுக்கி வைத்துவிட்டு சை வேட்ஸின் மனைவியாகும் சந்தர்ப்பம் பெரிஸ் ஹில்டனுக்கு இப்போது வாய்த்துள்ளது. இவரது தாயான கெதரின் ஹில்டனும் சை வேட்ஸை மருமகனாக ஏற்றுக்கொள்ளச் சம்மதம் தெரிவித்துள்ளார்.

''அவர் கண்ணியம் மிக்க ஒரு ஆண்மகன். எனது மகளை எந்தச் சந்தர்ப்பத்திலும் அவர் நிர்ப்பந்திக்க வில்லை. அவளும் புத்திசாலிப் பெண். சரியான நேரத்தில் சரியான முடிவையெடுக்க அவளுக்குத் தெரியும்'' என கெதரின் ஹில்டன் கூறியுள்ளார்.

''சை வேட்ஸுக்கு பெரிஸ் மீது காதல் கிடையாது; அவர் பெரிஸின் பிரபல்யமான பெயரைப் பயன்படுத் திக்கொள்ளப் பார்க்கிறார்'' என ஒரு சாரார் கூறுகின்றனர்.

எவ்வாறாயினும் சை வேட்ஸ், பெரிஸ் ஹில்டன் ஆகிய இருவருமே இதுவரை தங்களது திருமணத்தைப் பற்றிப் பகிரங்கமாகத் தெரிவித்தது கிடையாது. எனினும், இந்தத் திருமணம் கனிந்து வருமாயின் அது வரலாற்றுப் புகழ் பெறக்கூடியதென விமர்சகர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

பெரிஸ் ஹில்டன் ஒருமுறை தெரிவித்த கருத்து; ''நான் எந்த வயதில், யாரை, எங்கே, எப்போது மணம் முடிப்பேன் என எனக்குத் தெரியாது. எவ்வாறாயினும், ஒருநாள் அத்தகைய திருமணம் வண்ண விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட வெள்ளைத் தேவதைகள் சூழவுள்ள சொர்க்கத்திலேயே நடைபெறும் என எனக்குப் பரிபூரண நம்பிக்கை யுண்டு'' எனக் கூறியுள்ளார். *

# கடவுளோ... காமெடியோ... 'பார்யா!' என்று அசத்துவது ஆர்யா ஸ்டைல்



★ கேரளாவின் கண்ணூர் மாவட்டத்தில், 1980 ஆம் வருடம் டிசம்பர் 11 ஆம் திகதி பிறந்தவர் ஆர்யா. அப்பா உமர், அம்மா ஜமீலா. மகனுக்கு வைத்த பெயர் ஜம்ஷத். அரபியில் 'போர் வீரன்' என்று பொருள். சினிமாவுக்காக ஆர்யா ஆனார். ஷாகீர், ராஸி என்று இரு தம்பிகள்!

★ கேரளாவில் இருந்து தமிழ்நாட்டுக்குக் குடிபெயர்ந்தது குடும்பம். சென்னை எஸ்.பி.ஓ.ஏ மெட்ரிகுலேஷன் பள்ளி, வண்டலூர் கிரசன்ட் இன்ஜினியரிங் கல்லூரி ஆகியவற்றில் படிப்பு. கம்ப்யூட்டர் சயின்ஸ் பட்டதாரியான ஆர்யாவின் தேர்ச்சி 78 சதவிகிதம்!

★ தமிழ் தெரியாத காரணத்தால், பள்ளிப் பருவத்தில் அதிகம் பேச மாட்டார். பேசினாலும் ஆங்கிலம்தான். பின்னாளில் தமிழில் சரளமாகப் பேசக் கற்றுக்கொண்டாலும், இன்னமும் தமிழில் எழுதப் படிக்கத் தெரியாது!

★ விமான பொம்மைகள் வாங்கி விளையாடுவதுதான் பொழுது போக்கு. பைலட் ஆக வேண்டும் என்பது அப்போதைய லட்சியமாம்!

★ ஆர்யாவின் அப்பா ஒரு கால்பந்து வீரர். மகனுக்கு அதன் மீது பிரியம். நான்கு வயதில் இருந்து விளையாடப் பழகிவிட்டார். இப்போதும் ஃபுட்பால் பிரியர்!



★ நண்பர்களோடு அமெரிக்கா சென்று செட்டிலாகும் திட்டத்தை இரட்டைக் கோபுரத் தாக்குதல் கைவிடச் செய்துவிட்டது. முஸ்லிம் என்பதால் ஆர்யாவைத் தவிர, மற்றவர்களுக்கு அமெரிக்க விசா கிடைக்க, நண்பர்கள் பறந்துவிட்டார்கள். தற்காலிகமாக மாடலிங் பக்கம் ஒதுங்கினார்!

★ மாடலிங் போட்டோ பார்த்து 'உள்ளம் கேட்குமே' பட வாய்ப்புக் கொடுத்தார் இயக்குநர் ஜீவா. அப்போதுதான் ஜம்ஷத் என்ற பெயரை ஆர்யா ஆக்கினார் ஜீவா!

★ 'உள்ளம் கேட்குமே' வெளியாகத் தாமதம் ஆனதால், ஆர்யாவின் முதல் படமாக முந்திக்கொண்டது 'அறிந்தும் அறியாமலும்'. அடாவடி அண்ணனாக 'குட்டி' என்கிற கேரக்டரில் நடித்த ஆர்யாவுக்கு முதல் படத்திலேயே ஃபிலிம்ஃபேர் பத்திரிகையின் 'சிறந்த அறிமுக நடிகர்' விருது கிடைத்தது!

★ ஐந்து வருடங்களில் 12 தமிழ்ப் படங்கள். 'மாயக் கண்ணாடி', 'சிவா மனசுல சக்தி', 'காதல் சொல்ல வந்தேன்' ஆகிய மூன்று படங்களில் கௌரவ வேடம். 'வருடு' என்ற தெலுங்குப் படத்தில் அல்லு அர்ஜுனாவை எதிர்க்கும் வில்லனாக நடித்து இருக்கிறார்!

★ ஃபுட்பால் தவிர, சைக்கிளிங், ரன்னிங் இரண்டுமே அதற்குரிய நுணுக்கங்களோடு புரொஃபஷனலாகத் தெரியும்!

★ வெள்ளிக் கிழமை நடக்கும் ஜும்மா தொழுகையை தவறிவிட மாட்டார். ரம்ழான் மாதத்தில் தவறாமல் நோன்பு இருப்பார்!

★ அன்றும் இன்றும் பிடித்த நடிகை... கஜோல். அடுத்ததாக, சிம்ரன். நடிகர்களில்... ஷாரூக் கான்!

★ ஜீன்ஸ், டி-ஷர்ட் பிடித்த உடை. பெரும்பாலும் சிவப்பு-கறுப்பு கலவையிலேயே ஆடைகள் இருக்கும்!

★ இயக்குநர் விஷ்ணுவர்தன், ஒளிப்பதிவாளர் நீரவ்ஷா, விஷால், ஜீவா, பரத், அப்பாஸ் என சினிமாவிலும் நண்பர்கள் அதிகம். பில்லியர்ட்ஸ் ஆடுவது ஆர்யாவின் மாதாந்திரப் பழக்கங்களில் ஒன்று!

★ சென்னை அண்ணா நகரில் See Shell என்கிற ஹோட்டலை நடத்தி வருகிறார், ஆர்யாவின் தந்தை உமர். அடிக்கடி அங்கே விசிட் அடித்து வாடிக்கை யாளர்களிடம் ஜாலியாகப் பேசுவார் ஆர்யா!

★ அம்மா ஜமீலா செய்யும் பிரியாணி, ஆர்யாவின் சினிமா நண்பர்கள் மத்தியில் அவ்வளவு பிரபலம். ஞாயிற்றுக் கிழமை ஆர்யா வீட்டில் இருந்தால், பிரியாணிக்காகவே நிறையப் பேர் படை எடுத்து வருவார்கள். அத்தனை பேருக்கும் சளைக்காமல் பிரியாணி பரிமாறிச் சிரிப்பார் ஜமீலா!

★ எந்த விஷயத்தையும் ஆர்வமாகக் கற்றுக்கொள்வார். 'ஓரம்போ' படத்துக்காக ஆட்டோ டிரைவர் உதவியுடன் ஒரே இரவில் ஆட்டோ ஓட்டக் கற்றுக்கொண்டவர்!

★ காதல் திருமணம்தான் என்பதில் உறுதியாக இருக்கிறார் ஆர்யா. அவரது கிசுகிசுப் பட்டியல்... பிதப்பிரியா, பூஜா, நிலா, ஏமி ஜாக்சன் என்று தொடர்ந்துகொண்டே இருக்கிறது. 'சிக்ஸ்த் படிக்கிறப்போ ஒரு பொண்ணு மேல க்ரஷ். அது அப்பவே முடிஞ்சிருச்சு. அதுக்கு அப்புறம் எத்தனை லவ்னு இதுவரை எண்ணலை பாஸ்!' என்று பளிச் பதில் சொல்வார்!

★ சச்சின், மரடோனா, ரொனால்டோ, லயோனல் மெஸ்ஸி, மைக்கேல் ஷூமேக்கர் என ஆர்யாவின் ரோல் மாடல்கள் அனைவருமே விளையாட்டுத் துறைப் பிரபலங்கள். ஒரே ஒரு விதிவிலக்கு... இசை அமைப்பாளர் ஏ.ஆர்.ரஹ்மான்!

★ 'Nothing is impossible' ஆர்யாவுக்குப் பிடித்த வாசகம். 'ஒரு விஷயத்தில் இறங்கினால்தான், அதைச் செய்ய முடியுமா, முடியாதான்னு தெரியும். இறங்காமலேயே வேடிக்கை பார்க்கிறது நமக்குப் பிடிக்காது!'



என்பார் அடிக்கடி!

★ பாம்பு என்றால் படை நடுங்குமோ இல்லையோ... தொடை நடுங்குவார் ஆர்யா. இருட்டு என்றாலும் பயம் அதிகம். இருட்டில் தனியாகச் செல்ல நேர்ந்தால் பயத்தில் கண்களை மூடிக்கொள்வாராம்!

★ அடிக்கடி கழுத்தில் கைவைத்து வானம் பார்த்து யோசிப்பது ஆர்யா ஸ்டைல்!

★ ஷூட்டிங் ஸ்பொட்டுக்கு பெரும்பாலும் பைக்கில் சென்றுவிடுவார். ஹெல்மெட் மாட்டிக்கொண்டு சந்து பொந்து வழியாக கட் அடித்துச் செல்வதில் இருக்கும் த்ரில், ஏ.சி காருக்குள் கிடைக்காது என்பது காரணம்!

★ டிஸ்கொதே பார்ட்டி கொண்டாடும் ஆர்யாவைப் பார்க்க 'பார்க்' அல்லது திருவான்மியூர் Le Waterina ஹோட்டல்களுக்குச் செல்ல வேண்டும்!

★ ''பிடிவாதம்தான் என் கெட்ட குணம். ஒரு முடிவு எடுத்துவிட்டால், என்ன இழப்பு வந்தாலும்... அதைச் செய்துபார்க்க ஆரம்பித்துவிடுவேன். இந்தக் குணத்தால், பல விஷயங்களை இழந்து இருக்கிறேன். இருந்தாலும் என்னால் மாற முடியவில்லை!'' தன்னுடைய நெகட்டிவ் பக்கம் பற்றி ஆர்யா சொல்வது இதுதான்!



## மாதிரிக் கவிதைகள்

மரம் வளர்ப்போம்
எனக்கோசமிட்டவர்கள் இன்று
கோடாரியை கூராக்கச்
சொல்கிறார்கள்!

★ ★ ★

பாட்டியின் முணுமுணுப்பு
தூங்கவிடவில்லை - காதலியின்
கனவோடு இருக்கும் பேரனை.

★ ★ ★

திருடனாலும் எடுத்துச் செல்ல
முடிவதில்லையே! கிணற்றுக்குள்
தெரியும் நிலவை...

★ ★ ★

தொலைவில் இருள் சூழ்ந்த
மலை தெரிகிறது - அது மலை
அல்ல மின்சாரம் வழங்கப்படாத
ஒரு கிராமம்!

★ ★ ★

வரட்சியான காலங்களிலும்
வீரர்களின் கல்லறை அருகில்
ஊசலாடுகின்றன.
பசுமையான நினைவுகள்.

★ ★ ★

மொட்டை மாடியில் நான்
பார்த்த நிலா - சுடிதார்
அணிந்திருந்தது

★ ★ ★

ஊளையிட்டுக் கேட்கிறது
அது நரியா..? நாயா..?
மனிதர்களாகவும் இருக்கலாம்!

★ ★ ★

தந்தையின் சடலம் இன்னும்
சுடலைக்கு போகவில்லை...
சகோதரர்களோ!
சொத்துக்கு அடிபடுகின்றார்கள்!

★ ★ ★

மின்மினிப் பூச்சிக்கு
எங்கிருந்து கிடைக்கிறது
மின்சாரம்!

★ ★ ★

காவல் பொம்மைகளின்
தலைகளில்...
குருவிக்கூடுகளா..?

★ ★ ★

நீண்ட கூந்தல்களுக்கான
விளம்பரப்பலகை தொங்குகின்றது
சலூன் கடைகளில்!

★ ★ ★

சூரியனுக்கு சோம்பல்
வருவதில்லையா..? சரியான
நேரத்துக்கு விழித்துவிடுகிறானே!

★ ★ ★

நேற்று இறந்துவிட்டேன்
என்று நம்புகிறேன்
இன்றைய கனவில் நான்
சுடுகாட்டில் இருப்பதால்!

★ ★ ★

நீ கனவில் வருவதால்
உனக்கும் சேர்த்துக் கொடுத்துக்
கொண்டிருக்கிறேன்
கொழும்பில் வீட்டு வாடகை!

★ ★ ★

ஒத்திகைக்கு... நான் பார்ப்பதே
ஒத்திகையாகி விட்டது!

(மாதிரிகள் தொடரும்)

நெடுந்தீவு முகிலன்

# பெண்களே...
## உங்களுக்காகவும் வாழுங்கள்

பெண்கள் எப்பொழுதும் தங்கள் உடல் ஆரோக்கியத்தைப் பாதுகாக்க நேரம் ஒதுக்குவதேயில்லை. குடும்பம், உறவுகள் போன்றவற்றைப் பாதுகாப்பதிலேயே அவர்களின் நேரம் போய்விடுகிறது. குடும்பத்தைக் கவனிக்க கூடாது என்று கூற வரவில்லை, பெண்கள் தங்களுக்காகவும் வாழக் கற்றுக்கொள்ளவேண்டும்.



* கண்டிப்பாக காலை உணவைத் தவிர்க்கக்கூடாது. இரவு உணவுக்கும் காலை உணவிற்கும் இடையில் 12 மணிநேர இடைவெளி இருக்கிறது. சாப்பிடாமல் இருப்பது உடலுக்கும் மனதிற்கும் சோர்வைத் தரும். சாப்பிட நேரம் இல்லையென்றால் குறைந்தபட்சம் பாதாம் போன்ற பருப்புகளையும், வாழைப்பழத்தையுமாவது சாப்பிட வேண்டும்.

* வயிறு மற்றும் இடுப்புச் சதையைக் குறைக்க முயற்சிப்பது நல்லது. கை, கால் போன்ற பகுதிகளில் இருக்கும் கொழுப்புகள் நம் உடம்பில் சரியான இரத்த சர்க்கரை இருக்குமாறு பார்த்துக் கொள்கின்றன. மாறாக வயிறு மற்றும் இடுப்புப் பகுதியில் இருக்கும் அதிகப்படியான கொழுப்பானது உடலுக்குத் தீங்கு விளைவிக்கும். சாப்பாட்டு நேரம் வந்துவிட்டது என்பதற்காகச் சாப்பிடாமல், பசித்தால் மட்டுமே சாப்பிடுவது என்ற பழக்கத்தைக் கடைபிடிப்பது நல்லது. வறுப்பது, பொரிப்பது போன்றவற்றை விட்டுவிட்டு, வேக வைத்த உணவுகளை அதிகமாகச் சாப்பிடுவது நல்ல பலனைக் கொடுக்கும்.

* அதிகப்படியாக 'ஈஸ்ட்' சேர்த்த உணவுகளைச் சாப்பிடுவது நல்லதல்ல. இவற்றை அதிகமாகச் சாப்பிடுவதால் உற்சாகமின்மை ஏற்படும் என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன. உற்சாகமும் மகிழ்ச்சியும் நம்மிடமே இருக்க வேண்டுமென்றால் 'பேக்கிங்' செய்யப்பட்ட உணவுகளைத் தவிர்ப்பது நல்லது.

* மெனோபஸ் காலத்தை நெருங்கும்போது முகத்தில் வெயிலினால் ஏற்படும் தாக்குதல்கள் அதிகமாக இருக்கும். இப்படியான காலங்களில் கண்டிப்பாக சூரிய ஒளிக்கதிர்களிலிருந்து பாதுகாக்கும் கிரீம்களைப் போட்டுக் கொள்ளவேண்டும்.

* இந்தியாவில் உள்ள பெண்களில் பெரும்பாலானவர்கள் இரும்புச் சத்துக் குறைபாடுடையவர்கள் என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன. அதனால் தினமும் கீரை, உலர்ந்த திராட்சை, வெல்லம் போன்றவற்றைச் சாப்பிடுவதால் இந்தக் குறைபாட்டை நீக்கமுடியும் அல்லது இரும்புச்சத்து மாத்திரைகளை மருத்துவரின் ஆலோசனைப்படி சாப்பிடலாம்.

* 'ஹீல்ஸ்' பாதணிகளைத் தொடர்ந்து உபயோகிப்பது முதுகு வலி, மூட்டு வலி போன்ற பிரச்னைகளை ஏற்படுத்தும். வாரத்தில் இரண்டு நாட்களாவது தட்டையான அடிப்பாகத்தைக் கொண்ட பாதணிகளை உபயோகிப்பது கால்கள் மூச்சுவிடுவதற்கு வழிவகுக்கும்.

* தினசரி வாழ்க்கையில் சுலபமான யோகாசனங்களை நடைமுறைப்படுத்தலாம். கீழே விழுந்த பொருட்களை எடுப்பதற்கு முதுகை வளைத்து நன்றாக குனிந்து எடுக்கலாம். உட்காரும்போது நன்றாக காலை மடக்கி உட்காரலாம். ஐம்பதுகளில் இருந்தாலும் இதைச் செய்வது நல்ல பலனைக் கொடுக்கும்.

* அதிகப்படியான புரதச்சத்து புற்றுநோயை உண்டாக்கும். புரதச்சத்தானது நம்முடைய உணவில் 20 சதவீதத்திற்கு மேல் அதிகமாகாமல் பார்த்துக்கொள்ளவேண்டும். ஆனால் சைவப் பிரியர்கள் இந்த 20 சதவீதத்தைக் கூட முழுமையாகச் சாப்பிடுவதில்லை. இதனால்தான் உணவு நிபுணர்கள் அதிகப்படியான புரதச் சத்துள்ள உணவைச் சாப்பிட வலியுறுத்துகின்றனர்.

* பெண்களில் 80 சதவீதத்தினர் சரியான அளவிலான உள்ளாடைகளைத் தேர்ந்தெடுப்பதில்லை என்று ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன. தவறான அளவிலான உள்ளாடைகளை உபயோகிப்பதால் மார்புப் பகுதியில் கட்டிகள், வலி போன்றவை ஏற்படும். மேலும் முதுகுவலி, தோள்வலி, சோர்வு, மூச்சு விடுவதில் சிரமம் போன்றவையும் ஏற்படும். அதனால் சிரமம் பார்க்காமல் சரியான அளவு உள்ளாடையைத் தேர்ந்தெடுத்து அணிவது நல்லது.

* பெண்களுக்கு சோயா மிகவும் நல்லது. அதிகப்படியாக அருந்தப்படும் பசும்பால், எருமைப்பால் போன்றவை கொழுப்புச்சத்தை அதிகரித்துவிடும். இதற்குப் பதிலாக சோயா பாலிலிருந்து கிடைக்கும் கல்சியம் மிகவும் நல்லது. மேலும் சோயாவில் புரதச்சத்து உள்ளது. இதை உட்கொண்டால் பெண்களின் உடலில் ஈஸ்ட்ரோஜன் அளவும் அதிகரிக்கும்.

# தம்பதிகளே குழந்தை பெறுவதை தள்ளிப்போடாதீர்கள்...



இப்போதெல்லாம் திருணம் ஆன தம்பதியர் பலர், குழந்தை பெற்றுக்கொள்வதைத் தள்ளிப்போட்டு வருகிறார்கள். இவர்களில் பலர், தங்களது லட்சியத்தை எட்டுவதற்காகவும், குடும்பத்தேவைகள் அனைத்தையும் பூர்த்தி செய்வதற்காகவும் குழந்தை பெற்றுக்கொள்வதைச் சிறிது காலத்திற்குத் தள்ளிப்போட்டு வருகிறார்கள்.

இப்படி குழந்தை பெறுவதைத் தள்ளிப்போட்டு, முதுமையில் தாய்மைப்பேற்றை அடையும் பெண்களின் எண்ணிக்கை சமீபகாலமாக அதிகரித்து வருவதாக சமீபத்தில் நடத்தப்பட்ட ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளது.

பெண்கள் வயது அதிகமான காலகட்டத்தில் தாய்மைப்பேறு அடைய விரும்புவது என்ற பிரச்சினை உலகின் பல நாடுகளிலும் காணப்படுகின்றது. செயற்கைக் கருத்தரிப்புமுறை கண்டுபிடிக்கப்பட்டு சுமார் 25 வருடங்களுக்கு மேல் ஆகிவிட்டாலும், இந்தக் காலதாமதமான தாய்மைப்பேறு என்பது மருத்துவ அறிவியலின் உதவியுடன் அடையக் கூடிய ஒன்றாகவே இருக்கின்றது.


ஆனால், மருத்துவ ரீதியாக இது சாத்தியமாகிவிட்டாலும், 40 வயதுக்கு மேல் குழந்தை பெற்றுக் கொள்ளும் தாய்மார்கள் உடல்ரீதியாகப் பல பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர். மேலும், இவ்வாறு பிறக்கும் குழந்தைகளும் மருத்துவ ரீதியான பல பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர்.



இதுதவிர சமூக, உளவியல் ரீதியான பிரச்சினைகளும் இம்மாதிரியான, காலதாமதமான தாய்மைப்பேறு காரணமாக ஏற்படுகின்றன என மருத்துவ ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

நீங்களும் குழந்தை பெறுவதைத் தள்ளிப்போடும் தம்பதியர் என்றால், இப்போதே உஷாராகிவிடுங்கள்...

# நண்டு காரக்குழம்பு



*தேவையானவை :*
நண்டு - அரைக் கிலோ
சீரகம் - ஒரு டீஸ்பூன்
மிளகு - இரண்டு டீஸ்பூன்
மிளகாய்த்தூள் - இரண்டு டீஸ்பூன்
பெரிய வெங்காயம் - இரண்டு
தக்காளி - ஒன்று
பூண்டு - ஐந்து பல்
தேங்காய் துருவல் - நான்கு ஸ்பூன்
எண்ணெய் - இரண்டு டீஸ்பூன்
கொத்தமல்லி தழை - இரண்டு டீஸ்பூன்
மஞ்சள் தூள் - ஒரு டீஸ்பூன்
உப்பு - தேவையான அளவு

பார்த்ததுமே நாவில் நீர் ஊறவைக்கும் தென்னிந்திய சமையல் வகையைச் சேர்ந்தது நண்டு காரக்குழம்பு. மசாலாவில் ஊறிய நண்டின் சுவை ஆளை மயக்கிவிடும்.

**செய்முறை :**

நண்டை இரண்டாக வெட்டினால் ஓடு கழன்று விடும். உள்ளிருக்கும் குடல் பகுதி, ஓட்டை நீக்கிவிட்டு, மீதிப் பகுதிகளைக் கழுவிச் சுத்தம் செய்யவேண்டும். வெங்காயத்தைப் பொடியாக நறுக்கவும். சிறிதளவு எண்ணெய் ஊற்றி, வெங்காயத்தில் பாதியைச் சேர்த்து வதக்கி, நறுக்கிய தக்காளியை சேர்த்துக் கொதிக்கவிட வேண்டும்.


நண்டைச் சேர்த்து சிறிது நேரம் வதக்கவும். மீதி வெங்காயம், தேங்காய், மிளகாய், மஞ்சள் தூள் சேர்த்து விழுதாக அரைத்து, அரை கப் தண்ணீர் ஊற்றி நண்டுடன் கொதிக்க விடவேண்டும். பத்து நிமிடங்கள் வேகவைத்த பின்னர் அடுப்பிலிருந்து இறக்கி, மல்லி தழையைத் தூவலாம்.

சாதத்தில் பிசைந்து சாப்பிட்டால் சுவையாக இருக்கும். படத்தில் அழகுக்காக ஆவியில் வேகவைக்கப்பட்ட நண்டின் ஓட்டுப்பகுதி மேலே வைக்கப்பட்டுள்ளது.

# பாலுறவின்போது அவசரம் வேண்டாம்

முன்பெல்லாம் உள்ளூரிலேயே, சுற்று வட்டாரங்களிலேயே தங்களின் சொந்த வேலைகளைப் பார்த்தவர்கள், தற்கால நாகரிக, அவசர உலகில் பணி நிமித்தமாக பல கிலோமீற்றர் தூரம் பயணம் செய்யவேண்டிய நிலையேற்பட்டுள்ளது. அனைத்துமே அவசரகதியாகிவிட்ட நிலையில், பாலுறவுப் புணர்ச்சியிலும் மனிதர்கள் அவசரத்தைப் பிரயோகப்படுத்த முடியுமா?

அவசரத்தில் முழுமையான பாலுறவுப்புணர்ச்சி கொள்ளமுடியுமா? பாலுறவு என்பதே இனவிருத்திக்கும், மனிதன் தனது உணர்ச்சிகளை வெளிப்படுத்துவதற்குமான ஒரு புனிதமான உறவு. பொதுவாகப் பாலுறவுப் புணர்ச்சி கொள்ளும் இருவருமே (கணவன் - மனைவி) ஒரே



மனநிலையில் இருத்தல் அவசியம். கணவன் களைப்புடன் வந்து, மனைவி பாலுறவு மனோநிலையில் இருந்தாலோ, அல்லது மனைவிக்கு விருப்பமில்லாமல் கணவன் விடாப்பிடியாக பாலுறவு கொண்டாலோ, அது சுவரஸ்யமானதாக அமைய வாய்ப்பில்லை என்பதே நிபுணர்களின் கருத்து.

திருமணம் ஆன புதுத் தம்பதிகளை 'ஹனிமூன்' அனுப்பி வைப்பதே இருவரும், வேறு எந்தச் சூழ்நிலையையும் யோசிக்காமல், மனம் மகிழ ஒரே சிந்தனையில் பாலுறவுப் புணர்ச்சிகொள்ளவேண்டும் என்ற நோக்கத்தில்தான்.

பாலுறவு கொள்வதற்கு முன் மேற்கொள்ளப்படும் கிளர்ச்சித் தூண்டல் மிகவும் முக்கிய பங்காற்றுகிறது. இந்தத் தூண்டல் ஆளுக்கு ஆள் வேறுபடும் என்பதோடு, பாலுறவில் இருவரில் யாருக்காவது ஒருவருக்கு நாட்டம் இல்லாதபோது, என்னதான் கிளர்ச்சியைத் தூண்டினாலும் அது சுவாரஸ்யத்தை அளிக்காது.

எனவே பாலுறவுப் புணர்ச்சியின்போது, அவசரத்தைக் கடைப்பிடிப்பதைத் தவிர்க்கவேண்டும். திருமணமாகி ஒரு சில ஆண்டுகளுக்குப் பின் பல்வேறு காரணங்களால் இருபாலருக்குமே பாலுறவில் நாட்டம் விட்டுப்போவது சகஜம்தான். அதுபோன்ற நிலையில், குறிப்பிட்ட இடைவெளியில், அவரவர் சூழ்நிலைக்கேற்ப, அவ்வப்போது பாலுறவு வைத்துக்கொள்வதால் மனதில் உற்சாகம் எப்போதும் நீடிக்கும் என்பதில் ஐயமில்லை.

# சமூகமும் அதன் கல்வி நிலைப்பாடுகளும்

கடந்த நூற்றாண்டில் கல்வி ஜனநாயக மயப்பட்டுப் பரந்து பட்ட மக்களை சென்றடைவதற்கான எத்தனிப்புகள் தொடங்கப்பட்டன. ஆயினும் அனைவர்க்கும் கல்வி எனும் குறிக்கோள் வெற்றி கொள்ளப்படவில்லை. அதேவேளை வறுமை காரணமாகவும் ,பெற்றோரின் அக்கறை இன்மை காரணமாகவும் ,எல்லோருக்கும் கல்வி சாத்தியப் படவில்லை. இது ஒரு பரிதாபத்துக்கு உரிய,வேதனை தரக்கூடிய விடயம் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

எல்லோருக்கும் கல்வி என்பது சொல்லளவில் மட்டும் இருந்து விட, பாடசாலை செல்லாத பிள்ளைகள் பசியை போக்க கடினமான தொழில்களில் ஈடுபடும் சிறுவர் தொழிலாளிகளாகவும் ,சிறுவர் துஷ்பிரயோகத்தில் கட்டாயத்திற்கு உட்படுத்தப்படும் நிலையிலும் உள்வாங்கப்படுள்ளார்கள் . நமது நாட்டின் கல்வி முறையை பார்க்கும் போது ஒரு புறம் கற்றோருக்குரிய வேலையில்லா பிரச்சினையும் ,மறு புறம் தொழில் துறைகளுக்கு ஏற்ப திறனுடைய தொழிலாளர்களின் பற்றாக்குறை என்ற நிலையும் காணப்படுகிறது.

நடைமுறைப்படுத்தப்பட்ட கல்வி வளர்ச்சி என்பது சமூக நெருக்கடிகளை வளர்த்ததே அன்றி சமூக தேவைக்கு ஏற்ப குடிமக்களை உருவாக்கவில்லை.

சமூகப்பிரச்சினைகளை தீர்க்க வேண்டிய கல்வியே சமூகத்திற்கு தீராத தலையிடியை ஏற்படுத்தும் ஒரு பிரச்சினையாக ஆனது. கல்வி விரிவாக்கத்தால் அறிவு விருத்தி பெருகி வந்த அதே நேரத்தில், மனித விழுமியங்கள் மோசமாக வீழ்ச்சியடைந்து வருவதும் அவதானிக்கப்பட்டது. இத்தகைய அம்சங்கள் கல்வியின் வளங்களில் நிலவிய குறைபாடுகளை வெளிப்படுத்தின. இக்கல்வி முறையின் குறைபாடு காரணமாக அடிநிலை மக்களை முழுமையாக கற்போர் நிலைக்கு மாற்றமுடியாதுள்ளமையும் அவதானிக்கப்பட்டுள்ளது.

இத்தகைய சூழலில் இருபத்தோராம் நூற்றாண்டுக்கான கல்வியின் அடிப்படை தூண்களாக பின்வரும் நான்கினை சர்வதேச கல்வியற் சமூகம் முன்வைத்துள்ளது. அவையாவன அறிதலுக்காக கற்றல், செயலாற்றுவதற்காக கற்றல் ,சேர்ந்து வாழுதலுக்காக கற்றல், வாழக்கற்றல் என்பவையாகும் .பல தேசங்களும் தத்தமது சமய வேறுபாடுகளுக்கு அமையவும் சமூக மாற்றதேவைகளின் அடிப்படையிலும் கல்வி குறித்து பலவகை கோட்பாடுகளை முன்வைத்துள்ளன . சமூகம் தனக்கான அவசியத்தில் இருந்து கல்விக்கான இலக்குகளை நிர்ணயித்து கொள்கிறது . ஆயினும் எந்த சமூகத்திற்கும் எந்த காலத்திற்கும் அவசியப்படுகிற அடிப்படை இலக்குகள் இருக்க வாய்ப்புண்டு. நயத்தக்க நாகரிகத்தை வடிவமைப்பதும் அதற்கு அமைவாய் தனியாளை தகைமைப் படுத்துவதும் கல்வியின் இலக்காக எல்லா இடங்களிலும் எப்போதுமே வலியுறுத்தப்பட்டமையை காண முடியும்.

இருபத்தோராம் அறிவு யுகம் என்ற பிரகடனத்துடன் ஆரம்பம் ஆகியுள்ளது. ஒழுங்கு படுத்தப்பட்ட அறிவுத் தொகுதியாக உள்ள கல்வி கடந்த நூற்றாண்டில் பின்முகப் பரிமாணங்கள் ஊடாக வளர்ச்சி கண்டு வந்து இருக்கிறது. அதன் சம வீனமான பெருக்கமும் சமுகத்தேவையுடன் போதிய பொருத்தப்பாடு பெறாமையும், அனைத்து மக்களையும் கற்றோராக்க முடியாமையும் பல சமூகப் பிரச்சினைகளை எதிர் நோக்க வேண்டி உள்ளதாயிற்று, உலக மயமாக்கல் ஏற்படுத்தி உள்ள மாற்றங்கள் எல்லோருக்கும் கல்வி என்ற நிலையை மாற்றி பணம் படைத்தவர்களுக்கு கல்வி என்ற நிலையை உருவாக்கி உள்ளது, கல்வியும் வியாபாரப்பண்டமாக போய்விட்டதால் ஏழைகள் எட்டி பார்க்க முடியாத நிலையில் உள்ளது, இலவசக்கல்வியினால் ஏழை மாணவர்கள் பெற்று வந்த நன்மைகளும், தாய்மொழிக் கல்வியின் முக்கியத்துவமும் படிப்படியாக பின்தள்ளப்பட்டு வருவதை அவதானிக்க முடிவதாக கல்வியியல் ஆய்வாளர்கள் எச்சரித்துள்ளார்கள்.

மனித உழைப்பே மனித சாராம்சமாகிறது. பறிப்பு நிலவும் சமூக அமைப்புகளில் மனித உழைப்பு பறிப்புக்குள்ளாகிறது. அந்நிலையில் மனிதர் தமது சாராம்சத்தை இழக்கின்றனர். மனிதர் தமது சாராம்சத்தை இழக்கும் அவல நிலை அந்நியமயமாதல் என்று குறிப்பிடப்படுகிறது. அந்நியமயமாதல் என்ற உளவியல் நிலையை தருக்க நிலையில் விளக்குதல் மார்க்சிய தரிசனத்தின் சிறப்பு பண்பு ஆகும். தனது உழைப்பே தனக்கு சொந்தம் இல்லாத நிலை மனிதரால் உணரப்படுகிறது. தனிமைப்படலும், வெறுப்பு எய்துதலும், ஆளுமையை இழந்து நிற்றலுமான இந்த அவலமான நிலை சமுகப்புரட்சியின் வாயிலாகவே மாற்றி அமைக்க முடியுமென மார்க்ஸ் குறிப்பிட்டார். பறிப்போரிடமுள்ள உற்பத்தி சாதனங்களை மீட்டெடுக்கும் போது அந்நியமயமாதல் தகர்க்கப்படுகிறது. இவ்வாறாக மனித சாராம்சத்தை மீட்டெடுத்தல் வழியாக அந்நியமாதலில் இருந்து விடுதலை பெற முடியும். உலகமயமாக்கலின் பெறுபேறு காரணமாக உருவாகயுள்ள




பல்தேசிய கொம்பனிகளின் வருகை, சர்வதேசப் படசாலைகளின் உதயம், தனியார் பல்கலைகழகங்கள் போன்றவை முதலாளித்துவ சுரண்டலை உருவாக்கும் போக்கினையே கொண்டுள்ளன. அடிநிலை மக்கள் மேலும் மேலும் கல்வியிலும், தொழில்வாய்ப்பிலும் பின்தள்ளப்படும் நிலையே காணப்படுகிறது. இன்றைய தகவல் தொடர்பாடல் யுகத்தில் அறிவுப்புலத்தை எதிர்கொள்கையில் சுயமாக கற்றறிய கூடிய வகையில் கற்றலுக்காக கற்பிப்பதாக எதிர்கால கல்வி அமைய வேண்டும். அதே வேளை எந்த சூழ்நிலையிலும் பிரயோகிக்கத்தக்கதாகவும் அகன்று விரிந்ததாகவும, தொழில் தகைமை திறன் படைத்ததாகவும் எத்தகைய சமூக நியதிகளுக்கும் ஏற்றதாக அனுபவ பூர்வமானதாகவும் முறைசார், முறைசாரா வகைகளுடாக பெறத்தக்க ஜனநாயக பண்புடையதாகவும் மொத்தத்தில் ஒரு சமூக உயிரியாக வாழக்கற்பதாக கல்வி அமைய வேண்டும்.

பன்மைப் பண்பாட்டு சூழலில் பிறரை புரிந்து கொண்டு, மற்றவர் உணர்வுகளை மதித்து, சமுகப்பிளவுகளை சீராக்கும் திறன் பெற்று, விட்டுக் கொடுப்புடன் சமூக விழுமியங்களை பேணி, சமாதான சக வாழ்வுக்கான கோலங்கள் அனைத்தும் கல்வி வாயிலாக எட்டப்பட வேண்டும். சுய சார்புடன் முன்னேறும் வகையில் ஆளுமையை விருத்தி செய்து பிரச்சினைகளை விடுவிக்கும் ஆற்றல் ; பெற்று சுயகௌரவத்தை போற்றுவதுடன் உடல் உள, ஆரோக்கியம் பேணி அழகியல் உணர்வை வளர்த்து, மற்றவருடன் சிறப்புற தொடர்பாடல் கொள்ளும் ஆற்றலை கொண்டு இவ்வுலகில் உயர்வாக வாழ கற்று கொள்ள கல்வி உதவுவதாக அமைய வேண்டும்.

எந்த சமூகமும் தன்னை இயக்கி கொள்ளவதில் சில பொதுவான பண்புகளை கொண்டு இருத்தல் வேண்டும். சமூக இயக்கத்தின் போது ஒருவர் தமக்குரிய தனித்தன்மைகளை வளர்த்து கொள்வதற்கு கல்வி துணையாற்ற வேண்டும். மார்க்சிய தருக்கத்தின் வழியாக சமுகம் பற்றிய நோக்கிலும் கல்வி பற்றிய நோக்கிலும் மீள் உற்பத்தி என்ற எண்ணக்கரு முன்வைக்கப்படுள்ளது, சமுகம் நீடித்து இயங்கிக் கொள்வதற்கு இந்த மீள் உற்பத்தி அடிப்படை ஆகிறது. இந்த செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு சமூக வாழ்க்கையும் கல்வி கையளிப்பும் வேண்டப்படுகின்றன. கல்வியும் மீள் உற்பத்திக்கு உரியதாகி விடுகிறது. கல்வியல் பற்றி சிந்திக்கும் போது மார்க்சிய சமூகவியல் கல்வித் துறையில் பின்வரும் பரிமாணங்களை தோற்றுவித்துள்ளது. கல்வியில் சமத்துவமும் சமசந்தர்ப்பமும், இலவசக்கல்வி கட்டாயக்கல்வி, வேலை அனுபவங்களை உள்ளடக்கிய கல்வி, சமூக இயங்கியவை அறிகை நிலைப்படுத்தல், சுரண்டலையும் பறிப்பையும் இல்லாது ஒழிக்கும் கல்வி என்று எடுத்துரைக்கலாம். எனவே கல்வி, சமுகத்திற்கு நன்மையை வழங்க கூடிய பண்புகளை கொண்டிருக்கும் போதுதான் அதன் பலாபலன்களை பெற்றுக்கொள்ள முடியும். ★

# கோளமயமாக்கல் கல்வியில் ஏற்படுத்திய தாக்கம்

பொருளாதார நோக்கினை மையப் படுத்தி, மேற்குலக நாடுகள் 'கோளமயம்' என்ற எண்ணக்கருவை முன்னிலை படுத்தி வருகின்றன. உலகின் சமகால கருத்து வினைப்பாட்டில் 'கோளமயம்' என்பது முக்கிய இடத்தை பெற்றுள்ளது. இவற்றின் தாக்கம் சமுக வாழ்க்கையிலும், கல்வியிலும், மனித பண்பாட்டிலும் ஆதிக்கம் செலுத்த தொடக்கி விட்டன. இதன் விளைவாக பலசாதகமான அதே வேளை பாதகமான செயற்பாடுகள் நடை பெற்று வருவதை அவதானிக்க முடிகிறது.

கோளமயத்தோடு இணைந்த பின் நவீனத்துவம், தொழில்நுட்ப முதலாளித்துவம், தகவல் மீள்நிலைப் பெருஞ்சாலை, உலகளாவிய பெருஞ்சந்தை, புதிய வறுமை, கோள வெகுசனப்பாடு, என்பன உயிர்ப்பு பெற்றுள்ளன. இவை ஒரு வர்க்க சார்பானதும், சுரண்டல் நிலையை ஊக்குவிப்பதாகவும், மேலெழுந்த நிலைப்பாடாகவும் இருப்பதை அவதானிக்க முடிகிறது. எனவே பல்வேறுபட்ட பிரச்சினைகளும் எழுபொருட்களும் கோளமயமாக்களால் தோன்றி உள்ளன. கல்வியை பொறுத்தளவில் பணம் படைத்தவர்களின் செல்வாக்கும் அதே வேளை பறிப்பும் மலிந்து இருப்பதை காண முடிகிறது. வளர்முக நாடுகள் முதலாளித்துவ நாடுகளின் மாயவலைக்குள் அகப்பட்டு பொருளாதார ரீதியில் பின்னடைவுகளை கண்டு வருகின்றன. தாய்மொழிக்கல்வி, இலவசக்கல்வி, என்பவற்றுக்கு வேட்டுக்கள் வைக்கப்பட்டுள்ளன. சர்வதேச பாடசாலைகளின் அதிகரிப்பு, தனியார் பல்கலைகழகங்களின் தோற்றப்பாடு காரணமாக ஏழை மக்களின் பிள்ளைகள் மிகுந்த பிரச்சினைகளை எதிர் கொள்ளும் நிலை தோன்றி உள்ளது.

சர்வதேச பாடசாலைகளோ மற்றும் தனியார் பல்கலைகழகங்களோ இலாப நோக்கத்தை கருத்தில் கொண்டு செயற்படுவதனால் வசதி படைத்தவர்களின் பிள்ளைகள் மட்டுமே அவற்றில் சேர்ந்து கல்வியை தொடர முடியும். மேலும் வெளிநாட்டு பல்கலைகழகங்களும், கல்வி நிறுவனங்களும் தங்கள் முகவர்கள் மூலம் கவர்ச்சி கரமான விளம்பரங்கள் செய்து மாணவர்களை உள்வாங்கும் பெருமுயற்சியில் ஈடுபட்டு வருகின்றன. இதனால் கவரப்பட்டபலர் இலட்சக்கணக்கில் பணத்தை செலவு செய்து கொண்டு இருக்கிறார்கள் இவற்றின் மூலம் பட்டங்கள் பெற்றாலும் வேலை வாய்ப்புக்கள் பெறுவது இன்றைய உலக பொருளாதார சூழ்நிலையில் பெரும் சவாலாகவே உள்ளது.


மேலை நாடுகளில் பொருளாதார பின்னடைவு காரணமாக பெரிய பெரிய நிறுவனங்களிருந்து இலட்சக்கணக்கான பணியாளர்கள் வேலையை இழந்து வருகிறார்கள்.

அரசாங்க பாடசாலைகளை பொறுத்தளவில் நகர்புறத்திற்கும் ; கிராம புறத்திற்கும் இடையே நீண்ட இடைவெளி இருப்பதை அவதானிக்க முடிகிறது. நகர்ப்புற பாடசாலைகள் எல்லாவகையான பௌதீக வளங்களையும் கொண்டிருக்கிற அதே வேளை கிராமப்புற பாடசாலைகளில் கட்டட வசதி இன்மை, தளபாடவசதியின்மை, ஆசிரியர் பற்றாக்குறை, விளையாட்டு மைதானம் இன்மை, குடிநீர் இன்மை, மலசலகூடப் பற்றாக்குறை, போன்ற பல்வகைப்பட்ட பிரச்சினைகள் இருப்பது உண்மையே.

மேலும் கிராமப்புறங்களை பொறுத்தளவில் வறுமை காரணமாக பிள்ளைகள் ஒழுங்காக பாடசாலைகளுக்கு வருவது இல்லை. அவர்களின் பெற்றோர்களும் பிள்ளைகளின் கல்வியில் அக்கறை காட்டாமல் சிறு வயதிலேயே தொழிலுக்கு அனுப்பும் மனோபாவத்துடன் வாழுகின்றார்கள். எல்லோருக்கும் சமகல்வி என்ற கோட்பாடு சிதறடிக்கப் படுகின்றது. இவற்றுக்கு எல்லாம் அடிப்படை காரணம் சமுதாயத்தில் உள்ள ஏற்றத்தாழ்வே. இதை பலர் புரிந்து கொள்ளாமல் இருப்பது விந்தையல்ல. மனித வளம் இயற்கை வளம், முதலியவற்றை தீவிர சுரண்டலுக்கு உள்ளாக்கி மிகை இலாபமீட்டும் பொருளாதார செயற்பாடுகளினால் மனித வாழ்க்கை அவலங்களுக்கு உள்ளாக்கப்படுகிறது. இந்த வகையில் பல்தேசிய கம்பனிகளின் ஈடுபாடு மேலோங்கி இருப்பதை அவதானிக்கலாம். நவீன முதலாளித்துவ விரிவையும், சந்தைப் பொருளாதாரத்தையும், சுரண்டலையும் கோட்பாட்டு நிலையில் நியாயப்படுத்தும் தத்துவமாக பின் நவீனத்துவம் உருவாக்கப்பட்டுள்ளது. பின் நவீனத்துவ வாதிகளினால் உருவாக்கப்பட்ட எண்ணகருக்களின் உட்பொருளாகவும், மறை பொருளாகவும் ,அமைவது சுரண்டலுக்கு உள்ளாகிய மக்கள் அனுபவ நிலையிலும் கருத்தியல் நிலையிலும் ஒன்றிணைவதை தடுக்கலாம்.

இதே வேளை உலக முதலாளித்துவத்தின் வளர்ச்சியையும், உலகை நோக்கிய சந்தையின் விரிவால் ஏற்படக்கூடிய விரிவான இலாப மீட்டலையும், விஞ்ஞான பூர்வமாக விளக்கிய கோட்பாடாக அமைந்த மார்க்சியம் அறிக்கை நிலையில் புதிய தரிசனத்தை வழங்கிய வண்ணம் உள்ளது.

(தொடரும்)







**அஸ்வினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்**

உள்ளத்தில் துணிவும், எண்ணங்களில் உயர்வும் கொண்ட மேஷ ராசி அன்பர்களே!

கடிதப் போக்குவரத்துகள் நன்றாக உள்ளதால் பலவற்றில் எதிர்பார்க்கும் பலன்களைப் பெறுவீர்கள். சில செயல்களுக்கு அதிக முயற்சி தேவைப்படலாம். நண்பர்கள் உங்கள் செயல்களுக்கு ஆதரவாக இருப்பார்கள். சில நாட்களாக தள்ளிப் போன பணவரவுகள் வந்து சேரும். குடும்பம் சீராக நடைபெற்றாலும் சிறுசிறு தொல்லைகள் இருக்கும். பெண்கள் குடும்ப செலவுக்காக சேமிப்புகளை செலவழிக்க நேரும். வெளிப் பயணங்கள் செல்ல நேரலாம். உத்தியோகஸ்தர்களில் சிலருக்கு அலுவலகத்தில் எதிர்பார்த்த கடன்கள் வந்து பாதியில் விட்டிருந்த பணிகளைத் தொடருவீர்கள். சுயவேலை செய்வோர் அதிக வேலைப்பளு காரணமாக பணிகளில் ஓய்வின்றி ஈடுபடுவீர்கள்.

அதிர்ஷ்ட எண்கள்: 1,3,5. அதிர்ஷ்ட நிறம்: இளஞ்சிவப்பு. அதிர்ஷ்டக்கிழமை: செவ்வாய்.



**கார்த்திகை 2,3,4 ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1,2 ஆம் பாதங்கள்**

காரியங்களில் தீவிர முயற்சியுடன் செயல்பட்டு பாராட்டு பெறும் ரிஷப ராசி அன்பர்களே!

எதிர்பாராத நண்பர்களின் வருகை நல்ல திருப்பங்களை உண்டாக்கும். எதிர்பார்த்த இணங்களில் தீவிர முயற்சியுடன் செயல்பட்டு வெற்றி அடைவீர்கள். சில வேலைகள், தகுந்த நபர்களை எதிர்பார்த்து அவர்கள் வராததால், காலதாமதம் ஆகலாம். பணவரவுகள் திட்டமிட்டபடி வந்து சேரும். நீங்கள் எதிர்பார்த்த முக்கிய தகவல் கிடைத்து மகிழ்ச்சி அடைவீர்கள். சுயதொழில் செய்பவர்களுக்கு முக்கிய நபரின் ஆலோசனை உங்களுக்கு தக்க நேரத்தில் கைகொடுக்கும். குடும்பத்தில் பணவசதிகள் குறையாது. தாய்வழியில் நல்ல செய்தி கேட்க வாய்ப்புண்டு. பங்குச்சந்தை வியாபாரத்தில் அதிக லாபம் பெற தினசரிகளில் வரும் அன்றாட நிலவரங்கள் பயன்தரும்.

அதிர்ஷ்ட எண்கள்: 3,6,9. அதிர்ஷ்ட நிறம்: இளஞ்சிவப்பு. அதிர்ஷ்டக்கிழமை: வெள்ளி.



**மிருகசீரிடம் 3,4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 ஆம் பாதங்கள்**

ஆனமிகத்தில், ஜோதிடத்தில் அதிக நம்பிக்கை கொண்ட மிதுன ராசி அன்பர்களே!

அயராத உழைப்பால் எதிர்பார்த்த முன்னேற்றமான பலன்களை அடைவீர்கள். வரவேண்டிய தனவரவுகள் சிறிது தாமதித்து வந்து சேரலாம். உத்தியோகஸ்தர்களில் சிலருக்கு அலுவலகத்தில் புதிய பதவிகள் கிடைக்கும். பொறுப்புகள் அதிகமாகும். சுயதொழில் செய்பவர்கள் அதிக வேலைப்பளுவினால் ஓய்வு இல்லாமல் பணிகளில் ஈடுபடுவார்கள். பழையகடன்கள் அடைய வாய்ப்புண்டு. குடும்பம் சீராக நடைபெறும். குடும்பத்தோடு புனிதப்பயணங்கள் செல்லும் சந்தர்ப்பம் ஏற்படலாம். மங்கல நிகழ்ச்சிகள் நடத்த திட்டமிடுவீர்கள். பெண்கள், உறவினர் வருகையாலும், பிரிந்தவர்கள் சேர்வதாலும் மனமகிழ்ச்சி அடைவர். பணவரவுகள் தேவையைப் பூர்த்தி செய்யும் அளவுக்கு இருக்கும். பங்குச்சந்தை வியாபாரத்தில் ஆதாயம் அதிகமாகும்.

அதிர்ஷ்ட எண்கள்: 5,6,9. அதிர்ஷ்ட நிறம்: இளம்பச்சை. அதிர்ஷ்டக்கிழமை: புதன்.



**புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயில்யம்**

கற்பனைத்திறனும் நல்ல எழுத்துத்திறமையும் கொண்ட கடக ராசி அன்பர்களே!

இந்த வாரம் எதிர்பாராத சிறு பயணம் ஏற்பட வாய்ப்புண்டு. மறைமுக பிரச்சினைகள் தீரும். ஆரோக்கியம் பெருகும். தளர்வடைந்த காரியங்களை தக்கவர்களின் உதவியோடு செய்து வருவீர்கள். பணவரவுகள் குறிப்பிட்டபடி வந்தாலும், செலவுகள் அதிகமாகலாம். சுயவேலை செய்பவர்கள் புதிய நபருடன் அதிக வருமானத்துடன் கூடிய ஒப்பந்தத்தை மேற்கொள்ளும் சந்தர்ப்பம் ஏற்படும். வாடிக்கையாளர்களுக்குக் கொடுக்க வேண்டிய வேலை தாமதமாகலாம். கூட்டுத்தொழில் செய்பவர்கள், பணப் பொறுப்பில் உள்ளவர்களைக் கண்காணிக்காமல் இழப்புக்கு ஆளாகலாம். பிரச்சினைகளை நிதானமாக கையாள வேண்டியது அவசியமாகும். குடும்பத்தில் பெண்கள் விலை உயர்ந்த பொருள்களை வைத்த இடம் அறியாமல் கவலைக்கு உள்ளாகலாம். பங்குச்சந்தை வியாபாரத்தில் உறுதியற்ற பங்குகளை அதிக ஆலோசனைகளுக்குப் பிறகு வாங்குவது நல்லது.

அதிர்ஷ்ட எண்கள்: 2,5,6. அதிர்ஷ்ட நிறம்: வெண்மை. அதிர்ஷ்டக்கிழமை: திங்கள்.



**மகம், பூரம், உத்திரம் 1 ஆம் பாதம்**

நெஞ்சத்தில் உறுதியும், நெருங்கிய நண்பர்களுக்கு உதவும் குணமும் கொண்ட சிம்ம ராசி அன்பர்களே!

நல்ல எண்ணத்துடன் நீங்கள் ஈடுபடும் சில காரியங்களில் வெற்றி கிடைக்கும். உங்கள் செயல்களுக்குப் பக்கபலமாக நண்பர்களும், உறவினர்களும் இருப்பார்கள். திட்டமிட்ட பணவரவுகளால் தேவைகள் பூர்த்தியாகும். எதிர்பாராத செலவுகள் ஏற்பட்டு, மனச்சஞ்சலத்தை உண்டாக்கும். விழக்கமான பொறுமையை கடைபிடிக்கவும். உத்தியோகஸ்தர்கள் அலுவலகத்தில் வேலைப்பளுவினால் சோர்வு ஏற்படும். கூட்டுத்தொழில் வியாபாரம் சுமாராக நடைபெறும். பணம் சம்பந்தப்பட்ட பொறுப்புகளில் உள்ளவர்களால் பாதிப்பு ஏற்படாமல் தவிர்க்க கவனமாக இருக்கவேண்டும். குடும்பத்தில் சிறு சிறு தொல்லைகள் ஏற்படக்கூடும். பெண்கள் சாமர்த்தியத்தால் அவைகளைச் சமாளிப்பார்கள். உறவினர் வருகையால் சில குழப்பங்கள் தீரும். பங்குச்சந்தை வியாபாரம் சுமாராக நடைபெறும்.

அதிர்ஷ்ட எண்கள்: 1.5,6. அதிர்ஷ்ட நிறம்: சிவப்பு. அதிர்ஷ்டக்கிழமை: ஞாயிறு.



**உத்திரம் 2,3,4 ஆம் பாதங்கள், அஸ்தம், சித்திரை 1,2 ஆம் பாதங்கள்**

கலைத்திறமையுடன் காரியங்களை செய்து பாராட்டு பெறும் கன்னி ராசி அன்பர்களே!

அவசியமான செயல்களை அதிக முயற்சியுடன் செய்து வெற்றிகரமான பலன்களை அடைவீர்கள். சிலவற்றை நிறைவேற்ற மேலும் அதிக முயற்சிகள் தேவைப்படக்கூடும். பணவரவுகள் எதிர்பார்த்தபடி வந்து சேரும். செலவுகள் கட்டுப்பாட்டுக்குள் அடங்கி இருக்கும். பழைய கடன்கள் அடைய வாய்ப்புண்டு. பொருளாதார ரீதியான முன்னேற்றம் மனதிற்கு உற்சாகத்தை தரும். குடும்பத்தில் இருந்த சிறு கடன்களை அடைத்து விடுவீர்கள். ஆலய தரிசனங்களும், மகான்களின் தரிசனமும் ஏற்படலாம். பெண்கள் சேமிப்பை அதிகப்படுத்துவீர்கள். பங்குச்சந்தை சிறப்பாக நடைபெற்று நல்ல லாபம் கிடைக்கும்.

அதிர்ஷ்ட எண்கள்: 5,6,9. அதிர்ஷ்ட நிறம்: இளம்பச்சை. அதிர்ஷ்டக்கிழமை: புதன்.




**சித்திரை 3, 4 ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1,2,3 ஆம் பாதங்கள்**

நேர்மை மிக்க நெஞ்சமும், நீதிநெறிகளில் அதிக பற்றும் கொண்ட துலாம் ராசி அன்பர்களே!

கடந்த கால கடன்தொல்லைகள் விலகி வரவேண்டிய தொகைகள் அதிக சிரமம் இல்லாமல் வந்து சேரும். செலவுகளால் தொல்லைகள் ஏற்படாது. தடைதாமதங்கள் குறுக்கிடாமல் திட்டமிட்டபடி காரியங்களைச் செய்து முடிப்பீர்கள். பல நாட்களாக நிறுத்தி வைத்த செயல்களும் முன்னேற்றப் பாதையில் செல்லும். சில சுபகாரியங்களுக்காக திட்டமிடுவீர்கள். முக்கிய நபர்கள் உறுதுணையாக இருப்பார்கள். குடும்பம் சீராக நடைபெறும். பெண்கள் வெளிப் பயணங்களில் பொருட்களை பாதுகாப்பாக வைப்பது அவசியமாகும். பணவரவுகள் அதிகமாகும். பங்குச்சந்தை வியாபாரத்தில் முன்னேற்றமான போக்கு காணப்படும். லாபம் அதிகமாகும்.

அதிர்ஷ்ட எண்கள்: 5,6,9. அதிர்ஷ்ட நிறம்: இளஞ்சிவப்பு. அதிர்ஷ்டக்கிழமை: வெள்ளி.



**விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை**

பிறர் பெருமைப்படும்படி பெரிய செயல்களை செய்து அசத்தும் விருச்சிக ராசி அன்பர்களே!

பழைய நட்புகள் புதுப்பிக்கப்படும். விலகிய சொந்தங்கள் தேடிவரும். மனமகிழ்ச்சி பெருகும். தடைபட்ட காரியங்கள் சிறப்பாக நடைபெறுவதால் உற்சாகம் பெருகும். சிலருக்கு தொலைந்த ஆவணங்கள் திரும்பி கிடைக்கலாம். ஒப்பந்தங்களில் கையெழுத்திடுவதை தவிர்க்கவும். உத்தியோகஸ்தர்கள் அதிக பொறுப்புகளால் அல்லல்பட நேரலாம். செய்யும் வேலைகளில் அதிக கவனம் தேவை. சுயதொழில் செய்பவர்களுக்கு எதிர்பார்க்கும் வருமானம் இருக்காது. செய்த வேலையில் தவறுகள் நிகழலாம். கூட்டு வியாபாரத்தில் லாபம் குறைவாக இருக்கும். குடும்பத்தில் சிறுசிறு தொல்லைகளைச் சமாளிக்க வேண்டி இருக்கலாம். பங்குச்சந்தை வியாபாரத்தில் எதிர்பார்த்தபடி முன்னேற்றம் காணப்படாது.

அதிர்ஷ்ட எண்கள்: 2,5,9. அதிர்ஷ்ட நிறம்: இளஞ்சிவப்பு. அதிர்ஷ்டக்கிழமை: செவ்வாய்.




**மூலம், பூராடம், உத்திராடம் 1 ஆம் பாதம்**

செயலில் புதுமைகளை புகுத்தி வெற்றிபெறும் தனுசு ராசி அன்பர்களே!

நினைத்த காரியங்களை சாதிக்க அதிக முயற்சிகள் செய்து சிறந்த பலன்களை அடைவீர்கள். எதிர்பார்க்கும் தகுந்த நபர்கள் இல்லாத காரணத்தால் சில செயல்களில் தளர்ச்சியைச் சந்திக்க நேரிடும். என்றாலும், திட்டமிட்டபடி வரவேண்டிய தனவரவுகள் வந்து சேரும். தேவையற்ற பயணங்களைத் தவிர்க்கவும். வீண் விவாதங்களிலும் ஈடுபட வேண்டாம். குடும்பத்தில் சீரான போக்கு காணப்பட்டாலும் சிறுசிறு தொல்லைகளும் இருக்கும். மகன் அல்லது மகளின் புதிய வேலையினால் குடும்ப வருமானம் அதிகமாகலாம். பெண்கள் தாய் வழி சொந்தங்களால் நல்ல ஆதாயத்தை அடைவார்கள். சிலருக்கு மனக்கசப்புகளால் பிரிந்த உறவு தேடி வரும். பங்குச்சந்தை வியாபாரம் முன்னேற்றமாக நடைபெறும். லாபம் அதிகமாகும்.

அதிர்ஷ்ட எண்கள்: 3,5,6. அதிர்ஷ்ட நிறம்: வெளிர்மஞ்சள். அதிர்ஷ்டக்கிழமை: வியாழன்.



**உத்திராடம் 2,3,4 ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1,2 ஆம் பாதங்கள்**

எடுத்த காரியங்களை திட்டமிட்டு செய்து வெற்றி பெறும் மகர ராசி அன்பர்களே!

உங்கள் திறமைக்கு சோதனை செய்வது போல் பல செயல்கள் நடைபெறலாம். செம்மையாகச் செயலாற்றி சில செயல்களில் முன்னேற்றமான பலனைப் பெறுவீர்கள். தளர்வடைந்த செயல்களுக்கு இன்னும் அதிக முயற்சி தேவைப்படும். வார்த்தைகளை கவனமாக கையாளவும். கொடுக்கல்-வாங்கலில் அவசரம் காட்ட வேண்டாம். சுயதொழிலில் எதிர்பார்ப்புகள் சாதகமாகும். நல்ல லாபமும் பெறலாம். கூட்டுத்தொழில் செய்பவர்களுக்கு பணியாளர்களின் ஒத்துழைப்பால் வியாபாரத்தில் முன்னேற்றம் இருக்கும். இலாபம் வழக்கத்தைவிட சிறிது கூடுதலாகும். குடும்பத்தில் உள்ளவர்களில் சிலர் புனித தலங்களுக்குச் செல்லக்கூடும். தர்மசிந்தனை மேலோங்கும். பெண்கள் நினைத்தபடி எடுத்த காரியங்களை முடித்து பலவித பாராட்டுகளைப் பெறுவர். சிலருக்கு பணவசதி அதிகமாகும். பங்குச்சந்தை வியாபாரம் நன்றாக நடைபெறும்.

அதிர்ஷ்ட எண்கள்: 5,8,9. அதிர்ஷ்ட நிறம்: வெளிர்நீலம். அதிர்ஷ்டக்கிழமை: சனி.



**அவிட்டம் 3,4 ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1,2,3 ஆம் பாதங்கள்**

வேலைகள் செய்வதில் சலிக்காத மனம் படைத்த கும்ப ராசி அன்பர்களே!

தடைபட்ட காரியங்களில் நல்ல முயற்சியோடு செயல்பட்டு வெற்றிகரமான பலன்களை அடைவீர்கள். கடிதப் போக்குவரத்துக்கள் சாதகமாக அமையும். நெருங்கியவர்களுக்கு வாக்குறுதி கொடுக்க வேண்டாம். தேவையற்ற பயணங்களைத் தவிர்க்கவும். முக்கிய முடிவுகள் எடுக்கும்போது அவசரப்பட வேண்டாம். குடும்பத்தில் பெண்கள் சிலர் அருகிலுள்ள புனித தலத்திற்கு நீராட செல்லக் கூடும். மகன் அல்லது மகளின் திருமண முயற்சியில் தேக்க நிலை ஏற்படலாம். ஆன்மிக வழிபாட்டால் குடும்ப ஒற்றுமை ஓங்கும். பணமும், புகழும் அதிகமாகும். பங்குச்சந்தை வியாபாரத்தில் சுமாரான லாபம் ஏற்படும். புதிய நபர்களால் முதலீடு அதிகமாகும்.

அதிர்ஷ்ட எண்கள்: 3,5,8. அதிர்ஷ்ட நிறம்: வெளிர்நிறம். அதிர்ஷ்டக்கிழமை: சனி.



**பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி**

மலர்ந்த முகமும், கனிவான பேச்சுத் திறனும் கொண்ட மீன ராசி அன்பர்களே!

இந்த வாரம் தக்க நபர்களின் உதவியுடன் கஷ்டப்பட்டு முக்கியமான காரியங்களில் முன்னேற்றமான பலன்களைப் பெறுவீர்கள். நண்பர்கள் தக்க சமயத்தில் உங்களுக்கு உதவக்கூடும். பணவரவுகள் உண்டு. வீடு, மனை வாங்கும் முயற்சியிலும் ஆர்வம் காட்டுவீர்கள். குடும்பத்தில் சிறு சிறு பிரச்சினைகள் ஏற்பட்டாலும் பெரிய பாதிப்பு ஏற்படாது. பெண்கள் ஆன்மிக நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வார்கள். படித்து முடித்து வேலைக்கு விண்ணப்பத்தவர்களுக்கு நல்ல செய்தி வீடு தேடி வரலாம். கன்னியரின் கல்யாணக் கனவுகள் நனவாகும் வாய்ப்புகளும் கைகூடி வரும். பங்குச்சந்தை வியாபாரத்தில் ஓரளவு லாபம் ஏற்படலாம்.

அதிர்ஷ்ட எண்கள்: 3,5,9. அதிர்ஷ்ட நிறம்: வெளிர்மஞ்சள். அதிர்ஷ்டக்கிழமை: வியாழன்.

# சாத்வீகம் என்பது வன்முறையுமல்ல அதேவேளை அடங்கிப் போகும் நடவடிக்கையுமல்ல!

சாத்வீக நடவடிக்கைகளில் வெற்றி காண உயர்ந்த இலட்சியங்களோ, சமுதாயம் பற்றிய பரந்த அறிவோ, உயர்ந்த உளவியல் தத்துவங்களோ அல்லது பரந்த ஒத்துழைப்போ (அவை உதவக் கூடியவை என்றாலும் கூட) அவசியமில்லை. ஏனெனில், சுயமாகவே ஏற்படக்கூடிய மாற்றங்கள் தோல்வியடைகின்ற சந்தர்ப்பங்களில் நிர்ப்பந்தமாய் அமைந்த சாத்வீக வழிவகைகள் உபயோகப்படுத்தப்படலாம் என்பதாகும்.

உடல்ரீதியான வன்முறைகளைக் கையாளாமல், உடைமைகளுக்கு அழிவை ஏற்படுத்தாமல் , மனங்களில் அச்சுறுத்தல்களையும் அச்சத்தையும் பீதியையும் உண்டாக்காமல் நிகழ்வதே சாத்வீக நடவடிக்கை எனப்படும். எனவே, சாத்வீகம் என்பது அடங்கிப்போன அல்லது சோம்பேறித்தனமான நடவடிக்கை என்று பொருள்படாது. அது ஆக்கபூர்வமான அதேவேளை, விவேகமானதொரு நிகழ்வு ஆகும். பொதுவாக இவ்வகை நிகழ்வுகள் அரசியல் சார்ந்ததாகவே இருக்கும். அரசியல் குழுக்களுக்கு மத்தியில், அரசுக்குச் சார்பானதாகவோ அல்லது எதிரானதாகவோ இருக்கும். மிக அரிதாக இரண்டு அரசாங்கங்களுக்கிடையேயும் இது நடக்கலாம். குறிப்பாக, பொருட்கள் எடுத்துச்செல்லத் தடை போன்ற நிலைப்பாடுகளால் நிகழ்வுகள் கடுமையானதாகவோ அல்லது சாதாரணமானதாகவோ இருக்கலாம். குடும்பத்தினருடன், நண்பர்களுடன், குழுக்களுடன் , அயலவர்களுடன் அல்லது ஒரு சமூகத்தினருடன் இந்தப் போராட்டங்கள் அமையலாம் ; அல்லது ஒரு நாட்டுடனான பெரிய போராட்டமாகவும் இது இருக்கலாம்.எவ்வகையான நிகழ்வாக இருந்தாலும் சாத்வீகப் போராட்டத்தில் பங்குகொள்வோர் அதில் நம்பிக்கையுடன் நிலைதவறாது இருப்பர். விவேகமாகச் சிந்திப்பதோடு சோம்பேறித்தனத்தை ஒதுக்கி விடுவர். வன்முறை அல்லாத முன்னெடுப்புக்களாக அவை இருப்பதோடு பிரச்சினைக்கு அமைதியான வெற்றி காண்பதே சாத்வீகப் போராட்டத்தின் குறிக்கோளாகும்.

- ஏ.எச்.ஏ.ஹுஸைன் -

அயல் வீட்டுக்காரர் ஒருவர் தொடர்ந்து கொடுத்து வந்த சொல்லெண்ணாத் துன்பங்களுக்குத் தீர்வுகாணும் அகிம்சை வழிப் போராட்டமொன்று பற்றிய வரலாற்றுக் குறிப்பொன்றை இங்கே, வாசகர்களுக்குத் தருவது பொருத்தம். தொடர்ந்து பல்வேறு வகையான நெருக்கடிகளையும் தொந்தரவுகளையும் ஒருவர் தனது அயல் வீட்டுக்காரர் ஒருவருக்குக் கொடுத்து வருவதாக, ஒருமுறை நபிகள் பெருமானாரிடம் முறையிடப்பட்டது. அந்த அப்பாவிப் பேர்வழி என்ன செய்வதென்று தெரியாது நபிகள் நாயகத்திடம் ஆலோசனை வேண்டி நின்றார்.




அப்பொழுது நபிகள் பெருமானார் ''நீ உனது வீட்டுப் பொருட்களையெல்லாம் தெருவில் கொண்டுவந்துபோடு. அப்போது அவ் வழியால் போவோர் வருவோரெல்லாம் ஏன் இப்படி நடக்கிறது என்று கேட்பார்கள். அப்போது காரணத்தைக் கூறு...'' என, ஆலோசனை பகர்ந்தார்கள்.

அந்த ஆலோசனையின் பிரகாரமே தொந்தரவுக்குள்ளான மனிதர் செய்தார். நபிகள் நாயகம் கூறியதைப் போன்று தெருவில் போய்வருவோர்கள் ''ஏன் இப்படிச் செய்கிறாய்...''என காரணம் கேட்டார்கள். அதற்கு அவர், பக்கத்து வீட்டுக்காரரால் இழைக்கப்படும் துன்பங்களைப் பற்றிக் கூறத் தொடங்கினார். அதனைக் கேள்வியுற்ற வழிப்போக்கர்கள், தொந்தரவு செய்யும் அந்த மனிதரைச் சபிக்கலானார்கள். மற்றவர்களின் சாபத்திற்கும், பழிப்பிற்கும் உள்ளான அவர், பயந்து தனது தவறை உணர்ந்து தான் தொல்லை கொடுத்து வந்த அந்த அயலவருக்கு உதவி ஒத்தாசை புரியலானார்.

அகிம்சைப் போராட்டத்தின் ஒரு விவேகமான வழிமுறையினால் இத்தகையதொரு ஆக்கபூர்வமான தீர்வு கிடைத்தது.

சாத்வீகப் போராட்டங்கள் மேலைத் தேசத்திற்கும், கீழைத் தேசத்திற்கும் பொதுவானதே. வன்முறை புரியும் எதிராளி சாத்வீகத்திற்கு எதிராகத் தனது வன்முறைகளைப் பாவிக்கமாட்டார் என்று சாத்வீகம் ஒருபோதும் கருதியதில்லை.

வன்முறைக்கு எதிராக எச்சந்தர்ப்பத்தில் எப்படி சாத்வீகத்தைப் பாவிப்பது என்பது ஒரு நுட்பமான நடவடிக்கையாகும்.

சாத்வீகம் அநீதி எங்கு நடந்தாலும் அதற்கெதிராக அணிதிரளும். சாத்வீகம் சர்வாதிகார ஆட்சிகளுக்கும், பிறநாட்டு வேரூன்றல்களுக்கும் எதிராகப் பரந்த அளவில் பயன்படுத்தப்பட்டுள்ளது. வன்முறைப் போராட்டங்களின் மூலம் எதையேனும் வென்றெடுக்கத் தேவைப்படும் இழப்புக்களிலும் கால அளவிலும் பார்க்க, அதனைச் சாத்வீக நடவடிக்கை மூலம் வெற்றி காண்பதற்கு எல்லாச் சந்தர்ப்பங்களிலும் அதிக காலம் தேவைப்படுவதில்லை. பல்வேறு சந்தர்ப்பங்களில் சாத்வீகப் போராட்டத்தின் மூலம் மிகக் குறுகிய காலத்தினுள் அதாவது சில நாட்களுக்குள்ளாகவே எதிர்பார்த்த வெற்றி கிட்டியதுண்டு. வெற்றியடைவதற்கான கால அளவு வேறு வேறான காரணிகளில் உள்ளன. சாத்வீகப் போராட்டவாதிகளின் மனோபலத்தை முதன்மையாகக் கூறலாம்.

ஒரு செயல்முறை விளக்கம்.

சாத்வீகம் என்றால், அது ''உண்மையின் உரிமை'' என்று பொருள் படும். சாத்வீகம் என்பது ஆக்கபூர்வமானது, திட்டமிடப்பட்டது, நிச்சயமானது, செயற்சக்தி கொண்டது. அது வேற்றுமைகளைத் தீர்ப்பதற்கு பலாத்காரத்தை ஒருபோதும் வழிமுறையாகக் கொள்ளாது. சமூக, பொருளாதார, அரசியல் மாற்றங்களை விரும்புபவர்கள் இதனை உண்மையான வெற்றிகரமானதொரு புரட்சி மார்க்கமாகக் கொள்ளலாம்.

**தத்துவம்...**

சாத்வீகத்தைக் கைக்கொள்ளும் போது, இறுதி இலக்கையடைய உறுதியான வழிமுறை பின்பற்றப் படல் வேண்டும். நாம் ஒரு சாத்வீக, சமூக, நீதியோடமைந்த உலகைக் காண விரும்பினால், வன்முறை, பயங்கரவாதம், கொலை, என்பனவற்றினை முற்றிலும் நிராகரித்தல் வேண்டும். நாம் சமாதானம் நிறைந்த பெறுபேறுகளை சமாதானம் நிறைந்த நடைமுறைகளின் மூலமே அடைதல் வேண்டும் என்கிறார் எம்.எல்.இங்.

உங்களது
அந்தரங்க பிரச்சினைகள் மற்றும்
குடும்பப் பிரச்சினைகள்,
சந்தேகங்கள் தொடர்பான
கேள்விகளுக்குப் பதிலளிக்கிறார்
உளநல ஆலோசகர்

**ஏ.எச்.ஏ.ஹுஸைன்.**

கேள்விகள் வந்துசேரவேண்டிய முகவரி:
"A.H.A. HUSSEIN
KAYAR ROAD,
ERAVUR.
ஈமெயில்:
abdulhussein525@gmail.com

# நல்லகாரியம் தொடங்க பிறரிடம் ஆலோசனையா...?

***கேள்வி: ஒரு காரியத்தைத் தொடங்குவதற்கு நாலுபேரிடம் நல்ல ஆலோசனைகள் பெற வேண்டும் என்று சொல்லுவார்கள். அப்படி ஆலோசனை கேட்டால், ஆளுக்கொன்றை கூறுகிறார்கள். சில வேளை அவர்கள் கூறுவது, எதிரும் புதிருமாக இருக்கிறது. அப்படியென்றால், இதில் யாருடைய ஆலோசனையை பின்பற்றுவதென்று தெரியாமல் நாம் குழம்பிப் போகிறோம். ஒரு சிறிய கடை திறக்கலாமா என்பதில் தான் இத்தனை குழப்பம். இப்படிப் பட்ட குழப்பங்களிலிருந்து விடுபட தகுந்த ஆலோசனை வழங்கவும்.***

பதில்: எத்தனை பேரிடமிருந்தும் ஆலோசனை பெறலாம். அதில் தவறுகள் ஏதும் இல்லை. ஆனால், நேரத்திற்கு நேரம் ஒவ்வொருவரும் சொல்லும் அறிவுரைகளுக்கு ஏற்ப, மாற்றி மாற்றி பின்பற்றுவதில் தான் தவறு இருக்கிறது. எல்லோரினதும் ஆலோசனைகளையும் பக்குவமாகக் கேட்டு விட்டு பின்னர் நின்று நிதானித்து எல்லாவற்றையும் தொடுத்து முடிவெடுக்கும் சுயபுத்தியும் மனப் பக்கவமும் நமக்கு வர வேண்டும். எப்போதுமே கலந்தாலோசனை செய்வது, ஒரு சிறந்த வழிமுறை. அதிலிருந்து நமக்கு தேவையானவற்றைத் தேர்ந்தெடுத்து விட்டு மற்றவற்றை விட்டு விடலாம். கடை திறப்பதாக இருந்தால், முதலில் உங்களிடமுள்ள பொருளாதார நிலைமை, இட அமைவு, உற்பத்திப் பொருட்கள், பொருட்களின் விலைகள், அங்குள்ள நுகர்வோர் எப்படிப் பட்டவர்கள் அதாவது, வாடிக்கையாளர்கள் யார், மற்றும் விற்பனை மேம்படுத்தல், பாதுகாப்பு என்பன பற்றி ஒரு பரீட்சார்த்த கணிப்பீடு இருப்பது அவசியம். இவையெல்லாம் சாதகமாய் அமைந்தால் உங்களது முயற்சியை உடனடியாகத் தொடங்கவேண்டியது தான். எல்லோரும் சொல்லும் எல்லா ஆலோசனைகளையும் ஏற்று அமுல் படுத்த வேண்டாம். ஆலோசனைகளின் நடுவராக நீங்களே இருந்து கொள்ளுங்கள்.

***கேள்வி: காளைப் பருவத்தினரை எவ்வாறான சூழ்நிலைகள் பாதிக்கின்றன?***



பதில்: ADOLESCENT என அழைக்கப்படும் கட்டிளமைப் பருவத்தினர் ஆண்களாயின், 14 முதல் 25 வயது வரையுள்ளவர்களையும் பெண்களாயின், 12 முதல் 21வயது வரையுள்ளவர்களையும் குறிப்பிடுகின்றது. வாழ்க்கையின் வளர்ச்சிப் போக்கை அல்லது வீழ்ச்சியைத் தீர்மானிக்கின்ற அதே வேளை, பிரச்சினைகளும் நெருக்கடிகளும் மிகுந்த காலமுமாகும். இதனைத் தீர்மானிப்பதில் பல்வேறு சூழ்நிலைகளும் காரணிகளும் செல்வாக்குச் செலுத்துகின்றன. அதாவது, பின்னணி, பெற்றோர், உற்றார் உறவினர்கள், நண்பர்கள், பாடசாலை வாழ்க்கை, பொருளாதார நிலைமை, ஆரோக்கிய நிலைமை, பொழுது போக்கு வாய்ப்புக்கள் இப்படிப் பட்டவையும் இன்னபிற காரணிகளும் தாக்கம் செலுத்துகின்றன.கலாசார, பண்பாட்டு நம்பிக்கைக் கோட்பாடுகளும் கூடவே நிழல் போலப் பின்தொடரும். இவற்றிலுள்ள சாதக பாதக அம்சங்களும் ஒருவரின் கட்டிளமைப் பருவத்தில் அப்படியே அப்பிப் பிடித்துக் கொள்கின்றன. என்றாலும், அவற்றின் தாக்கங்களுக்கூடாக வரும் பொழுது, அவற்றை நின்று நிதானித்து உற்றுக் கவனித்து, அவற்றிலுள்ள சாதக பாதகங்களை அலசி ஆராய்ந்து பார்க்கும் கால அவகாசம் கட்டிளமைப் பருவத்திலிருப்போருக்கு இடங் கொடுக்காததால் அநேகமானோர் தமது இளமைப் பருவத்தைத் தொலைத்து விட்டுத் தடுமாறுகின்றனர். அதே வேளை, எந்தச் சூழ்நிலைக்கும் அவதானமாகவும் விவேகமாகவும் முகம் கொடுத்த சிலர் வெற்றியாளர்களாக மிளிர்கின்றனர்.இவர்கள் மிக எளிதாக அந்த வெற்றியைப் பெற்றுக் கொள்ள முடியாது. அதற்கு நிறைந்த பொறுமையும் தியாகமும் பகுத்தறிவும் தேவை. *



# யாழ் நகரில்

# IELTS இன்றி

# Spot Admissions

# மூலம் UK இல்

# உயர் கல்வி

## West End College London

| | | |
|---|---|---|
| இடம் | : | **Green Grass** Hotel & Restaurant, 33, Aseervatham Lane, Hospital Road, **Jaffna.** |
| திகதி | : | **20th November 2010** |
| நேரம் | : | காலை **10.00** மணியிலிருந்து மாலை **4.00** மணிவரை |

Spot Admission by the College Representatives
**Ms. Hannah Bilcliffe & Ms. Marie Lovett**

**VISA** பெற்றுக்கொள்ளும் முன்னர் அல்லது அதன் பின்னர் எந்தவொரு கட்டணமும் அறவிடப்படமாட்டாது.

எமது சேவை முற்றிலும்

**இலவசம்**

**O/L** உடன் குறைந்த கட்டணத்தில்!

**தேவையான ஆவணங்கள்**

- சுயவிபரக் கோவை (CV)
- கடவுச்சீட்டின் பிரதி (Passport Copy)
- கல்விச் சான்றிதழ்கள் (O/L, A/L உள்ளடங்கலாக)

**flex Institute**
*'Step Towards a Bright Future*
(A Subsidiary of Flex Graphic)

For appointment please contact :
**0777-761346**

**4, IBC Road, Wellawatte, Colombo 6.**
E-mail: flexinstitute@sltnet.lk
Web: www.flexinstitute.lk

சிறுவர்களினாலும் பெரியவர்களினாலும் நிறைந்திருந்த பூந்தோட்டத்திலே, தன்னையே இழந்து இயற்கையின் வனப்பிலே மூழ்கிப் போயிருந்தான் விஷ்ணு. அந்த மல்லிகைப் பந்தலின் மதுசாரலாக, இதமான காற்று நாசியை ஊடுருவி விநோதலோகத்தில் சஞ்சரிப்பதாய் உணர்த்திக் கொண்டிருந்தது.

''விஷ்ணு! வி...ஷ்ணு...'' யாரோ அழைத்த சத்த கேட்டு தவநிஷ்டை கலைந்த தவசியாக, குரல் வந்த திசையை நோக்கினான். மேனகா தான் நின்று கொண்டிருந்தாள். அவளின் சேலைத்தலைப்பை பற்றியபடி ஒரு மழலையும் கூடவே!

இவனுக்கு திடீரென ஒருவித சலனம். கனவுதான் காண்கிறோமோ... விழிகளை இருதடவை வெட்டி இமைத்தான். இல்லையே! எதிரில் மேனகா தான்... ''என்ன விஷ்ணு! நான் யாருன்னு யோசிக்கிறீங்களா... அதுசரி. கால ஓட்டத்தில நாம மாறுவது வழமைதானே...''

வார்த்தைகள் வெளிவரவில்லை. அவன் பதிலுக்கு புன்னகைத்துக் கொண்டான். ''ஆமாம்! நான் மாறவில்லைதான். எனக்கு மாறவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படலை. அதனால் மாறலை. ஆனால், நீ...'' என்றுவிட்டு அவளைக் கூர்ந்து நோக்கினான். அவளுடைய முகம் உடனே வாடியது போல இருண்டாலும், சட்டென வழமைக்கு வந்தது.

''நீங்க நினைக்கிறது புரியுது விஷ்ணு. காலங்கள் எப்போதுமே நமக்காக காத்திருப்பது கிடையாதே! அந்தந்த நேரகாலங்களில்... அதையதை செய்யத் தவறினோம் என்றால்... பின்னாலே காலம் பரிசளிக்கும் விடயங்களை ஏற்றுக் கொள்ளத்தான் வேணும். இப்போ நானும் அப்படித்தான். என் கடந்த கால வாழ்வு... ஒரு முடிந்த கதை இப்போது புதியதொரு வாழ்க்கை... புது உறவு... ம்! எல்லாம் காலம் தரும் பரிசுகள்தான்'' குழந்தையை வாரியணைத்துக் கொண்டாள்.

கொண்டு வந்து கொடுத்து அந்த சிறு மலரின் நெருக்கத்தை... நேசிப்பை அதிகரித்துக் கொண்டான். கூடவே மேனகாவுக்கும் மனதில் சலனத்தைக் கொடுத்தான். அவள், அவனது மாறாத பேச்சையும் அழிந்துவிடாத அன்பையும் கண்டு மனதினுள் துடித்தாள். ஆனால், வெளியே தன் தடுமாற்றத்தை காட்டிக் கொள்ளவில்லை. அதற்கான காரணமும் இருக்கவே செய்தது.

''சரி விஷ்ணு! நாங்கள் கிளம்புறம். நாளைக்கு முடிஞ்சா வீட்டுக்கு வாங்க. அங்கே ஒரு அம்மா எங்களுக்காக காத்துக்கொண்டிருப்பாங்க. லவணி அங்கிளுக்கு போய்ட்டு வாறோம் என்று சொல்லுங்க...'' குழந்தை தன் சின்னக் கைகளினால் சந்தோஷமாக அசைத்த படி தாவிக்கொள்ள, அவனும் விடை கொடுத்தான். இத்தனை நேரமாய் குதூகலமாக களித்த பொழுதை இப்போது தனிமை ஆக்கிரமிக்கித்

யுத்தம் நடைபெற்ற நாட்களில் வன்னியில் எவ்வளவோ சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. தாங்கள் எதிர்கொண்ட அவலங்களை, தங்களுக்கு ஏற்பட்ட பயங்கர அனுபவங்களை பலர் 'உயிர் வலிக்கும் கணங்கள்' என்ற பகுதியில் எழுதி வருகிறார்கள். அதே போன்று வன்னியில் இடம்பெற்ற சம்பவங்களைப் பலர் கதை வடிவிலும் எழுதி வருகிறார்கள். இந்தத் தொடரில் அளம்பில் ரமேஷ் எழுதிய 'அநாதைகள் பிறப்பதில்லை' என்ற உண்மைக்கதையின் பாகம் ஒன்று வெளிவருகிறது.

# அநாதைகள் பிறப்பதில்லை...

01

சொல்லிவிட்டு அவள் புன்னகைத்தாள். இவனுக்கு தர்ம சங்கடமாகிப் போனது. இப்படிப் பேசி விட்டாளே! ''என்ன மேனகா... உன்னை...ஓ! சொரி... உங்களை மறப்பேனா...'' அவள் அவனை வியப்பாகப் பார்த்தாள். குழந்தையும் அவள் போலவே அவனை கூர்ந்து நோக்கியது. இவன் யாரெனப் பார்க்கிறது போலும்!

''மேனகா! ம்... இந்த... இதில இருங்க...'' என்றபடி எதிரே கிடந்த நீளமான வாங்கைக் காட்டி விட்டு தானும் அமர்ந்து கொண்டான். அவள் குழந்தையைத் தூக்கி மடியில் இருத்திக் கொண்டு, தானும் அமர்ந்தாள். ''கொழும்புக்கு எப்போ வந்தீங்க மேனகா? இப்போ எங்கே இருக்கீங்க... நான் இங்கதான்... வெள்ளவத்தையிலே தங்கியிருக்கிறேன்...'' அவள் சிறிது நேரம் அமைதி காத்தாள். குழந்தையின் தலையை வருடியவள் தொடர்ந்தாள். ''நான் இங்கே வந்து இரண்டு மாசமாகீட்டுது... இப்போ தெஹிவளையில் ஒரு வீடு எடுத்துத்தான் தங்கியிருக்கிறேன் விஷ்ணு.''

''என்ன... ஏதாவது வேலை பண்றீங்களா...''

''ஆமாம். துணி இறக்குமதி செய்யும் கொம்பனி ஒன்றில் எக்கவுண்டனாக...'' அத்தோடு நிறுத்தினாள். விஷ்ணு அவளை கூர்ந்து நோக்கினான். அப்போதிருந்த குறும்பு மேனகாவா இவள்? நிறையவே மாறியிருந்தாள். கால ஓட்டம் அவளுக்கு, பல மாற்றங்களை கொடுத்திருக்கிறது. அதெல்லாம் சரி! திருமணமாகி விட்டதா? இருக்கலாம். ஏனெனில்... குழந்தையும் இருக்கிறதே! அவனது மனதின் ஒரு மூலையில் கொஞ்சம் பாரமாய்..!

''விஷ்ணு... என்ன அப்படிப் பார்க்கிறீங்க. நீங்க முதல் மாதிரியே இருக்கிறீங்க. அதெல்லாம் சரி! உங்களுக்கு கல்யாணம் முடிஞ்சுதா..? உங்களை இங்கே சந்திப்பேனென்று... கொஞ்சம் கூட நான் நினைக்கல தெரியுமா...'' மனசுக்குள்ள ஒருத்தியை வைத்துக் கொண்டு எப்படி இன்னனொருத்தியை கைப்பிடிக்க முடியும்? விஷ்ணுவின் உள்மனம் பேசிக் கொண்டாலும்,

விஷ்ணுவுக்கு தர்ம சங்கடமாகப் போனது. அவளது கடந்த காலத்தின் காயங்களை மீண்டும் கிளறிவிட்டோமோ என, கொஞ்சம் ஒரு மாதியிருந்தது. எதுமே பேசாமல் அவளது குழந்தையை... அதன் குறும்பை ரசித்துக் கொண்டிருந்



தான். அது அவளின் கைவிரல்களை இழுப்பதும் பின், கடிப்பதும் போல பாவனை செய்வதும்... சேலைத்தலைப்பை இழுத்து தன் முகத்தை மறைத்துக் கொள்வதுமாய் சேஷ்டை பண்ணிக் கொண்டிருந்தது. ''ஹேய் குட்டிம்மா... உன் பெயர் என்ன'' கைகளைப் பற்றியபடி கேட்டான். ஒருதடவை மேனகாவை நிமிர்ந்த பார்த்த குழந்தை ''என் பெயர் லவணிதா அங்கிள்'' என்றது. குழந்தையின் பெயரைக் கேட்டதும், இவனுக்கு லவணின் நினைவுகள் வந்து மின்னலென மறைந்தன.

மீண்டும் மீண்டும் மேனகாவின் கடந்த கால வாழ்க்கை கிளறாமல் தன் கொழும்பு வாழ்க்கை பற்றி கூறிக் கொண்டிருந்தான். அவள் தொடர்பாக தேவையில்லாமல் எதுவுமே கேட்கவில்லை. நிறையவே பேசினார்கள் அவன் குழந்தைக்கு பல கதைகளை கூறினான். தன்னோடு தூக்கி கொண்டு போய் மூவருக்குமாய் ஐஸ்கிறீம் வாங்கிக்

தொடங்கியது. தானும் வீட்டுக்கு புறப்படுவோம் என எண்ணி, மோட்டார் சைக்கிள் ஏறினான். பயணம் முன்நோக்கி நகர்வது போல... அவனின் நினைவுச் சக்கரம் பின்னோக்கி ஓடியது.

அளம்பில் ரமேஷ்

* * * * *

மேனகா முல்லைத்தீவு மாவட்டத்தை சேர்ந்த முள்ளியவளை என்னும் அழகான ஊரை தாய் மண்ணாக கொண்டவள். சிறுவயதிலேயே பெற்றவர்களை இழந்துவிட்ட இவளை, பெரியப்பா ஜெகநாதன் தான் வளர்த்து ஆளாக்கினார். அங்கே அவளுக்கு உறவுகள் என்று இருந்தவர்கள் அவளது பெரியப்பா குடும்பத்தினர் மாத்திரமே!

அவள் அந்நேரம் தனியார் வங்கி ஒன்றில் காசாளராகப் பணி புரிந்து கொண்டிருந்தாள். யாரோடும் தேவைக்கதிகமாய் பேசமாட்டாள். தானுண்டு! தன் வேலையுண்டு என்பதாகவே அவளது நாளாந்த நடவடிக்கைகள் கழிந்துவிடும். சிறுவயதிலிருந்தே அன்புக்கும் பாசத்துக்கும் ஏங்கிய மேனகா, பழகும் அனைவரிடமும் அதனையே எதிர்பார்ப்பாள். ஆனால், பலர் இவளது எண்ணங்களிலிருந்து விலகியவர்களாகவே அவளின் பார்வையில் தெரிந்தனர். போரும் வாழ்வுமே வன்னித்தமிழர்களுடன் கலந்திருந்த நிலையில், மருத்துவர்கள் பற்றாக்குறை வன்னியில் ஏற்பட்டது.

தம் பிறந்த மண்ணிலே கற்று, பட்டங்கள் பதவிகளை பெற்றுக் கொண்டு தூரதேசங்களுக்கும், வெளிநாடுகளுக்கும் ஓடிவிடும் நம் வன்னிவாழ் படித்த வர்க்கம் ஏனோ, தம்மை வளர்த்து ஆளாக்கி விட்ட மண்ணையும், மக்களையும் மறந்துவிடுகின்றது. ஒருவருக்குக்கூட பின்தங்கியிருக்கும் தன் தேசத்தை வளர்த்துவிட எண்ணமில்லை. தன்னையும் தன் குடும்பத்தையுமே வளர்க்க நினைக்கிறார்கள். வளர்த்து உருவாக்கி விட்ட தாய் மண்ணுக்காய் தாங்கள் ஏதாவது செய்ய வேண்டும் என்பதை உணர்வதுக்குக்கூட, அவர்களது உள்ளம் இடம் கொடுப்பதில்லை. தன்னை உயர்த்திவிட்ட தேசத்தை விட்டு விட்டு, யாரோ வெளிநாட்டுக் காரனுக்கு சேவை செய்வதுதான் நம்மவர்களின் வாடிக்கையாகி விட்டது. இப்படித்தான் மருத்துவர் தட்டுப்பாடு வன்னியில் ஏற்பட, யாரைக் கொண்டு இடைவெளி நிரப்புவது என... அரச அதிகாரிகள் சிந்தித்துக் கொண்டிருந்தார்கள்.

அப்போது கொழும்பிலே பணியாற்றிக் கொண்டிருந்த இளம் மருத்துவர்கள் இருவர், தாமாக வன்னியில் கடமை செய்ய முன்வந்தார்கள். அவர்கள்தான் லவண் மற்றும் விஷ்ணு. இருவரும் யாழ்மாவட்டத்தைச் சேர்ந்தவர்களாக இருப்பினும், தமது இரத்த உறவுகளுக்காக தம்மால் இயன்ற உதவிகளை செய்வதென்ற முடிவோடு வன்னிவந்து சேர்ந்தார்கள். லவண் முல்லைத்தீவு மாஞ்சோலை வைத்திய சாலைக்கும், விஷ்ணு புதுக்குடியிருப்பு பிரதேச வைத்திய சாலைக்கும் கடமைக்காக அமர்த்தப்பட்டார்கள். வெவ்வேறு இடங்களில் பணிபுரிந்தாலும், இருவரும் முள்ளியவளையில்தான் வீடு ஒன்றை வாடகைக்கு எடுத்து தங்கினார்கள்.

(தொடரும்)

# குறிஞ்சிக் கோவில்கள்

## கொட்டக்கலை ஸ்ரீ வழிப்பிள்ளையார்



கவிஞர்
- ஸி.எஸ். காந்தி -

மணியோடை சிரித்து அணிநடை பயின்று
புல்வெளி கிழித்துச் செல்லும் - தாவி
பல்லொளி காட்டி யேகும்
பிணிதவிர் செல்லப் பிள்ளையார் கொட்டக்
கலைதலை வாசல் கொண்டார் - இங்கு
நிலையாகக் குந்திக் கொண்டார்!

விண்வெளி அல்லில் வெண்பனி முத்துப்
பரல்களை அவிழ்த்துக் கொட்டும் - புற்கள்
விரல்களை நீட்டி ஈட்டும்
மண்வெளி போத்தும் புல்வெளி மீது
கண்ணொளி காலை காட்டும் - பட்டுக்
கதிரொளி மின்னிக் கொட்டும்!

தம்பியார் நொந்து மலைமீது ஏறி
தனியனாய் ஏங்கி நின்றார் - கிட்டாக்
கனியினால் வீங்கி நின்றார்
தும்பிக்கை அண்ணன் மாங்கனி பெற்றும்
சந்திக்கு வந்து விட்டார் - தனியாய்
குந்திங்கு பார்த்து வாரார்!

சந்தியில் குந்தி தொந்தியார் அந்த
மாங்கனி காட்டு கின்றார் - இன்னுந்
தீங்கனி ஈட்டு கின்றார்
வந்தித்துக் கடக்கும் அடியாரைத் தேர்ந்து
வல்லமை பரிந்து தாரார் - குந்தி
நல்லருள் புரிந்து வாரார்!

# கீதங்கள் கேட்பீரோ?

செங்கதிரே வெண்மதியே
விண்மீன்கள் கூட்டங்களே
மனம்நொந்து பாடுமெங்கள்
கீதங்கள் கேட்பீரோ.....?

மானமது காக்கமாய்ந்த
மறவர்குழு உம்மிடமா?
காணாமற் போனவெம்மின்
உறவுகளைக் காண்பீரோ..?

சாவுண்டு போனதொகை
சரிவரநீ சொல்வாயோ?
காவுள்ள வேலிக்குள்
கேட்பீரோ ஒலிபுலம்பல்...?

நாடகங்கள் அரங்கேற்றம்
நடிகர்க்குப் பஞ்சமேது?
சாடலிங்கு ஒருபுறத்தில்
சதிராட்டம் மறுபுறத்தில்!

ஊரிழந்தோம் உறவிழந்தோம்
உடைமைகளும் தாமிழந்தோம்
பேரிகை கொட்டுகின்றார்
பிதற்றுகிறார் எங்கெங்கோ?!

வன்னி மகள்
- எஸ்.கே.சஞ்சிகா -



# கவிதைப் புனல்

# வேண்டாம் பெண்ணே வெளிநாடு!!

பாலை வனத் தேசத்திலே
பாடுபடும் பாவையரே
எத்தனையோ துன்பங்களால்
ஏங்கி நிற்கும் பூவையரே

தாய் உறவை விட்டு வந்து
தாரத்தையும் பிரிந்து வந்து
விழிகள் சிந்தும் கண்ணீரில்
விடுதலைதான் உமக்குமுண்டோ?



பல மைல்கள் கடந்து வந்து
பழிகள் தனை சுமந்து நின்று
கண்டவர்கள் பல கதைகள்
கதைப்பதற்கு இடமும் உண்டு

வறுமைதனை ஒழிப்பதற்கு
வழிகள் வேறு கிடையாதோ?
துணிந்து விட்டால் வழி பிறக்கும்
துயர்கள் உம்மை அணுகாதே

உழைப்பதற்கு பலவழிகள்
உண்டு எங்கள் நாட்டினிலே
வெளிநாட்டு வாழ்க்கையினால்
வேதனைதான் வீட்டினிலே

இருப்பதையும் இழந்து விட்டு
இன்னல் பல சுமந்து கொண்டு
எதற்காக அழவேண்டும்
ஏனம்மா இந்த வாழ்வு?

வேண்டாம் பெண்ணே வெளிநாடு
வேறு வேலை நிறையவுண்டு
பாரினிலே உயர்வதற்கு
பாலைவனம் உனக்கெதற்கு?

- இராமசாமி ரமேஷ் -
அளம்பில்.

# எல்லாம் போகவே...!

இடி இடிக்குது கிடுகிடுக்குது
இதய வானிலே-என்
இதய வானிலே
துடிதுடிக்குது கடுகடுக்குது
கவலை யாலேயே-உடல்
கவலை யாலேயே!

மனைவிவந்தாள் மழலைவந்தான்
மகிழ்ச்சி யாகவே-உள்ள
நெகிழ்ச்சி யாகவே
துணைவிழுந்தது சாவிழுந்தது
கண்ணீர் கொட்டவே-கண்ணில்
செந்நீர் கொட்டவே!

பொன்வந்தது பொருள்வந்தது
புகழ்ச்சி யாகவே-வாழ்வில்
உயர்ச்சி யாகவே
மின்னலிடி குண்டொலித்தது
தீய்ந்து போகவே-எல்லாம்
மாய்ந்து ஏகவே!

பாண்டியூர்
- பொன். நவநீதன் -

# பாண்விலை தெரியாமல்

பாண்விலை தெரியாமல் வாழ்ந்திடு மெனக்குப்
பாவலன் என்னுமோர் பட்டம்! - ஊர்
வீண்தன மாகவே வாழ்ந்தவன் மடையன்
விசரன் என்றெலாம் திட்டும்!


அஞ்சலாம் அதிபராய் முன்னாளில் பதவியை
அலங்கரித் திருக்கையில் செம்மல் - இப்போ
வஞ்சியாள் கழுத்திலே கைகளில் உள்ளவை
வங்கியில், காதிலே கம்மல்!

ஊரினில் படித்தவன் உயர்ந்தவன் என்றுமே
ஒருசிலர் சொல்கிறார் இன்னும் - எனது
பேரிலே இருந்ததாம் காணியை விற்றிட்ட
பேர்த்தியை என்மனம் எண்ணும்!

சங்கான் குழிவயல் இரண்டரை ஏக்கரில்
சோற்றுக்கு கிடைத்திடும் அரிசி - தனது
தங்கையும் மணம் செய்யும் வயதிலே உள்ளதால்
தலையிடி என்கிறாள் மனைவி!

- கவிஞர் அ. கௌரிதாசன் -
ஆலங்கேணி கிழக்கு, கிண்ணியா.

# அவள் வந்தாள்....



வான நிலவொளியும்
வதனந் தான்பெற்று
மோனத் தவமிருக்கும்
முனிவனும் மோகமுற
நாணம் கொண்டொரு
நங்கை அவள் வந்தாள்!

நெற்றித் திலகமிட்டு
நீண்ட திரைக்குழலில்
கற்றைப் பூமுடித்து
கயலாம் விழிகளினை
சுற்றி மையிட்டுச்
சுந்தரி அவள்வந்தாள்!

அதரம் கொவ்வையாய்
அழகுற செவ்வையாய்
மதுரக் குரலினோடு
உடுக்காய் இடையொளிர
சிதறும் முறுவலொடு
சிங்காரி அவள்வந்தாள்!

கன்னக் கதுப்பினிலே
கனிகள் காட்டியதை
தின்னச் சொல்லுவதாய்
தித்திப்பு ஊட்டுவளாய்
அன்ன நடைபயின்று
அன்னவள் தான்வந்தாள்!

வி.எம். அன்ஸார்,
கிண்ணியா-02.



# ஹிந்திப் படத்தில் தமிழ்ப் பெண்ணாக நடிக்கிறார் பிரியங்கா சோப்ரா

ஹிந்திப் படம் ஒன்றில் தமிழ் பெண்ணாக நடிக்கிறார் முன்னாள் உலக அழகியும், நடிகையுமான பிரியங்கா சோப்ரா.

'பேஷன்' போன்ற படங்களில் நடித்துப் புகழ் பெற்றவர் பிரியங்கா. ஆங்கில எழுத்தாளர் சேதன் பகத் எழுதிய நாவலின் பெயர் '2 ஸ்டேட்ஸ்'. வட இந்தியரான சேதன், தமிழ் பெண்ணை திருமணம் செய்துள்ளார். தனது திரு மண அனுபவத்தை மையமாகக்கொண்டே இந்த நாவலை சேத்தன் எழுதியுள்ளார். இந்த நாவலைப் படமாக்க சித்தார்த் ஆனந்த் செய்த முயற்சியில் வெற்றி பெற்றுள்ளார். படத்தை சஜித் நாடியத்வாலா தயாரிக்கிறார். இந்த படத்தில் சைப் அலிகான் நடிக்கிறார். அவருக்கு ஜோடியாக தமிழ்ப் பெண்ணாக நடிக்கிறார் பிரியங்கா. இதற்காக தமிழில் பேச அவர் பயிற்சி எடுத்து வரு கிறார். தமிழில் தமிழன் படத்தில் விஜயுடன் ஜோடி யாக நடித்த அனுபவம் பிரியங்காவுக்கு உண்டு என்பது குறிப்பிடத்தக்கது.

# சங்கரின் அடுத்த முயற்சி

இயக்குநர் ஷங்கரை பிரமாண்டமான படத்தைத் தருபவர் என்பதையும் தாண்டி... பிரமாண்டமான பரபரப்பையும் ஏற்படுத்தும் இயக்குநர் என்று சொல்லலாம்.

எந்திரனுக்கு பின்னர் இந்தியாவின் முதல் நிலை இயக்குநர்களில் ஒருவர் என்ற புகழை அடைந்துவிட்ட ஷங்கர், எந்திரனின் பிரமிப்புக்கண்டு பொலிவூட் திரையுலகமே வியந்து போயிருக்கும் இந்தத் தருணத்தைப் பயன்படுத்தி தனது 'போய்ஸ்' படத்தை 'டப்பிங்' செய்து ஹிந்தியில் வெளியிடத் திட்டமிட்டுள்ளாராம்.

பொலிவூட்டில் ஷங்கருக்கு கிடைத்திருக்கும் வரவேற்பை போலவே 'போய்ஸ்' படத்தின் கதாநாயகன் சித்தார்த்தும், கதாநாயகி ஜெனீலியா வும் பொலிவுட் ரசிகர்களுக்கு பழக்கப்பட்டவர்களாக இருக்கிறார்கள், ஒஸ்கர் நாயகன் ஏ.ஆர்.ரஹ்மானுக்கும் ஹிந்தியில் நல்லமதிப்பு இருக்கிறது. இவற்றையெல்லாம் ஒட்டுமொத்தமாகக் கூட்டிக்கழித்து, 'போய்ஸ்' படம் தமிழில் பெறாத வெற்றியை, ஹிந்தியில் பெற்றுவிடும் எனக் கணக்குப் போட்டுள்ளாராம் ஷங்கர். 'போய்ஸ்' படத்தைத் தயாரித்த ஸ்ரீ சூர்யா மூவிஸுக்கு இந்தப் படம் நஷ்டத்தையும் கஷ்டத்தையும்தான் கொடுத்தது. ஹிந்தியில் இப்படத்தை வெளியிட்டால், அந்த நஷ்டத்தை ஈடுகட்டிவிடும் என்ற நம்பிக்கை ஸ்ரீ சூர்யா மூவிஸுக்கும் உள்ளதாம்.


மம்தா

# நடிகைக்கு முக்கியத்துவமான வேடம் மட்டுமே வேண்டும் – மம்தா

நடிகைக்கு முக்கியத்துவம் அளிக்கும் கதைகள் தான் தேவை என்று நடிகை மம்தா மோகன்தாஸ் கூறினார். கேரளத்தைச் சேர்ந்தவர் மம்தா. தமிழில் 'சிவப்பதிகாரம்', 'குசேலன்' உள்ளிட்ட படங்களில் நடித்துள்ளார். தெலுங்கு, ஹிந்திப் படங்களிலும், விளம்பரப் படங்களிலும் அவர் நடித்து வருகிறார். தமிழ்ப் படத்தில் அவருக்கு வாய்ப்பளிக்க சில தயா ரிப்பாளர்கள் அவரைத் தொடர்புகொண்டபோது நிபந்தனைகள் விதிப்பதாக முறைப்பாடு தெரிவிக்கப்பட்டது. இதுகுறித்து மம்தா கூறியதாவது, நான்கு பாட்டுக்கு ஆடி, நடிகர் பின்னால் திரிகின்ற மாதிரியான வேடம் வேண்டாம். எனது நடிப்புத் திறமையை வெளிப்படுத்தக்கூடிய வேடங்களிலேயே நடிப்ப தென்று முடிவு செய்திருக்கிறேன். அதுபோன்ற படங்கள் எதுவும் எனக்கு அமைய வில்லை. நடிகைக்கு முக்கியத்துவமான வேடம் மட்டுமே வேண்டும் என்பதே நிபந்தனை. வேறு எந்த நிபந்தனைகளையும் நான் விதிக்கவில்லை - என்றார்.

# முன்னணி நடிகர்களுடன் மட்டுமே நடிப்பேன் – ப்ரியா

தமிழ் படங்களில் நடித்தால் முன்னணி நடிகர்களுடன் மட்டுமே நடிப்பாராம் ப்ரியா மணி. இதை ஒரு நிபந்தனையாக வைத் திருப்பதால்தான் அவரைத் தேடி படவாய்ப்புகள் எதுவும் வருவதில்லை என்கிறார்கள்.

ப்ரியா மணிக்கு தமிழில் எந்த வாய்ப்பும் கிடைக்காத நிலை யில், கவர்ச்சியாக நடிக்க ஆரம்பித்தார். அப்படியிருந்தும் அவரைத் தேடி பட வாய்ப்புகள் பெரிய அளவில் வரவில்லை. இதனால் தெலுங்குப் படங்களில் நடித்துவருகிறார்.

இந்த நிலையில், தமிழ் சினிமாவில் நடிப்பதானால், பிரத்யேக மான ஒரு நிபந்தனையோடு இருக்கிறாராம் ப்ரியா மணி. நடித்தால் முன்னணி மற்றும் நடிகர்களுடன் மட்டுமே நடிப்பது என்றிருக்கிறாராம்.





# 'மன்மதன் அம்பு' படத்தில் 4 பாடல்களை எழுதினார் கமல்

'மன்மதன் அம்பு' படத்தில் கமல்ஹாஸனே அனைத்துப் பாடல்களையும் எழுதியுள்ளார். சினிமா உருவாக்கம் என்று பார்த்தால் கமல் ஹாஸன் ஒரு நிஜமான சகலகலா வல்லவர்தான்.

படத்தை இயக்குவது, பாடுவது, நடனம், நடிப்பு என அவர் அனைத்துத் துறைகளிலும் வல்லவர்தான். ஏற்கெனவே தன்னை ஒரு திறமையான பாடலாசிரியராக, 'ஹே ராம்' படத்தில் நிரூபித்திருந்தார். இளையராஜா இசையில் எப்போது கேட்டாலும் இதயத்தை வருடும், 'நீ பார்த்த பார்வைக்கொரு நன்றி...' என்ற பாடல் கமல் எழுதியதுதான்.

அடுத்து 'மன்மதன் அம்பு' படத்துக்காக தேவி ஸ்ரீ பிரசாத் இசையில் 4 பாடல்களை எழுதியுள்ளார் கமல்.

இதுகுறித்து இயக்குநர் கே.எஸ்.ரவிக்குமார் கூறுகையில், 'மன்மதன் அம்பு' படத்தில் பல துறைகளிலும் கமலின் பங்களிப்பு இருக்கிறது. அதற்கு ஓர் உதாரணம், இந்தப் படத்தின் 5 பாடல்களில் நான்கை கமலே எழுதியிருப்பதுதான் - என்றார்.



# ரஜிக்கு எந்திரன் போல சூர்யாவுக்கு 'ரத்த சரித்திரம்'

எந்திரன் படத்தின் மூலம் ரஜினியின் புகழ் இந்தியா முழுவதும் வெகுவாக உயர்ந்ததைப் போலவே தமிழ் நடிகர் சூர்யாவுக்கு, தமது 'ரத்த சரித்திரம்' அமையும் என நம்பிக்கை தெரிவிக்கிறார் இயக்குனர் ராம் கோபால் வர்மா.

வெறும் பேச்சோடு மட்டும் நின்றுவிடாமல், தனது கணிப்பை 'ரத்த சரித்திரம்' போஸ்டர் மூலமே பிரபலப்படுத்தி வருகிறார் ஆர்.ஜி.வி.

'சிங்கம்' படத்தை அடுத்து சூர்யா நடித்து வெளிவரவிருக்கும் படம் 'ரத்த சரித்திரம்'. தமிழில் ஒரே பாகமாக வெளிவரவுள்ள இப்படம், ஹிந்தி மற்றும் தெலுங்கில் இரண்டு பாகங்களாக வெளியாகின்றது.

# ஐஸுக்கு வயது 37

பொலிவூட் ராணி ஐஸ்வர்யா ராய கடந்த திங்கட்கிழமை (01.11.2010) அன்று தனது 37ஆவது பிறந்த நாளை, தனது குடும்பத்தினருடன் எளிமையாகக் கொண்டாடினார்.

அன்று நள்ளிரவிலிருந்தே ஐஸ்வர்யாவுக்கு பிறந்த நாள் வாழ்த்துக்கள் குவியத் தொடங்கிவிட்டதாம். அன்று காலை தனது மாமனார் அமிதாப் பச்சன், மாமியார் ஜெயா பச்சன், கணவர் அபஷேக் பச்சன் ஆகியோருடன் வீட்டிலேயே கேக் வெட்டிப் பிறந்தநாளைக் கொண்டாடினார் ஐஸ்வர்யா.

# விக்ரமுக்கு ஜோடியாகிறார் அனுஷ்கா

மதராஸப்பட்டினம் புகழ் விஜய் இயக்க, விக்ரம் - அனுஷ்கா முதல்முறையாக ஜோடி சேரும் தெய்வமகன் படப்பிடிப்பு ஆரம்பமாகியுள்ளது. அனுஷ்காவின் உயரத்தையும், உடலமைப்பையும் பார்த்து, அவருக்குத் தெலுங்கில் வாய்ப்புகள் குவிகின்றன. ஆனால் தமிழிலே, அவரது உயரம் எதிரியாகிவிட்டது.

உயரம் குறைந்த நாயகர்கள், அவரின் அளவுக்கு ஏற்ப சப்பாத்து அணிந்துகொண்டு, அவருடன் நடிக்கவேண்டிய நிலையுள்ளதால், ''அனுஷ்காவா, வேண்டாம்... பக்கத்தில் நின்று பேசக்கூட முடியாது'' என்று ஓரங்கட்டுகிறார்களாம். இப்படி அனுஷ்கா இழந்த வாய்ப்புகள் நான்கைந்து இருக்கும் என்கிறார்கள்.

ஆனால் இயக்குநர் விஜய்க்கு அந்தக் கஷ்டமில்லை. தெய்வமகன் படநாயகன் விக்ரமுக்கு அனுஷ்கா சரியான ஜோடியாக இருக்கிறாராம்.

இந்தப் படத்தில் 7 வயது மகளை மீட்கப் போராடும் மனநிலை பாதிக்கப்பட்டவராக நடிக்கிறார் விக்ரம். அவருக்கு உதவும் நேர்மையான சட்டத்தரணியாக வருகிறாராம் அனுஷ்கா. இப்படம் 2001இல் வெளியான 'ஐயாம் ஸாம்' என்ற ஹொலிவுட் படத்தை ஒத்ததாக இருக்கும் என்கிறார்கள்.

# கவர்ச்சியாக நடித்தும் வாய்ப்புகள் வரவில்லை

**– காம்னா**

கவர்ச்சியாக நடித்தால் பெரிய அளவுக்குப்போகலாம் என ஆரம்பத்தில் நினைத்தேன். ஆனால் இப்போது அதில் எந்த நம்பிக்கையும் இல்லாமல்போய் விட்டது. சில படங்களில் நடித்துவிட்டு பேசாமல் சினிமாவை விட்டே விலகிவிடலாம் போலிருக்கிறது என்று சலிப்புடன் கூறுகிறார் காம்னா ஜெத்மலானி.

இதயத் திருடன், மச்சக்காரன் என சில படங்களில் நடித்துள்ளார் காம்னா. ஆனால், அவரால் தமிழில் முன்னணி நடிகையாக வரமுடியாமல் போய்விட்டது. அங்கொன்றும் இங்கொன்றுமாக நடித்து வந்த அவர் இடையில் தமிழ் படங்களில் நடிப்பதை விட்டுவிட்டு, தெலுங்குப் படங்களில் நடித்துக்கொண்டிருந்தார். அங்கும் இதே கதைதான்.

இப்போது முழு நீள நகைச்சுவைப் படம் ஒன்றில் நடிக்கவிருக்கிறார் காம்னா. அதிரடிப் படங்களை இயக்கியவரான திருமலை இயக்கும் முழு நீள நகைச்சுவைப் படம் காசேதான் கடவுளடா. இதில் நடிக்கிறார் காம்னா. ஏன் தமிழில் உங்களைக் காணவில்லை, உங்களது கவர்ச்சி நடிப்பு, இப்போது எந்த அளவுக்கு உள்ளது என்று காம்னாவிடம் கேட்டால், பிடித்தவற்றில் மட்டுமே நடிக்கிறேன். இதுவரை 10 படங்களில் நடித்துவிட்டேன். ஆனாலும் சொல்லிக்கொள்ளும் அளவுக்கு ஒரு படம் கூட எனக்கு வெற்றியைத் தேடித்தரவில்லை.

முதலில் கவர்ச்சியாக நடிக்கலாம் என்ற முடிவில் இருந்தேன். இப்போது கவர்ச்சியாக நடிப்பதில் விருப்பமில்லை. ஓரிரு நல்ல படங்களில் மட்டும் நடித்துவிட்டு சினிமாவை விட்டு விலகிவிட வேண்டும் என்று தோன்றுகிறது. காசேதான் கடவுளடா படத்தில் நல்ல வேடம் எனக்குக் கிடைத்திருக்கிறது. இப்படம் எனக்கு நல்ல திருப்பத்தைத் தரும் என நினைக்கிறேன் - என்றார்.

# ரீமாவைப் பின் தொடரும் நபர் அவரின் காதலனா?


பாலா இயக்கும் 'அவன் இவன்' படத்தில் தற்போது ரீமாசென் நடித்துக்கொண்டிருக்கிறார்.

இவரை சமீபகாலமாக ஒரு மர்ம இளைஞர் பின் தொடர்வதாகவும் இருவரும் இரகசியமாகச் சந்தித்துப் பேசுவதாகவும் கிசுகிசுக்கள் எழுந்தன. அந்த வாலிபர் ரீமா சென்னின் காதலர் என்றும் கூறப்பட்டது.

அண்மையில் ரீமாசென் தனது பிறந்த நாளைக் கொண்டாடினார்.

அதில் அந்த வாலிபரும் பங்கேற்றதாக தகவல் வெளியானது.

இதுபற்றி ரீமா சென்னிடம் கேட்டபோது, மறுத்தார். நான் காதலனுடன் சுற்றவில்லை. மர்ம வாலிபர் என்னைப் பின் தொடர்கிறார் என்பதெல்லாம் உண்மைக்கு மாறானவை. எனது பிறந்த நாள் விழாவிலும் அப்படிப்பட்ட எவரும் பங்கேற்கவில்லை. எனது நெருங்கிய நண்பர்கள், உறவினர்கள் தான் பங்கேற்றனர் - என்றார்.




ரஸியா ஸுல்தானா
புத்தாக்கம் : கே.கான்
13
நீங்கள் எனமீது வைத்த நம்பிக்கைக்கு இணங்க நான் நடந்து கொள்வேன் என இறைவன் முன்னிலையில் உங்களுக்கு வாக்குறுதி அளிக்கிறேன். அதே நேரம், நான் ஒரு பெண், நான் எந்த ஆணையும் விடக் குறைந்தவளல்ல என்பதை நிரூபிக்கும் வரை நான் அரியாசனத்தில் அமர மாட்டேன்.
ஸுல்தானா ஜிந்தாபாத்!
ரஸியா அரசர்களைப் போலவே உடை அணிவாள். நடந்துகொள்வாள். அவள் தனது பெயரில் நாணயங்களை வெளியிட்டாள்.
நாற்பது தலைவர்களோடு ஆலோசனை செய்வாள்.
14
தனது படையின் தளபதியும் அவள் தான்.
ராஜ்யத்தில் அவள் மீண்டும் அமைதியையும் சட்டதிட்டங்களையும் நிலைநிறுத்தினாள்.
அவள் பாதைகளை அமைத்தாள். மரங்களை நடவைத்தாள்.
கிணறுகள் தோண்டுவித்தாள்
வியாபாரத்தை விருத்தி செய்தாள்.
நீதி வழங்கினாள்.
பாடசாலைகளையும் நூல் நிலையங்களையும் அமைத்தாள்.
வித்துவான்கள், கவிஞர்கள், கலைஞர்கள், சங்கீதக் கலைஞர்கள் ஆகியோருக்கு ஊக்கமளித்தாள்.
15
ரஸியா பர்தா இன்றி மக்கள் முன் வருவாள்.
ஸுல்தானா, தாங்கள் தங்களுடைய தகப்பனாரின் காலத்தில் முகத்திரை அணியாமல் முன்னால் வர மாட்டீர்களே.
அந்தக் காலத்தில் நான் அரசாட்சி செய்யவில்லையே. இப்போது ஸுல்தானா தனது பிரஜைகளின் முன்னால் வருகிறாள்.
உண்மை தான், ஸுல்தானா, ஆனால் நீங்கள் ஒரு பெண்.
பிரஜைகளுக்கு நான் பாதுகாவலரல்லவா.
நீங்கள் சொல்வது சரி, ஆனால், மக்களின் நாவுகள்....
அவர்களை விடுங்கள். நான் எனது ஈமானின் (மதநம்பிக்கை) படி நடப்பதாக அமீர் (தலைவர்கள்)களிடம் சொல்லிவிடுங்கள்.
16
நிஸாமுல் முல்க் போன பிறகு அல்துனியா வந்தார்.
இன்றுமொரு ஆண்பிள்ளை வந்துவிட்டார்! அல்துனியா, பெண் என்ற வகையில் நீங்களும் என்னைப் பலவீனமானவள் என்று கருதுகிறீர்களா?
நான் எப்படி விளங்கப்படுத்துவேன்? உன் மீது காதல் எனக்கு!
அல்துனியா, நீங்கள் எனது நம்பிக்கைக்குப் பாத்திரமான நண்பர். அத்தோடு எனக்கும் உங்கள் மீது காதல் உண்டு.
ஆனால், நான் ஸுல்தானா (அரசி) ஆகிய பிறகு அமீர்களின் பார்வைகளால் தடுமாறிப் போயிருக்கிறேன்.
என்னைப் பற்றி எவராவது உங்களிடம் கோள் சொன்னார்களா?
இல்லை. அது எவராலும் முடியாது. நாம் இருவரும் பால்ய கால நண்பர்கள். ஐயோ, மற்ற அமீர்களும் உங்களைப் போலிருந்தால்...!
(தொடரும்)



# மாயமாளிகை

ஸ்ரீ.கிருஷ்ணவேணி

புவனகிரி மகாராஜா புருஷோத்தமனுக்கு மூன்று புதல்விகள் இருந்தார்கள். ஒரு நாள் மூவரும் நந்தவனத்தில் விளையாடிக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது திடீரென்று மாயமாக மறைந்துவிட்டார்கள். அவர்களுடன் விளையாடிக் கொண்டிருந்த தோழிகளுக்கு இது மிகவும் அதிசயமாக இருந்தது.

அவர்கள் மன்னனிடம் வந்து விஷயத்தைச் சொன்னார்கள். உடனே அரசர் படைவீரர்களை அழைத்து நாட்டின் மூலை முடுக்குகளிலெல்லாம் தேடச் சொன்னார். ஆனால் எங்கு தேடியும் இளவரசிகளைக் காணவில்லை. உடனே அரசர் தன் படைத்தலைவர்களாகிய ராஜசிம்மனையும் நந்திவர்மனையும் அழைத்து, ''இளவரசிகள் எங்கிருந்தாலும் அவர்களைக் கண்டு பிடித்துக் கொண்டு வர வேண்டும்'' என்று சொன்னார்.

மேலும் இளவரசிகளைக் கண்டு பிடித்து விட்டால் நாட்டில் பாதியைக் கொடுத்து இரு இளவரசிகளையும் அவர்களுக்கே திருமணம் செய்து வைப்பதாகக் கூறினார்.

படைத் தலைவர்கள் இருவரும் இளவரசிகளைத் தேடிக் கிளம்பினர். ஒரு பெரிய காட்டிற்கு வந்து விட்டனர். அங்கு ஒரு பாழடைந்த மாளிகை இருப்பதைப் பார்த்து அதில் தங்கி இளைப்பாறினர். அந்த சத்திரத்தில் ஒரு மந்திரவாதி தங்கியிருந்தான். அவனுடைய ஒரே மகளும் அவனுடன்தான் தங்கியிருந்தாள்.

படைத்தலைவர்கள் வந்து மாளிகையில் அமர்ந்திருப்பதை மந்திரவாதி பார்த்து விட்டான். உடனே 'ஓம்! ஹ்ரீம்' என்று ஒரு மந்திரத்தை உச்சரித்து, கையில் ஒரு கோலை வைத்துக் கொண்டு இப்படியும் அப்படியுமாக ஆட்டினான். உடனே படைத்தலைவர்களும், வீரர்களும் உட்கார்ந்திருந்த இடத்தைச் சுற்றி பலமான இரும்புக் கம்பிகளையுடைய சிறைக் கதவுகள் தோன்றிவிட்டன.

படைத்தலைவர்களுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. தங்களைச் சுற்றி திடீரென்று இப்படி ஒரு சிறை எழும்பும் என்பதை அவர்கள் கனவிலும் கூட நினைக்கவில்லை. மன்னன், மகள்களைத் தேடிச் சென்ற படைத் தலைவர்களைக் காணவில்லையே என்று நினைத்துக் கவலை கொண்டான்.

படைவீரர்களில் ஒருவனான சந்திரன் என்பவன் ஒருநாள் அரசன் முன்வந்து தான் இளவரசிகளைத் தேடிச் செல்வதாகக் கூறினான். அரசனும் சரி என்று ஒப்புக் கொண்டான். சந்திரன் இளவரசிகளைத் தேடித் படைத் தலைவர்கள் இருக்கும் மந்திரவாதியினிடத்துக்கே வந்திவிட்டான். அப்பொழுது மந்திரவாதி மாளிகையில் இல்லை. எங்கோ வெளியில் சென்றிருந்தான். அவனது மகள்தான் இருந்தாள்.

அவனிடம் அவள் நடந்த விடயங்களை எல்லாம் சொல்லிவிட்டாள். தன் தந்தைதான் மூன்று பேர்களை அனுப்பி இளவரசிகளை மாயமாக கடத்தி வந்தார் என்றும் இப்பொழுது அவர்கள் அருகிலுள்ள கிணற்றினுள் இருக்கும் மாயமாளிகையில் வைத்திருப்பதாகவும் கூறினாள். தன் தந்தை இப்படிச் செய்வது தனக்குப் பிடிக்கவில்லை என்றும் கூறினாள்.

சந்திரன், தான் படைத் தலைவர்களை விடுவிக்க என்ன செய்யவேண்டும் என்று கேட்டான். உடனே மந்திரவாதியின் மகள், தன் தந்தை வைத்துள்ள கோலினால் ஒரு மந்திரம் போட்டால் சிறை மறைந்துவிடும் என்று கூறினாள். ஆனால், மந்திரக் கோலுக்கு எங்கே போவது? அது மந்திரவாதியிடம்தான் இருந்தது.

மந்திரவாதி மாளிகைக்குத் திரும்பி வந்தான். சந்திரன் ஓர் இடத்தில் ஒளிந்து கொண்டான். மந்திரவாதி சாப்பிட்டு விட்டு படுத்துத் தூங்க ஆரம்பித்தான். தூக்கத்தில் கூட மந்திரங்களை உச்சரித்துக் கொண்டிருந்தான். சந்திரன் மறைவிடத்திலிருந்து வெளியே வந்தான். மந்திரவாதியிடமிருந்து மெதுவாக மந்திரக் கோலை எடுத்து விட்டான். பிறகு மந்திரவாதி உச்சரிக்கும் மந்திரங்களைக் கூர்ந்து கவனித்தான். மந்திரக் கோலை எடுத்து இப்படியும் அப்படியும் அசைத்து மந்திரங்களைப் பலமாக உச்சரித்தான். உடனே படைத் தலைவர்களைச் சுற்றியிருந்த சிறை மாயமாக மறைந்தது. எல்லோரும் அங்கிருந்து வெளியேறினார்கள்.


சந்திரன் மந்திரக் கோலை தன்னோடு வைத்துக் கொண்டான். தான் இளவரசியைத் தேடிவந்த விடயத்தை படைத் தலைவர்களிடம் சொன்னான். எல்லோரும் காட்டில் வெகுதூரம் சென்றுவிட்டனர். அப்பொழுது மந்திரவாதியின் மகள் சொன்ன அந்தக் கிணறு எதிர்ப்பட்டது. அதைப்பற்றிச் சந்திரன் ராஜசிம்மனிடமும், நந்திவர்மனிடமும் எதுவும் கூறவில்லை. ''கிணற்றினுள் இறங்கிப் பார்க்கலாம்'' என்று சந்திரன் சொன்னான். கிணறு மிகவும் ஆழமாக இருந்தது. நந்திவர்மனும், ராஜ சிம்மனும் ''இளவரசிகள் கிணற்றினுள்ளே தான் ஒளிந்து கொண்டிருக்கிறார்களா?'' என்று சந்திரனைக் கேலி செய்தார்கள். ''நாங்கள் கிணற்றினுள் இறங்க முடியாது'' என்று மறுத்துவிட்டனர்.

சந்திரன், ''என்னை மட்டும் ஒரு கயிற்றில் கட்டிவிடுங்கள். பின்பு மூன்று முறை கயிற்றைப் பிடித்து இழுக்கும் போது என்னை மேலே ஏற்றிவிடுங்கள்'' என்று கூறினான். அவ்வாறே செய்வதாக இருவரும் ஒப்புக் கொண்டனர்.

(அடுத்த இதழில் முடியும்)






# பிளாஸ்டிகைக் கண்டு பிடித்த பூனை

இன்று உலகெங்கிலும் பிளாஸ்டிக் தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன. பிளாஸ்ட்டிக்கினால் செய்யப்படாத பொருட்களே இல்லை என்றளவுக்கு அவை பரவலாகி விட்டன. எமது அன்றாடப் பாவனைக்குரிய பொருட்கள் கூட பிளாஸ்டிக்கினால் ஆனவை என்பதை நீங்கள் அறிவீர்கள்.



பிளாஸ்டிக் எப்படிக் கண்டுபிடிக்கப்பட்டது என்று உங்களுக்குத் தெரியுமா? ஒரு தவறின் காரணமாகவே அது உருவானது. இந்தத் தவறைச் செய்தது ஒரு மனிதனல்ல, ஒரு பூனை!

ஒருமுறை ஒரு பூனை பால் குடித்துக் கொண்டிருந்தது. பாலோ ஓர் ஆய்வு கூடத்தில் வைக்கப்பட்டிருந்தது. அதற்கு அருகிலேயே ஒரு போத்தலில் ''போமேடைற்'' என்ற இரசாயனப் பொருள் இருந்தது. பூனை தனது காலால் அந்த போத்தலைத் தட்டி விட்டது. போத்தலில் இருந்த இரசாயனப் பொருள் பாலில் விழுந்து விட்டது. பாலின் தன்மை கெட்டு விட்டதால் பூனை அதனை விட்டுவிட்டு ஓடிவிட்டது.

இரவு முழுக்க பால் அந்நிலையிலேயே இருந்தது. காலையில், ஆய்வுகூட விஞ்ஞானி இதனைக் கண்டு பேராச்சரியத்திற்கு உள்ளானார்.

பாலும் இரசாயனப் பொருளும் கலந்து அதிசயமான ஒரு பொருள் உருவாகியிருந்தது. அது தான் உலகின் முதலாவது பிளாஸ்டிக் பொருள்.

இவ்வாறு பிளாஸ்டிக்கின் கண்டுபிடிப்புக்கு ஒரு பூனையே காரணமாக இருந்தது ஆச்சரியமாக இல்லையா!

# காசு கொடுத்து நோயை வாங்காதீர்கள்!

கொழும்பில் புறக்கோட்டைப் பகுதிகளில் வண்ண வண்ணப் பழங்களை நீங்கள் காண்பீர்கள். அப்பிள், முந்திரிகை, தோடை என்பன பல நிறங்களில் கண்ணைப் பறித்துக் கொண்டிருக்கும். இப் பழங்கள் யாவும் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டவை என்பதை நீங்கள் அறிவீர்கள் அல்லவா?

கடும் கோடையிலும், மழைக்காலங்களிலும் இப்பழங்கள் ஏன் அழுகாமல் இருக்கின்றன என்பதைப் பற்றி நீங்கள் எப்போதாவது யோசித்துப் . பார்த்ததுண்டா? வெளிநாடுகளில் இருந்து பழங்கள் ஏற்றுமதி செய்யப்படுவதற்கு முன்பே அவற்றை பூஞ்சனக் கொல்லி இரசாயனப் பொருட்களில் பதப்படுத்துவர். அதனால் அவை சொற்ப காலத்திற்கு கெடாமல் இருக்கும். இந்த இரசாயனப் பொருட்கள், புற்று நோயை ஏற்படுத்தும் எனக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

நம் நாட்டை அடைந்த பின்னர், அப்பழங்கள் மேலும் நீண்ட காலம் இருப்பதற்காக இரசாயன மருந்துகள் பயன்படுத்தப்படுவதாக மாநகர சுகாதாரப் பிரிவினர் தெரிவிக்கின்றனர்.

இப்பழங்களுக்குக் கல்சியம் காபனேற் என்ற இரசாயனப் பொருள் ஊசி மூலம் ஏற்றப்படுவதாக அறிய வருகிறது. இதனால், புற்று நோய், சுவாசப்பைக் கோளாறு, மற்றும் சிறுநீரகப் பாதிப்புக்கள் ஏற்படக் கூடுமென சுகாதாரப் பரிசோதகர்கள் தெரிவிக்கின்றனர். இப்பழங்கள் குறித்து, பெற்றோரும் பிள்ளைகளும் மிக எச்சரிக்கையாகவும் அவதானமாகவும் இருக்கும்படி கேட்டுக் கொள்ளப் படுகின்றனர்.



இந்த இரசாயனப் பொருளின் பாவனை காரணமாக பழங்கள், புதியவை போல் தோற்றமளிக்கின்றன. இதனைக் கண்டு ஏமாறும் மக்கள் இவற்றை தம் பிள்ளைகளுக்காக வாங்கிச் செல்கின்றனர். இன்று புறக்கோட்டையில் மட்டுமல்ல கிராமங்களையும் இப்பழங்கள் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கின்றன. உள்நாட்டில் விளைகின்ற புதிய பழங்களை மக்கள் புறக்கணித்து விட்டு ஆவலோடு அவற்றை வாங்கி சுவைக்கின்றனர். கடைசியில் அவர்களுடைய கதை காசு கொடுத்து நோயை வாங்கியதாகவே முடிகிறது. *

- ஸ்ரீமாரன் -




நாட்டியக் கலாமந்திரின் முப்பத்து நான்காவது வருட நிறைவையொட்டி 6ஆம் திகதி சனிக்கிழமை ஐந்து மணிக்கு பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் செஞ்சொற் செல்வர் ஸ்ரீ.எஸ்.விஸ்வநாதன் தலைமையில் நாட்டிய அரங்க நிகழ்வு இடம்பெறவுள்ளது காலாசூரி வாசுகி ஜெகதீஸ்வரனின் நெறியாள்கையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் நாட்டியகலா மந்திரின் அனைத்து கனிஷ்ட, சிரேஷ்ட கலைஞர்கள் பங்குபற்றுகின்றனர். விசேட அம்சமாக கிருஷ்ணா எனப்படும் கிருஷ்ண பகவானின் வாழ்க்கையைச் சித்தரிக்கும் நடன நாடகம் இடம்பெறும். இந்த நிகழ்வில் வைத்திய ஆலோசகர் மீனா குமாரதாஸ், நாடாளுமன்ற உறுப்பினர் துனேஷ் கங்கந்தி மற்றும் கிறீன் லங்கா கப்பல் நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் குஷானி கங்காந்த் ஆகியோர் கௌரவ அதிதிகளாகக் கலந்துகொள்கின்றனர்.

# ஒபாமா பரபரப்பில் இந்தியா!



கொமன்வெல்த் போட்டிகளுக்குப் பின்னர், இப்போது அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவை வரவேற்கும் பரபரப்பில் இருக்கிறது இந்தியா. 6ஆம் திகதி இந்தியா வரும் ஒபாமா முதலில் செல்லவிருப்பது மும்பைக்கு. மும்பையில் தொழிலதிபர்கள் கூட்டத்தில் பங்கேற்றுவிட்டு, 2008இல் தீவிரவாதிகளின் தாக்குதலுக்கு உள்ளான இடங்களையும் பார்த்த பின்னரே டில்லிக்குச் செல்கிறார் ஒபாமா.

டில்லி சர்தார் பட்டேல் மார்க்கில் உள்ள இரு ஐந்து நட்சத்திர ஹோட்டல்களும் ஒபாமா மற்றும் அவரது குழுவுக்காக இப்போதே ஒதுக்கப்பட்டுவிட்டன. இதில், ஒபாமா தங்கப்போவது மௌர்யா ஷெராட்டன் ஹோட்டலில். இந்தக் ஹோட்டலில் உள்ள மொத்த அறைகளும் அமெரிக்கப் பாதுகாப்புப் படையின் கண்காணிப்பின் கீழ் வந்துவிட்டன. அந்த நாட்டின் எப்.பி.ஐ. மற்றும் சி.ஐ.ஏ. அதிகாரிகள் டில்லிக்கும் மும்பைக்கும் ஏற்கனவே வந்துவிட்டனர். ஒபாமா தங்கும் 7, 8ஆம் திகதிகளில் இந்த ஹோட்டலுக்குள் நுழைய வேறு விருந்தினர்களுக்கோ, உள்ளூர் அதிகாரிகளுக்கோ, டில்லிப் பொலிஸாருக்கோ அனுமதி இல்லை.

ஒபாமாவின் இந்திய விஜயத்துக்காக 18 விமானங்கள், ஹெலிக்கொப்டர்கள், 70இக்கும் மேற்பட்ட கார்கள் என எல்லாம் அமெரிக்காவில் இருந்தே இறக்குமதி செய்யப்பட்டுவிட்டன. இவை, மும்பையிலும் டில்லியிலும் தயாராக இருக்கின்றன. ஒபாமா இந்தியாவில் இருக்கும் நாட்களில் பாதுகாப்பு வசதிகள் மற்றும் தகவல் தொடர்புகளுக்கான பிரத்தியேக தகவல் செய்மதி ஒன்றும் வோஷிங்டனில் இருந்து விண்ணில் ஏவப்பட்டுள்ளது.


இப்படித் தூள் பறக்கும் ஒபாமாவின் விஜயம் குறித்து, டில்லியில் இந்திய அரசதரப்புத் தகவல் தெரிவிக்கையில், "இந்திய - அமெரிக்க வர்த்தக சபை ஏற்பாடு செய்யும் கூட்டத்தில் ஒபாமா பங்கேற்கிறார். அமெரிக்கத் தொழிலதிபர்களைத் தன்னோடு அழைத்துவரும் ஒபாமா, இந்தியாவில் தொழில் தொடங்குவதற்கு முதலீடு செய்வதில் இருக்கும் வழிமுறைகளைப் பின்பற்றி, அந்தந்தத் துறைகளில் அமெரிக்கத் தொழிலதிபர்களை ஈடுபடுத்தத் திட்டமிட்டுள்ளார். அமெரிக்கத் தயாரிப்புகளை இந்தியாவில் இறக்குமதி செய்வதற்கான முயற்சிகளை மேற்கொள்வதும் அவரது பயணத்தின் முக்கிய நோக்கம்.

இதே மாதிரி, இந்தியத் தொழிலதிபர்களும் குறிப்பாக ஐ.டி. எனப்படும் தகவல் தொழில்நுட்ப நிறுவனத்தினரும், ஒபாமா விஜயத்தைப் பயன்படுத்தி, பலனடையும் முயற்சியில் உள்ளனர். ஐ.டி. துறையில் இந்தியர்கள் பெரும்பாலும் அமெரிக்காவில் பணியாற்றி வருகின்றனர். ஆனால், அமெரிக்கர்களுக்கு வேலைவாய்ப்புப் பறிபோகிறது என்பதற்காக வெளிநாட்டவர்களுக்குத் வழங்கப்படும் வேலைகளை நிறுத்திவிட அமெரிக்கா நினைக்கிறது. இதனால், பெருமளவில் இந்தியர்கள்தான் பாதிப்புக்கு உள்ளாகின்றனர். இது குறித்த சில முக்கியமான விவரங்களை இந்தியத் தொழிலதிபர்கள் அமெரிக்க ஜனாதிபதிக்குத் தெளிவுபடுத்தும் திட்டத்தோடு இருக்கின்றனர். இது தவிர அரசரீதியில், இந்தியாவுக்குப் பாதுகாப்புத் தளபாடங்களை விநியோகம் செய்வது மற்றும் ரயில்வே இன்ஜின் தயாரிப்புத் தொழிற்சாலைகள் போன்றவற்றில் புதிய ஒப்பந்தங்களை மேற்கொள்வது போன்ற விடயங்களும் ஆராயப்படும்" - என்றது.

ஒபாமாவின் டில்லி நிகழ்ச்சிகளில் முக்கியமானது, இந்திய நாடாளுமன்றக் கூட்டுக் கூட்டத்தில் உரையாற்றவிருப்பது. இதையொட்டி, நாடாளுமன்றத்தின் மைய அவையில் ஏற்பாடுகள் தயாராகி வருகின்றன. ஒபாமா சுமார் 20 நிமிடங்கள் நாடாளுமன்றத்தில் பேசுவார். விருந்தினர்களுக்கான தங்கப் புத்தகத்தில் கையெழுத்திடுவார். பின்னர், எம்.பிக்களுடன் கை குலுக்குவார். இது அதிகபட்சமாக ஒரு மணிநேர நிகழ்ச்சி என்றாலும், அவரது வருகையையொட்டிப் பல கோடிகள் செலவு செய்யப்பட்டுள்ளன. புதிதாக வண்ணம் பூசி, மேசை - கதிரைகளை சரி செய்து, குண்டுதுளைக்காத கண்ணாடிக் கூண்டு ஏற்பாடுகள் எல்லாம் தடல்புடலாக நடந்துவருகின்றன.

பில் கிளின்டன் 2000ஆம் ஆண்டில் இந்திய நாடாளுமன்றக் கூட்டுக் கூட்டத்தில் உரையாற்றினார். பின்னர் 2006இல் ஜோர்ஜ் புஷ் வந்தபோது, அவரை நாடாளுமன்றத்தில் பேசவைக்கும் முயற்சியில் அரசு ஈடுபட்டது. ஆனால்,இடதுசாரிகளின் எதிர்ப்பால் அது கைவிடப்பட்டது. இந்த முறை ஒபாமாவின் உரையின்போது, இடதுசாரிகளும் பங்கேற்கின்றனர். ஒபாமா தனது வருகையின்போது வேறு இடங்களுக்குச் செல்லமாட்டார். வெளிநாட்டுத் தலைவர்கள் தவறாமல் செல்லும் தாஜ்மஹாலைக்கூட அவர் பார்க்கப்போவதில்லை.ஒபாமாவின் இந்த இந்திய விஜயத்தை வைத்து, பாகிஸ்தான் மற்றும் காஷ்மீர் பிரிவினைவாதிகள் சில எதிர்பார்ப்புகளில் இருந்தனர். ஒபாமாவின் ஆதரவு தங்களுக்குக் கிடைக்கும் என்று நம்பினர். ஆனால், இந்த விவகாரங்கள் பற்றி எந்தப் பேச்சும் நடைபெறாது என்பதே இப்போதைய தகவல்.

புபே செட்
வீட்டுக்கும்
மற்றும்
ஹோட்டலுக்கு
ரூபா 3950/-யிலுந்து



டயிடஸ் ஸ்டோஸ்
லிபர்டி பிளாசா 2574446
புறக்கோட்டை 2430422

TAG DER OFFENEN TÜR

Möbel Ferrari

MIT VIELEN SPEZIAL RABATTE!

Samstag 30 Oktober

Sonntag 31 Oktober

www.moebel-ferrari.ch

HINWIL Wasseristrasse 28
Tel. 044 931 20 40

Täglich offen von 9.00 bis 20.00 Uhr

Samstag: 09:00-17:00 Uhr
Sonntag: 11:00-17:00 Uhr

Gartis und Getänke für die ganze Familie!!

Direkt-Kredit – 6 Monate ohne Zins

இப்பத்திரிகை கொழும்பு - 06 வெள்ளவத்தை, பெரக்கும்பா பிளேஸ், 1/5 ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட்மார்க் என்டர் பிறைசஸ் ஸ்தாபனத்தினால் 2010, நவம்பர் 07ஆம் திகதி வெளியிடப்பட்டது